# கல்கி

இலவச இணைப்பைக்
கேட்டு வாங்குங்கள்!

KALKI 9.7.2000 ரூ. 5.00





# இப்பொழுது இமாமி நேச்சுரலி ஃபேர் ஹெர்பல் ஃபேர்னஸ் க்ரீம் ஸ்பெயின் நாட்டு குங்குமப்பூவின் அற்புதத்துடன் வளமாக்கப்பட்டுள்ளது.

இமாமி நேச்சுரலி ஃபேர் ஹெர்பல் ஃபேர்னஸ் க்ரீம். இது, இப்பொழுது பரபரப்புமிக்க ஒரு திருப்புமுனை ஏற்படுத்தும் ஃபார்முலாவால், அதாவது, உலகிலேயே அதிசிறந்த மிக அரிதான ஸ்பெயின் நாட்டு குங்குமப்பூவினால் வளமாக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயின் நாட்டு குங்குமப்பூ உலகிலேயே பரிசுத்தமான, மிக அரிதான இந்த குங்குமப்பூ, சிகப்பழகை அதிகரிக்கும் அற்புதமான நற்குணங்களுக்காக சிறந்த பாராட்டை பெற்றுள்ளது.

நேச்சுரலி ஃபேரில் உள்ள புதுக்கலவையான ஸ்பெயின் நாட்டு குங்குமப்பூதான் இன்றைய தேதியில் ஆற்றல்மிக்கதாகவும், பாதுகாப்பானதாகவும் விளங்கும் சிகப்பழகிற்கான சிறந்த உட்பொருள் என்று ஆராய்ச்சியில் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், மேனியில் பக்க விளைவுகள் எதுவும் ஏற்படுத்தாமல், மேனி கன்றி சிவத்தல், வெள்ளை தழும்புகள், சுருக்கங்கள் விழுதல் போன்று எதுவுமே இல்லாமல் நீடித்து நிலைத்திருக்கும் சிகப்பழகை உங்களுக்குத் தருகிறது.

**கெமிக்கல்களுக்கு எதிரான நேச்சுரல்**

கடுமையான ஒயிட்னிங் ஏஜென்ட்ஸ் அடங்கியுள்ள கெமிக்கல் ஃபேர்னஸ் க்ரீமை தொடர்ந்து பயன்படுத்தினால், உங்களுக்கு தற்காலிக சிகப்பழகு மட்டுமே தரும். அதோடு, உங்கள் மேனியின் இயற்கையான ஈரப்பதத்தை காணாமல் போகச் செய்து விடும். எனவே, மேனி பொலிவிழந்து, நீர்வற்றிழந்து காணப்படும்.

நேச்சுரலி ஃபேரில் உள்ள மூலிகை அற்புதங்களான சந்தனம், அலோ வெரா மற்றும் விலைமதிப்பற்ற ஸ்பெயின் நாட்டு குங்குமப்பூ போன்றவை உங்களுக்கு சிகப்பழகு மட்டும் தருவதில்லை. மேனிக்கு ஈரப்பதம் அளித்து, போஷாக்கு தருவதுடன் புத்துயிரூட்டி உங்கள் மேனியை கூர்விடும் ஜொலிப்புடன் திகழச் செய்கிறது.

நேச்சுரலி ஃபேருக்கு மாறுங்கள். மிக மிக இயற்கையான தோற்றத்தை பெறுங்கள். பிறந்ததிலிருந்தே நீங்கள் பெற்றிருப்பதைப் போல மற்றவர் நினைப்பார்கள்.




- Dr. ...

**இயற்கையான சிகப்பழகு வெறும் 4 வாரங்களில்.**




**இமாமி நேச்சுரலி ஃபேர்**
**ஹெர்பல் ஃபேர்னஸ் க்ரீம்**




## கடுமையான கெமிக்கல்ஸ் இல்லை. 100% ஹெர்பல்.

ஒவ்வொரு 50 மி.லி. பேக்குடனும் ரூ. 19/- மதிப்புள்ள இமாமி நேச்சுரலி ஃபேர் ஃபேர்னஸ் டாங்க் இலவசம். ஒவ்வொரு 15 மி.லி. மற்றும் 25 மி.லி. பேக்கிலும் 50% அதிகம்.


இச்சலுகை சரக்கு உள்ள வரையே. இச்சலுகை இல்லாத சரக்கும் கிடைக்கும்.

ENTERPRISE NEXUS 3493 TM

மாது தம்பதிகளுக்குப் பல வருடங்களாகக் குழந்தை இல்லை. இதைக் கேள்விப்பட்டு கேரளத்திலிருந்து இவர்களுக்கு உதவ வருகிறார், ஆலம்புழை அச்சப்பன். வரும்போது கையில் ஒரு வாளியுடன் வருகிறார். அதில் குழந்தைப்பேறு உண்டாக்கும் சிசுபால சூரணலேகியம். அதைச் சாப்பிடும் மாதுவின் மனைவிக்கு ஒரு குழந்தை பிறக்கிறது. பிறந்த கொஞ்ச நேரத்திலேயே கிடுகிடுவென வளரத் தொடங்கி, ஆறாம் நாள் எண்பத்தைந்து கிலோ மனிதனாக வளர்ந்துவிட, டாக்டர் உட்பட யாராலும் நம்ப முடியவில்லை. ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்குக் 'குழந்தை'யை அழைத்து வரும்போது டாக்டர் சொல்கிறார்: "பையனை நல்லபடியா வளங்க."

''இனிமே வளர்க்க என்ன டாக்டர் இருக்கு?'' என்கிறார்கள் பெற்றோர்கள்.

கிரேசிமோகனின் சமீபத்திய 'ஜுராசிக் பேபி' நாடகத்தில் இந்தக் காட்சியின்போது அரங்கமே கைதட்டலில் அதிர்கிறது. ஐந்து வயதுக் குழந்தைக்கு உள்ள மூளை வளர்ச்சியே கொண்ட ஜுராசிக் பேபி– மாதுவின் மைத்துனர் சீனு போலவே இருக்க, குழந்தைக்கு 'சீனா' என பெயர் வைத்துக் கூப்பிடுகிறார்கள். சீனா தனது பெற்றோர்களை 'அம்மா, அப்பா' என்று கூப்பிடுவது அவர்களை சங்கடப்படுத்த, மைத்துனன் உருவில் இருப்பதால் மற்றவர்கள் முன்பு அம்மாவை அக்கா என்றும், அப்பாவை மாப்பிள்ளை என்றும் கூப்பிடக் கட்டளை இடுகிறார்கள். குழந்தைக்கு வடக்கயிறு கொண்டு கட்டிய தொட்டில். அதில் படுத்துக் கொள்ளும் 'சீனா'வை ஏலேலோ ஐலசா–என்று கஷ்டப்பட்டு இழுத்து தொட்டிலை ஆட்டிவிடுகிறார் அம்மா! அப்பா பையனுக்கு ஷேவிங் செய்து விடு



# யோவ்! எங்கய்யா அந்த சீனு?



கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



**"என் கல்யாணம் உறுதியாயிடும்னு நினைக்கிறேன்."**

**"எப்படிச் சொல்றே?"**

**"பையனின் அம்மா என்னைப் பார்த்து எப்போ சண்டையை வச்சுக்கலாம்னு கேட்டாங்க!"**

**- எஸ். மோகன்**

கிறார், அவனுக்குக் கரடி கதை சொல்லிய படி!

பிறகு பல சிக்கல்கள், லேகிய மாறாட்டம், தகிடுதத்தங்கள் என வளர்ந்து, ஒருவழியாக தமாஷ் சுபம்!

மூளையைக் கழற்றி வைத்துவிட்டு, சுகமாக ரசிக்க முடிகிற இந்த நாடகத்திற்கான கரு(!) எப்படித் தோன்றியது என்று கிரேசியிடம் கேட்டோம்.

"அமெரிக்காவில் மாது +2 நாடகம் போட்டோம். அதில் மாதுவின் மனைவி கர்ப்பமாக இருப்பதுபோல் ஒரு காட்சி... இந்த செய்தியை மாதுவிடம் சொல்லும் சீனு 'நீ அப்பாவாகப் போறே' என்ற வசனத்திற்கு பதிலாக 'நீ எனக்கு அப்பாவாகப் போறே' எனத் தவறுதலாகப் பேசிவிட்டார். உடனே சீனுவை, மாதுவிற்குப் பையனாக்கினால் என்ன என்று தோன்றியது. உடன் அமெரிக்காவிலிருந்து ஊர் திரும்பும் முன் முழு நாடகத்தையும் முடித்து விட்டேன்!" என்கிறார்.

ஒவ்வொரு முறை நாடகம் போடும் போதும் நிஜவாழ்க்கையில் நிறைய காமெடிகளைச் சந்திக்க நேர்ந்து விடுகிறது என்றவர், சில சம்பவங்களை நினைவு கூர்ந்தார்.

"கோவையில் 'மாது +2' நாடகம் போட ஒப்புக் கொண்டிருந்தோம். ஆனால் ரயிலில் ஒருவருக்குத்தான் இடம் கிடைத்தது. சீனுவை மட்டும் ரயிலில் அனுப்பிவிட்டு நாங்கள் பஸ்ஸில் புறப்பட்டோம். மறுநாள் ஐந்து மணியாகியும் சீனு வந்து சேரவில்லை. நாடகம் தொடங்க ஒரு மணி நேரம்தான் இருந்தது. தண்டவாளம் உடைந்து இடையில் சரி செய்து கொண்டிருக்கிறார்கள்; விரைவில் வந்து வந்துவிடும் என்றார்கள்...

சீனு வரும் வரை என்ன செய்வது என்று யோசித்து, சீனுவின் தம்பி வேலு என்று ஒரு புது கேரக்டரை வைத்து முதல் இரண்டு காட்சிக்கு சமாளித்தோம். நாடகம் தொடங்கி அரை மணியாகிவிட்டது. அப்படியும் சீனு வரவில்லை. அடுத்து வேலுவின் தம்பி ராமு என்று கேரக்டர். இப்படிப் பல புதிய கேரக்டர்களைப் போட்டு நாடகம் முடியும் தருவாயில் இருந்தது.

கடைசிக் காட்சி. 'யோவ், எங்கய்யா அந்த சீனு' என்று ரசிகர்கள் கத்த, டாக்ஸி பிடித்து வந்து சேர்ந்த சீனு அரங்கத்தின் உள்ளே புகுந்து, "இதோ வந்துகிட்டே இருக்கேன்" என்று ரசிகர்கள் பக்கமிருந்து கத்த, நவீன நாடகம் மாதிரி ஆயிடுச்சு! அப்புறம் மறுபடியும் நாலு சீன்ஸ் கூடுதலாகப் போட்டு அதை காமெடி நாடகமா மாத்தினோம்!

"இன்னொரு சம்பவம் இதைவிட காமெடியா இருக்கும். மேரேஜ் மேட் இன் சலூன்னு ஒரு நாடகம். அன்றைக்கு ஞாயிற்றுக் கிழமை. அரங்கம் நிரம்பி வழியுது. ஹீரோயினோட மாமியாருக்கு உடம்பு சரியில்லாமல் போயி அந்தப் பொண்ணு வர முடியாத சூழ்நிலைன்னு போன்தான் வந்தது. கதாநாயகி வரலே. தூக்கிவாரிப் போட்டுடுச்சி... என்ன செய்யறதுன்னு யோசிச்சபோது, ரெகுலராக என் நாடகத்தைப் பார்க்கிற என் நண்பனும், அவன் மனைவியும் என்ன விஷயம்னு கேட்டாங்க. சொன்னேன்.

"உடனே நண்பனோட மனைவி, நான் நடிக்கறேன்னு வந்து மேடையில ஏறிட்டாங்க! கதைப்படி அவங்க எனக்கு மனைவி. நான் ஆணாதிக்கம் செலுத்தற ஒரு ஆள். அடிக்கொரு தரம் வாடி, போடி, அவளே, இவளேன்னு திட்டணும்... என்னால முடியலே... அதனால மரியாதையா வாங்க போங்கன்னு கூப்பிட்டேன். நாடகத்தோட கான்செப்டே மாறிப் போயிட்டது. அப்புறம் ஹீரோயின் மாறின சம்பவத்தை வெச்சே அடுத்த நாடகத்தைப் போட்டோம்!"

**— லியோ**

படங்கள்: **வெங்கடேஷ்**

பாதுகாப்பான முதலீடு - நிலையான வருமானம்

# பவர்ஃபைனான்ஸ்

## தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

### முதலீடுகளுக்கு வழங்கப்படும் வட்டி விகிதங்கள்

| காலம் | முறையான வட்டி வழங்கும் திட்டம் (RIPS) | | | திரள் வட்டி வழங்கும் திட்டம் (CIPS - I) | | |
|---|---|---|---|---|---|---|
| | வழங்கப்பட உள்ள ஆண்டு வட்டி விகிதம் | | அதிகபட்ச முதலீடு (வரிப்பிடித்தம் இல்லாமல்) | முதிர்வுத் தொகை ரூ. 5,000/-த்திற்கு | ஒரு ஆண்டிற்கு பெறக்கூடிய வருவாய் விகிதம் | அதிகபட்ச முதலீடு (வரிப்பிடித்தம் இல்லாமல்) |
| | மாதத்திற்கு | காலாண்டிற்கு | | | | |
| 12 மாதங்கள் | – | 10.59% | ரூ. 47,000/- | ரூ. 5,551/- | 11.02% | ரூ. 45,000/- |
| 24 மாதங்கள் | – | 11.10% | ரூ. 45,000/- | ரூ. 6,224/- | 12.24% | ரூ. 38,000/- |
| 36 மாதங்கள் | 12.00% | 12.12% | ரூ. 41,000/- | ரூ. 7,155/- | 14.37% | ரூ. 31,000/- |
| 48 மாதங்கள் | 12.00% | 12.12% | ரூ. 41,000/- | ரூ. 8,061/- | 15.31% | ரூ. 27,000/- |
| 60 மாதங்கள் | 12.00% | 12.12% | ரூ. 41,000/- | ரூ. 9,085/- | 16.34% | ரூ. 24,000/- |

### திரள் வட்டி வழங்கும் திட்டம் (CIPS - II)

| காலம் | குறைந்த அளவு டெபாசிட் ரூ. | முதிர்வுத் தொகை ரூ. | ஒரு ஆண்டிற்கு பெறக்கூடிய வட்டி விகிதம் | அதிகபட்ச முதலீடு வரிப்பிடித்தம் இல்லாமல் ரூ. |
|---|---|---|---|---|
| 60 மாதங்கள் | 550/- | 1,000/- | 16.34% | 23,650/- |

**தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)**

(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண் 84, டி.டி.கே. சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.

தொலைபேசி : 4997689, 4995648. ஃபேக்ஸ் : 044-4982694 மின் அஞ்சல் : powerfin@md3.vsnl.net.in

Visit us at : www.tnpowerfinance.com / www.tninfrafinance.com

[illegible]

"Also available on the Internet" www.tn.gov.in / www.chennaionline.com / www.aaraamthinai.com / www.southindia.com

# காமெடிக்குக் கஷ்டகாலம்!

"எனது குடும்பத்துக்கும் சினிமாவுக்கும் துளி கூடத் தொடர்பு கிடையாது. எட்டாம் வகுப்பு படிக்கிறபோது, எம்.ஜி. ஆர். நடித்த 'அன்பே வா' படம் பார்த்தேன். ஒரு நடிகையாவதுதான் லட்சியம் என்று அன்றைக்கே முடிவு செய்து விட்டேன்" என்கிறார் கோவை சரளா. மனோரமாவுக்குப் பிறகு நகைச்சுவை நடிகையாகவே தொடர்ந்திருக்கும் இந்த கொங்கு நாட்டுக் குமரியை தமாஷ் ஸ்பெஷலுக்காகச் சந்தித்தோம்:

• நடிகையென்றால், ஹீரோயின் ஆக வேண்டும் என்றுதான் முதலில் நினைத்தீர்களா?

இல்லவே இல்லை.... எல்லோரையும் போல நான் அந்தத் தவறைச் செய்ய விரும்பவில்லை. நடித்தால் ஹீரோயினாகத்தான் நடிப்பேன் என்று நான் சொல்லியிருந்தால் கோவை சரளா இன்று பேட்டி கொடுக்க முடியாமல் போயிருக்கும்.

• மனோரமாவுக்குப் பிறகு நீங்கள் வந்தீர்கள். ஆனால் இன்று வேறு நகைச்சுவை நடிகைகள் யாருமே இல்லையே?

மனோரமா ஆச்சிக்குப் போட்டியாக யாரும் வர முடியாது. இப்போது பிரச்னை அதுவல்ல. நகைச்சுவை நடிகைகள் ஏன் குறைவாக இருக்கிறார்கள் என்பதுதான். அதற்கு இரண்டே காரணம்தான் இருக்கிறது. இப்போது யாரும் நகைச்சுவையை அதிகம் பயன்படுத்துவது இல்லை. அந்தக் காலத்தில் காமெடிக்கு என்றே தனி எழுத்தாளர், நடிகர், நடிகையர் இருந்தார்கள். ஆனால் இன்று ஹீரோவும்– ஹீரோயினுமே காமெடி செய்கிறார்கள். கதையோடு ஒட்டி வருகிற காமெடிக்குத்தான் இப்போது முக்கியத்துவம் தருகிறார்கள். அதுவும் கூட மிகச் சொற்பம்தான்.

மற்றொன்று, ஒரு நல்ல நகைச்சுவை நடிகையாகப் பெயர் வாங்க முடியும் என்று யாரும் நம்புவதில்லை. நல்ல கேரக்டர் ரோல்களில் ஒரு நிரந்தரமான இடத்தைப் பிடிக்க முயற்சிப்பதில்லை. கதாநாயகியாவதுதான் லட்சியம் என்று அடம் பிடிக்கிறார்கள்.

அழகாக இருப்பவர்கள் நகைச்சுவை நடிகையாக முடியாது என்று இங்கே எந்த சட்டமும் இல்லை. மனோரமா ஆச்சிகூட பல படங்களில் ஹீரோயினாக நடித்து, பிறகு நகைச்சுவைக்கு மாறியவர்தான். அப்போது சச்சு போன்ற அழகான தோற்றமுடையவர்கள் எல்லாம் நகைச்சுவை நடிப்பை ஒரு கேரியராகவே தேர்வு செய்து கொள்ள வில்லையா?

• இன்று நகைச்சுவை நடிகைகள் என்றாலே வலியப் போய் 'ஜொள்' வடிப்பவர், வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்ப்பவர் என்ற நிலைதானே இருக்கிறது?

உண்மையில் இது காமெடிக்கு கஷ்டகாலம்தான். என்னைப் பொறுத்தவரை, இரட்டை அர்த்த வசனங்கள் பேசுவதையெல்லாம் நான் ஆரம்பம் முதலே மறுத்து விட்டேன். நடைமுறை வாழ்க்கையில் இருப்பது

போல ரொமான்ஸ் இருந்தால், அதை மட்டுமே ஏற்று நடிக்கிறேன். அதில் கொஞ்சம் 'டோஸேஜ்' அதிகம் இருக்கும். அதற்காக விரசமாகப் போய்விடுவதில்லை. நான் கத்திக் கத்திப் பேசும் இயல்புடையவள். அதனால் நான் வாய்க்கு வந்தபடி திட்டுவது போல நீங்கள் நினைத்திருக்கலாம். காமெடி நடிகர்கள் விரசமாகப் பேசுவது பற்றி நான் எந்தக் கருத்தும் கூற விரும்பவில்லை.

* சினிமாவில் நீங்கள் இந்த நிலையை எட்டுவதற்கு அதிகம் போராட வேண்டி இருந்ததா?

இல்லை. நான் ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். வறுமையைப் போக்கிக் கொள்வதற்காக சினிமாவில் நடிக்க வரவில்லை. சினிமாவை ஒரு பைத்தியம் போல நேசித்தேன். +2 முடித்து, டைப்ரைட்டிங் ஹையர் முடித்ததும், நான் ஒரு வேலைக்குப் போக வேண்டும் என்று பெற்றோர் விரும்பினார்கள். நான் சினிமாவில் நடிக்கப் போகிறேன் என்றேன். அப்பாவும், அம்மாவும் மாற்றி மாற்றி அடித்து என்னை ஒரு வழி பண்ணிவிட்டார்கள். எனது பிடிவாதத்தைப் பற்றி அவர்களுக்கு நன்கு தெரியும். வேறு வழியின்றி அப்பா, அம்மா சகிதம் தேனாம்பேட்டையில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துத் தங்கிக் கொண்டோம். டைரக்டர் பாக்யராஜ்தான் 'முந்தானை முடிச்சு' படத்தில் எனக்கு முதல் வாய்ப்பைக் கொடுத்தார். அந்தப் படத்தில் பாப்புலரான 'முருங்கைக்காய்' காமெடியைப் போல் அதில் நடித்த எனக்கும் பெயர் கிடைத்தது.

* சிறுவயது முதலே உங்களுக்கு நகைச்சுவை உணர்வு உண்டா?

எனக்கும் அதற்கும் சம்பந்தமே கிடையாது. யாரிடமும் அதிகம் பேச மாட்டேன். அதற்காக உம்மணா மூஞ்சியாகவும் இருக்க மாட்டேன். எப்படி







இத்தனை நகைச்சுவை உணர்வோடு நடிக்கிறேன் என்று எனக்கே தெரியவில்லை. சினிமாவில் ஏதாவது ஒரு கேரக்டரில் நடிக்க வேண்டும் என்று வந்தேன். என்னை ஒரு காமெடி நடிகையாக, குணசித்திர நடிகையாக ஆக்கியிருக்கிறார்கள். நகைச்சுவைதான் என்று இல்லை. ஆபாசம் இல்லாத எந்தப் பாத்திரத்திலும் நான் நடிக்கத் தயாராக இருக்கிறேன்.

• எஸ்.எஸ். சந்திரன், வெண்ணிற ஆடைமூர்த்தி போன்ற சீனியர் நடிகர்களுக்கும் ஜோடியாக நடிக்கிறீர்கள். இப்போது வடிவேலு, செந்தில் போன்றவர்களுக்கும் ஜோடியாக நடிக்கிறீர்கள்... இது எப்படி?

இமேஜ் பற்றியெல்லாம் நான் கவலைப்படுவது இல்லை. எந்தப் பாத்திரமாக இருந்தாலும் அதில் பெயர் வாங்க முடியுமா என்று பார்க்கிறேன். எனது இரண்டாவது படமான 'சின்ன வீடு' படத்தில் அறுபது வயதுக் கிழவியாக நடித்தேன். அந்தப் படத்தில் எனக்குக் கிடைத்த ஊதியத்தை விட, டைரக்டரும், ரசிகர்களும் பாராட்டியது என்னை உற்சாகப்படுத்தியது. குறிப்பாக மூத்த கலைஞர்களோடு நடிப்பது ஒரு நல்ல வாய்ப்பு. அவர்களது பல வருட அனுபவத்திலிருந்து உருப்படியாகப் பலவற்றைக் கற்றுக் கொள்ள முடியும்.

• கமலோடு நடித்த அனுபவம்?

நான் மதிக்கிற நல்ல மனிதர். அற்புதமான கலைஞர். சதிலீலாவதி படத்தில் அவருக்கு இணையாக நடித்தது ஒரு திருப்புமுனை என்றுதான் சொல்ல வேண்டும். எனது நடிப்பிற்கு ஸ்கோப் உள்ள எல்லா பாத்திரங்களுமே எனக்கு மறக்க முடியாத அனுபவங்கள்தான். குறிப்பாக வி.சேகர் இயக்கிய பல படங்கள்.

• இப்போதெல்லாம் நடிகர் வடிவேலுவை ஒவ்வொரு படத்திலும் அடித்து நொறுக்குகிறீர்களே, கவுண்டமணி–செந்தில் ஜோடிக்குப் போட்டியா?

இது மிகவும் அநியாயம். நான் அவரை திட்டம் போட்டு அடிப்பது போலல்லவா சொல்கிறீர்கள்? டைரக்டரின் ஸ்கிரிப்டிற்குத் தகுந்தாற்போல்தான் நாங்கள் நடிக்கிறோம். ஒருகால் நான் வடிவேலுவை அடிப்பதை ரசிகர்கள் விரும்புகிறார்களோ என்னவோ. அதற்காக நான் தொடர்ந்து அவரை அடித்துக் கொண்டே இருந்தால் அலுப்புத் தட்டிவிடும். இனிவரும் படங்களில் அப்படி இருக்காது.

• பெண்களைக் கீழ்த்தரமாக சித்திரிப்பதில் சினிமாவுக்குப் பெரிய பங்கு இருக்கிறதே...

கடுமையாக எதிர்க்கிறேன். இந்த நிலை மாற வேண்டும். அதற்குப் பெண்கள் இயக்குனர்களாகவும், தயாரிப்பாளர்களாகவும் வரவேண்டும். சினிமா முழுக்க ஆண்களின் கையில் இருக்கிறது. அந்த நிலை மாறவேண்டும். அதுவரை இதே ஆபத்து நீடிக்கலாம். அல்லது புதிதாகப் படமெடுக்க வருபவர்கள், கதைகளை நம்பிப் படமெடுக்க வேண்டும். இதுதான் ஒரே வழி!

• ஏன் திருமணத்தைப் பற்றி யோசிக்கவில்லை?

அதற்கு நேரமே இல்லை. இத்துறையில் எப்போது என்ன நடக்கும் என்று எனக்கே தெரியாது. இப்படியொரு நிலையில் திருமணம் வேண்டாம் என்று தான் நினைக்கிறேன்.

சந்திப்பு: **விஷ்வல்தாசன்**
அட்டை வண்ணப்படம் : **வெங்கடேஷ்**

# இராமனைப் படிப்போர்க்கு இடருண்டோ?

**தரமான பதிப்பு; குறைவான விலை! வர்த்தமானன் பதிப்பகத்தின்**

**இலட்சிய முழக்கம் அல்லவா இது ! இதோ வருகிறது,**

## இலக்கிய மாமேதை பி.ஸ்ரீ. அவர்களின்,

# சித்திர ராமாயணம்

படங்களுடன்

**"84 நூல்கள் எழுதித் தமிழுக்கு உயர்வளித்த பி.ஸ்ரீ.யின் எழுத்தோவியங்களில் இந்த ஒன்று தான் இதுவரை புத்தக வடிவில் வெளிவராத ஓரே நூல்!**

ஆனந்த விகடனில் பி.ஸ்ரீ.-கம்பசித்திரம் என்ற தலைப்பில் பல ஆண்டுகளுக்கு முன் பல கட்டுரைகள் வரைந்துள்ளார். கட்டுரைகளைப் பாராட்டிக் கடிதங்கள் குவிந்தன. அப்படி வந்த பாராட்டுக் கடிதங்களே பின்னர் அவரைச் 'சித்திர ராமாயணம்' எழுதத் தூண்டியது" என் சென்ற வார ஜூனியர் விகடன் அத்தகைய அருமையான சித்திர ராமாயணம் நூல் வடிவில் வராதா என்ற ஆவலை வெளியிட்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான கம்ப ரசிகர்களின் ஆவலும் இதுதான் என்பதனை உணர்ந்து இதனை எட்டுத் தொகுதிகளாக வெளியிடுகிறோம்.

| | |
|---|---|
| எட்டுத் தொகுதிகளின் விலை | ரூ.700 |
| வர்த்தமானன் அறக்கட்டளை உதவி | ரூ.100 |
| | ரூ.600 |
| முன்வெளியீட்டுச்சலுகை | ரூ.100 |
| **சலுகை விலை** | **ரூ.500** |

சலுகை விலையில் முன்பணமாக ரூ.300 M.O./DD அனுப்பிப் பெயரினைப் பதிவு செய்து கொள்க. பெயரைப் பதிவு செய்து கொள்ளக் கடைசி தேதி 22.7.2000. நூல்கள் அக்டோபர் 3 லிருந்து, பணம் வந்த வரிசைப்படி அனுப்பப்படும். மீதித்தொகை ரூ.200+கட்டு மற்றும் தபால் செலவு ரூ.50 சேர்த்து ரூ.250யினை மட்டும் தபால்காரரிடம் செலுத்திப் பார்சலினைப் பெற்றுக் கொள்ளலாம்!

நேரில் பதிவு செய்து, நேரிலேயே நூல்களைப் பெற : எமது அலுவலகத்தில் முதல் தவணை ரூ. 300.00 மட்டும் ரொக்கமாகச் செலுத்தி உரிய ரசீது பெற்றுக்கொள்ளலாம். ரசீதினில் குறிப்பிட்ட தேதியில் மீதித் தொகை ரூ.200.00 மட்டும் செலுத்தி நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம். நேரம்: காலை 9.30 முதல் 6.30 வரை இடைவேளையின்றி. ஞாயிறு விடுமுறை.

M.O. / D.D. அனுப்ப வேண்டிய முகவரி: **வர்த்தமானன் பதிப்பகம்** ஏ.ஆர். ஆர். வளாகம், 141, வடக்கு உஸ்மான் சாலை, தியாகராயநகர், சென்னை -17. (பனகல் பார்க் அருகில்).

இந்நூலினை வெளியிட உரிமை வழங்கிய சென்னைக் கம்பன் கழகத் தலைவர் மாண்புமிகு நீதியரசர் **எம்.எம்.இஸ்மாயீல்** அவர்களுக்கும் செயலர் **பழ. பழனியப்பன்** அவர்களுக்கும் நன்றி.

Advt

# செவ்வாய் கிரகத்திலிருந்து சென்னைக்குக் குடிநீர்!!

## - அமைச்சர் துரைமுருகன் அறிவிப்பு!!!



கிருஷ்ணா நீரை சொட்டுச் சொட்டாகவாவது சென்னைக்குக் கொண்டு வந்து சாதனை புரிந்தவர் அமைச்சர் துரைமுருகன். இனி ஜூலையில்தான் அடுத்த சொட்டு கிருஷ்ணா நீர் விடுவார்களாம்.

ஆனால் ஒரு நல்ல சேதியை அமெரிக்க நாஸா விண்வெளி நிலையம் வெளியிட்டிருக்கிறது. செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருக்கிறதாம்! 'விர்ச்சுவல் எவிடன்ஸ்' இருப்பதாக விஞ்ஞானிகள் டாக்டர் மைக்கேல் மாலினும், டாக்டர் கென் எட்ஜெட்டும் அறிவித்திருக்கிறார்கள்.

அமைச்சர் துரைமுருகன் அமெரிக்கா போய் விஞ்ஞானிகளிடம் பேசி, செவ்வாய் கிரகத்திலிருக்கிற தண்ணீரை, சென்னைக்குக் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளலாம். கண்டலேறுவிலிருந்து கிருஷ்ணா நீரைக் கொண்டு வருவதைவிட இது எளிது.

இதோ நம் கற்பனை!

சட்டசபையில் அமைச்சர் துரைமுருகன் செவ்வாய் கிரக நீர்த் திட்டத்தை அறிவித்துவிட்டு முதல்வரைப் பெருமையுடன் பார்க்கிறார். கலைஞர் புன்னகையால் அவரைப் பாராட்டுகிறார்.

சோ. பாலகிருஷ்ணன் : இப்போது சென்னை நகரமே குடிதண்ணீருக்குத் தவித்துக் கொண்டிருக்கிறது. செவ்வாய் கிரகத்திலிருந்து சீக்கிரமே தண்ணீர் கொண்டுவந்தால் நல்லது. எப்போது கிடைக்கும் தண்ணீர்?

துரைமுருகன் : 2027க்குள் கிடைத்துவிடும் என்று உறுதியாகச் சொல்லுவேன். அப்போதும் கழக ஆட்சிதான் நடக்கும். கலைஞர்தான் முதலமைச்சராகவும் இருப்பார்.

(ஆளும் கட்சி உறுப்பினர்கள் மேசையைத் தட்டுகின்றனர்)

தாமரைக்கனி : இதற்குச் சுமாராக எத்தனை கோடி செலவாகும்?

துரைமுருகன் : அதிகம் இல்லை. மிஞ்சிப் போனால் 50,000 கோடி ரூபாய்க்குள்தான் ஆகும். இதில் பாதியை அமெரிக்கா கொடுத்து விடும். நாம் மீதிதான் கொடுக்க வேண்டி யிருக்கும்.

சோ. பா : ஐந்நூறு கோடி ருபாய்க்கு மேல் ஆந்திர அரசாங்கத்துக்குக் கொடுத்தும், ஐநூறு சொட்டுக்கூட கிருஷ்ணா நீர் நமக்குக் கிடைக்கவில்லை. ஐம்பதாயிரம் கோடியில் பாதியைக் கொடுத்து விட்டு அம்போ என்று இருக்க வேண்டியதுதானா?

கலைஞர் : (குறுக்கிட்டு) ஆத்திகர்கள் சம்போ என்றும் இருக்கலாம்!

(அவையில் குபீர் சிரிப்பு)

சோ. பா : இந்தத் திட்டத்துக்கு அமெரிக்க அதிபர் க்ளின்டன் ஒப்புதல் அளித்து விட்டாரா?

துரைமுருகன் : செவ்வாய் கிரகம் அமெரிக்காவுக்கு மட்டுமே சொந்தமல்ல. அந்த





நாட்டு விஞ்ஞானிகள் அங்கே தண்ணீர் இருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதனால் மரியாதை கருதி அதிபர் க்ளின்டனை முதலமைச்சர் சந்தித்துப் பேசுவார். திட்டத்தை 31.12.2026 அன்றே முடித்து விடுவோம். 2027 வரை மக்கள் காத்திருக்கத் தேவை யில்லை.

தாமரைக்கனி : திட்டம் முடிவதற்குள் அமைச்சர் எத்தனை முறை அமெரிக்கா செல்ல வேண்டும்? அந்தச் செலவும் இந்தத் திட்டச் செலவிலேயே அடக்கமா? சட்டசபை அங்கத்தினர்களையும் கூடவே அழைத்துச் செல்லுவீர்களா? ஏனென்றால் நீங்கள் கொண்டு வருவது செவ்வாய் கிரக தண்ணீர்தான் என்று நாங்கள் எப்படி நம்புவது?

கலைஞர் : (குறுக்கிட்டு) அமெரிக்கா என்ன, ஆகாயத்துக்கே சென்றுவர வேண்டியிருந்தாலும், இதற்கான செலவு எல்லாம் செவ்வாய் கிரக தண்ணீர் திட்டத்திலேயே சேர்க்கப்படும். மக்கள் குடிநீர் இல்லாமல் தவித்துக் கொண்டிருப்பதை இந்த அரசு ஒரு நாளும் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்காது. நல்ல வேளை, புராண காலத்தில் பகீரதன் கங்கையைக் கொண்டு வந்த போது எதிர்க்கட்சிகள் என்று எதுவும் இருக்க வில்லை. இருந்திருந்தால் அவர்களுக்குப் பதில் சொல்லியே பகீரதனுக்கு அலுத்துப் போயிருக்கும்! (ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலத்த கைதட்டல்)

சோ.பா. : திட்டத்துக்கான பணிகளை டெண்டர் முறைப்படிதானே ஆரம்பிப்பீர்கள். அதில் முறைகேடு இல்லாமல் அமைச்சர் பார்த்துக் கொள்வாரா?

துரைமுருகன் : (கண்ணைக் கசக்கிக் கொண்டு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்

என் நாணயம் பற்றிச் சந்தேகப்படுகிறார். இது என் மனதைப் புண்படுத்திவிட்டது. (கண்ணாடியைக் கழற்றிக் கண்களைத் துடைத்துக் கொள்கிறார்.)

தாமரைக்கனி : சென்னைக்குக் கிடைத்த கிருஷ்ணா நீரைவிட, இப்போது அமைச்சர் சிந்திய கண்ணீர் அதிகம் என்று நினைக்கிறேன்.

சோ. பா. : ஏற்கெனவே அரசு மினி மேம் பாலங்கள் கட்டியதில் நிறைய ஊழல் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. இப்போது செவ்வாய் கிரகத்திலிருந்து சென்னை மாநகரத்துக்குக் குடிநீர் கொண்டு வரும் மாபெரும் திட்டத்தில் முறைகேடுகள் நடக்காது என்பது என்ன நிச்சயம்?

துரைமுருகன் : (ஓவென்று அழுது கொண்டே) எதிர்க்கட்சித் தலைவர் என் நடத்தை மீது களங்கம் கற்பித்துவிட்டார். (மேல் துண்டால் கண்ணீரைத் துடைத்து அவையிலேயே பிழிந்துவிட்டு) நான் கடமையை உணர்ந்து செயலாற்றுபவன் என்று என் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். (ஓவென்று மறுபடி அழுது) நான் மரணத்தைத் தழுவும்போது 'இந்த நாணயமான அமைச்சர் என்னுடன் இருந்தார்' என்று கலைஞர் வாயிலிருந்து வார்த்தைகள் வந்தால், அதுவே எனக்குப் பெரிய பாராட்டு. (ஓவென்று மறுபடி அழுது துண்டால் கண்ணீரைத் துடைத்து அவையில் பிழிகிறார்.)

தாமரைக்கனி : சென்னைக்குக் கிருஷ்ணா நதிநீர் அமைச்சர் கொண்டு வந்தாரோ இல்லையோ, அழுது அழுதே சட்டசபையில் ஐந்து டி.எம்.சி. கண்ணீரைக் கொண்டு வந்து விட்டார்.

(துரைமுருகன் அவரை ஆவேசமாகத் தாக்கப் பாய்கிறார். கலைஞர் தடுக்கிறார். தாமரைக்கனியை சோ. பாலகிருஷ்ணன் தடுத்துப் பிடித்து நிறுத்துகிறார்.)

**மா**லை, நிருபர்கள் கூட்டத்தில் அமைச்சர் துரைமுருகன் கலந்து கொள்கிறார்.

நிருபர் : செவ்வாய் கிரக நீரை எப்படி இங்கே கொண்டு வருவீர்கள்? பைப் மூலமா? இல்லை கிரகத்தில் இருந்துகொண்டே, கல்யாணங்களில் பன்னீர்ச் செம்பால் தெளிப்பது போல மக்கள் மீது தெளிப்பீர்களா?

துரைமுருகன் : நிருபரின் கிண்டலை ரசிக்கிறேன். செவ்வாய் கிரகத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்தாலும், ஏற்கனவே ஆந்திரப் பிரதேசத்திலிருந்து தமிழ்நாட்டு எல்லை வரை வாய்க்கால் அமைத்திருப்பதால் அது வழியாகவே சென்னைக்குக் கொண்டு வர வேண்டும் என்பது என் யோசனை. இல்லை என்றால் செவ்வாய் கிரகத்திலிருந்து நாஸாவுக்குத் தண்ணீர் கொண்டு வந்து, பிளேன் மூலம் சென்னைக்குக் கொண்டு வரலாம்.

நிருபர் : பைப் காண்ட்ராக்ட் யாருக்கு?

துரைமுருகன் : செவ்வாய் கிரகத்திலே இருந்து யாரும் டெண்டர் தராத வரை, சென்னையில் உள்ளவர் யாருக்காவது அந்த காண்ட்ராக்ட் அளிக்கப்படலாம்.

நிருபர் : இதற்கு ஆகும் செலவில் நம் பங்கு 25000 கோடி ரூபாய் நிதி திரட்ட அரசு என்ன யோசனை வைத்திருக்கிறது?

துரைமுருகன் : இந்த மாபெரும் திட்டத்துக்கு மத்திய நிதியமைச்சர் யஷ்வந்த் சின்ஹா ஒரு லட்சம் ரூபாய் இந்த ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில் ஒதுக்கியிருக்கிறார். மீதி இருபத்து நாலாயிரம் கோடியே, தொண்ணூற்றொன்பது லட்சம் ரூபாயை உலக வங்கியிடமிருந்து கடனாகப் பெற முடிவு செய்திருக்கிறோம்.

நிருபர் : உலக வங்கி அத்தனை ரூபாய் கடனாகத் தரும்போது, தண்ணீருக்கான வரியை உயர்த்தச் சொல்லிக் கட்டாயப் படுத்துவார்கள். அது மக்கள் தலையில்தானே விழும்?

துரைமுருகன் : தலையில் தண்ணீர் விழ வேண்டும். ஆனால் வரி மட்டும் விழக் கூடாதா? இப்போது தண்ணீர் எதுவும் கொடுக்காமலே மக்கள் வாயை மூடிக் கொண்டு வரியையும் கட்டி, தண்ணீருக்கான கட்டணமும் கட்டி வருவதில்லையா? அதுபோல, தண்ணீருக்கான ஆறுமாத வரியைப் பத்தாயிரம் ரூபாயாகவும், தண்ணீர்க் கட்டணத்தை மாதம் ஆயிரம் ரூபாயாகவும் வைத்தால் மக்கள் மகிழ்ச்சியோடு முன் வந்து கட்டிவிடுவார்கள்.

நிருபர் : இப்படி ஆயிரக் கணக்கில் எல்லாம் வரி கட்ட முடியாது என்று பானை, குடம் எல்லாம் எடுத்துக் கொண்டு வந்து தெருவில் போராட்டம் நடத்தினால் என்ன செய்வீர்கள்?

துரைமுருகன் : அப்படிப் போராட்டம் நடத்தினால் அரசுக்கு நல்லது. உடனே செவ்வாய் கிரக நீரைச் சென்னைக்குக் கொண்டு வரும் திட்டத்தைக் கைவிட்டு, பழையபடி ஐதராபாத் போய் கண்டலேறு வாய்க்காலில் எத்தனை சொட்டு நீர் விடுவீர்கள் என்று சந்திரபாபு நாயுடுவிடம் கேட்பேன்!

(நிருபர்களிடம் விடைபெறுகிறார் அமைச்சர்)

கற்பனை : சாருகேசி





# உங்களால் ஒரு மணி நேரம் செலவிட முடியுமா?

முடியும் என்றால் 45 நந்தே நாட்களில் உங்களை இங்கிலீஷில் சரளமாகப் பேச வைக்க எங்களால் முடியும்!

பல்லாண்டு கால ஆராய்ச்சிக்குப்பின் விவேகானந்தா இன்ஸ்டிட்யூட் உருவாக்கியுள்ள ஸ்பீச் ஜெனரேட்டிங் ஃபார்முலா (SGF)* இதுவரை 10 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களை சரளமாக இங்கிலீஷ் பேச வைத்து சாதனை படைத்துள்ளது!

உங்களது ஓய்வு நேரத்தில் தினசரி ஒரு மணி நேரம் செலவிட்டு எங்களது பாடங்களைப் படித்து பிராக்டிஸ் செய்து பாருங்கள். 45 நந்தே நாட்களில் நீங்கள் மடமடவென இங்கிலீஷில் பேசத் தொடங்கி விடுவீர்கள்!

என்ன....தினசரி ஒரு மணி நேரம் செலவிடத் தீர்மானித்துவிட்டீர்களா? சபாஷ்! உங்களது முன்னேற்றத்தின் முதற்படியாக ஒரு ஐந்து நிமிடம் செலவிட்டுக் கீழ்க்காணும் கூப்பனைப் பூர்த்தி செய்து இன்றே அனுப்புங்கள். கோர்ஸ் பாடங்கள் V.P.P. மூலம் உங்களது வீடு தேடி வந்துவிடும். தபால்காரரிடம் ரூ. 395/- செலுத்திப் பாடங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

இலவசம்!
கூப்பனை 15 நாட்களுக்குள் அனுப்பி 416 பக்கங்கள் கொண்ட இங்கிலீஷ்- தமிழ் டிக்ஷனரியை இலவசமாகப் பெறுங்கள்.

இதோ கூப்பன்

**Yes,** நானும் தினசரி ஒரு மணி நேரம் செலவிட்டு 45 நந்தே நாட்களில் சரளமாக இங்கிலீஷ் பேச விரும்புகிறேன். எனக்குப் பாடங்களை உடனே அனுப்புங்கள். தபால்காரரிடம் ரூ. 395/- செலுத்திப் பெற்றுக் கொள்கிறேன்.

பெயர்: ..........................................

முகவரி: ..........................................

..........................................

..........................................PIN..........

VIVEKANANDA INSTITUTE

9, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை - 600 017.

E-Mail: vinglish@vsnl.com
visit us at: www.vivekin.com

விவேகானந்தா இன்ஸ்டிட்யூட்டின் நேர்முகப் பயிற்சி மையங்கள்:- சென்னையில்: தி.நகர் ☎ 4347034. தாம்பரம் ☎ 2383152. தண்டையார்பேட்டை ☎ 5967484. கீழ்ப்பாக்கம் ☎ 6447501. போரூர் ☎ 4828210. மதுரை ☎ 739974. திருச்சி ☎ 711007. கோயம்புத்தூர் ☎ 234957. கிருஷ்ணகிரி ☎ 30012. ஈரோடு ☎ 253533. திண்டுக்கல் ☎ 431965. குன்னூர் ☎ 33792. திருப்பூர் ☎ 707331. வேலூர் ☎ 227136. தஞ்சாவூர் ☎ 31753. சிதம்பரம் ☎ 22515. சேலம் ☎ 449552. காஞ்சிபுரம், புதுக்கோட்டை மற்றும் பாண்டிச்சேரி.

குசேலர் கதை தெரியும் அல்லவா! கிருஷ்ணனைப் பார்க்கப் போனவருக்கு ஒரே வெட்கம். வாசலிலேயே நிற்கிறார். பரமாத்மாவுக்குச் செய்தி போனவுடனே கிடுகிடுவென்று ஓடி வந்தான். அப்படியே அவரைத் தூக்கி எடுத்துக் கொண்டுபோய் சிம்மாசனத்தில் உட்கார வைத்துக் கொண்டான். சேர்த்து அணைத்துக் கொண்டு அழைத்துப் போய் உட்கார வைத்து விட்டு, திருவடியைப் பிடித்துக் கொண்டிருந்தான்.

அஷ்ட மஹிரிஷிகள், வாசுதேவனுடைய எட்டு பத்தினிமார்கள் பக்கத்திலே நிற்கிறார்கள். ருக்மிணி தீர்த்தத்தைச் சேர்க்கிறாள்; பகவான் பாதத்தை அலம்புகிறான்; மஹாலக்ஷ்மி விசிறியால் விசிறுகிறாள். அவர் எப்படி உட்கார்ந்திருக்கிறார்...?

பொம்மை மாதிரி உட்கார்ந்து விட்டார். இவர்கள் பண்ணும் உபசாரத்தைப் பார்த்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை அவரால். வாயை மூடிக் கொண்டு கோவில் விக்ரஹமாக உட்கார்ந்திருக்கிறார். 'நீங்கள் எதை வேணுமானாலும் பண்ணிக் கொள்ளுங்கள்' என்று பேசாமல் உட்கார்ந்திருக்கிறார் குசேலர். சத்யபாமா சந்தனத்தை எடுத்துக் கொடுக்கிறாள். பகவான் கிழே உட்கார்ந்து கொண்டு அவர் திருவடியைப் பிடித்துக் கொண்டு விசேஷ பணிவிடை பண்ணுகிறான்.

அதற்குள்ளே அந்த அரண்மனையிலே, துவாரகா நகரத்திலே அங்கே இருக்கிறவர்களெல்லாம் பேசிக் கொள்கிறார்களாம் : 'என்ன பாக்யம் பாருங்கள் அந்த ஏழைக்கு! என்ன உபசாரம் நடக்கிறது! இத்தனை உபசாரம் கொள்ள இவர் என்ன பண்ணியிருப்பார்?' இப்படி விடிய விடிய எல்லோரும் விசாரம் பண்ணுகிறார்கள்.

அதற்குள்ளே ருக்மிணி பிராட்டி கிழே உட்கார்ந்திருக்கிற வாசுதேவனைப் பார்த்து, ''ஸ்வாமி! இந்த பிராமணோத்தமர் இருக்கிறாரே... இவர் எந்த திக்கிலேயிருந்து வந்தார்...? எந்தப் பக்கத்திலிருந்து வந்தார்?'' என்று கேட்டாள்.

கபட நாடக சூத்ரதாரி பரமாத்மா அவள் திருவுள்ளத்தை உணர்ந்தான். இதோ இந்தப் பக்கம் என்று இரண்டு கையையும் காண்பித்தான். காண்பித்ததோடு அல்லாமல் அழுத்திச் சொன்னான் 'இந்தப் பக்கம்' என்று.

அப்படிச் சொன்னவுடனே ருக்மிணி என்ன பண்ணினாள், அந்தப் பக்கம் பார்க்கிறாள்.

எந்தெந்த திக்கிலெல்லாம் மஹாலக்ஷ்மியுடைய கடாக்ஷம் போகிறதோ அந்த திக்கிலெல்லாம் அஷ்ட ஐச்வர்யமும் போட்டி போட்டுக் கொண்டு போகிறதாம். குசேலர் குடிசை இருந்த திக்கையல்லவா பகவான் காட்டினான்! மஹாலக்ஷ்மி அந்தப் பக்கம் பார்த்ததும் குசேலர் குடிசை இந்த்ர பவனமாக மாறிப் போய்விட்டது!

ராத்திரி முழுவதும் குசேலர் கிருஷ்ணனிடத்திலேயே இருந்தார். மறுநாள் காலையில் அனுஷ்டானங்களையெல்லாம் முடித்துக் கொண்டு வந்தார்.


வாசுதேவன் எட்டு மஹிஷிகளோடு வந்து சேவிக்கிறான். கனம் சொல்லி ஆசீர்வாதம் பண்ணுகிறார் குசேலர்.

''போய்ட்டு வரட்டுமா கிருஷ்ணா?'' என்றார். "போய்ட்டு வாங்கோ" என்று சொல்லி விட்டான்! இவ்வளவு தூரம் மந்திரத்தைச் சொல்லி ஆசீர்வாதம் பண்ணிய குசேலருக்கு ஒரு ரூபாய் கூட தக்ஷிணை தரவில்லை.

கொடுக்க வேண்டும் என்கிற தர்மம் பகவானுக்குத் தெரியாதா? ஆனால் கொடுக்கவில்லை, ஒன்றுமே கொடுக்கவில்லை.

இவர் பாவம், பேசாமல் போய் விட்டார். 'அவனெங்கே, நானெங்கே! பரம

# 75



ஸ்வர்ண கலசத்தை வைத்துக் கொண்டு பூர்ண கும்பத்தை நீட்டு கிறார்கள்!

குசேலர் பின் பக்கம் திரும்பிப் பார்த்தாராம்! வேறு யாருக்காவது இருக்குமோ என்று!

இத்தனை நாளாகப் பூரண கும்பத்துக்கு ஆசைப்பட்டவர் அல்லர் அவர். பரம ஏகாந்தி அவர். எங்கும் போய் அறியார். அத னால் தனக்குத்தானா இந்த வரவேற்பு? என்று சந்தேகம் வருகிறது அவருக்கு! தன் ஊர்தானா இது என்றே சந்தேகம் வருகிறது!

ஊருக்குள்ளே போனால் இவர் குடிசை தென்பட்டால்தானே? பெரிய பவனம்! அதிலிருந்து மகாராணி ஒருத்தி வருகிறாள். வந்து வீதியிலே அவர் காலில் விழுகிறாள்.

தரித்திரன் என்னை அவன் கட்டிக் கொண்டானே! சின்ன வயதிலே நாங்கள் இரண்டு பேரும் காட்டிலே விறகு எடுத்துக் கொண்டு வருவதற்காகப் போனோமே. அப்போது மழை வந்து விட்டது. ஏகமாக இருட்டு. ஒருவருக்கொரு வர் கட்டிக் கொண்டு ராத்திரி முழுவதும் இருந்ததையெல்லாம் எனக்கு ஞாபகப்படுத் தினானே' என்று எண்ணிக் கொண்டே போகிறார்.

எதிரே நூறு வேத வித்துக்கள் கையிலே

# அருள்வாக்கு

மேல்நாடுகளில் orphan-home (அநாதை இல்லம்) என்று தனியாக வைக்கிறார்கள் என்றால், நம் சாஸ்த்ரப்படி ஒவ்வொரு இல்லத்திலும் அநாதைக்கும் அதிதிக்கும் இடமுண்டு. மேல் நாட்டுக்காரர்களின் வீட்டுக்குள் அநாதைகளோ அதிதிகளோ நுழையக்கூட முடியாமல் நாய் கட்டியிருக்கும்! அவன் வாழ்க்கையோடு, ரத்தத்தோடு அதிதி ஸத்காரமும், அநாதைப் பராமரிப்பும் ஒட்டாமல் அவைபாட்டுக்கு மெகானிகலாக ஸ்தாபன ரீதியில் நடக்கும். (எல்லாரும் இப்படி என்று நான் சொல்லவில்லை. எந்த தேசத்திலும் உத்தமர்கள், பரோபகாரிகள், த்யாகிகள் உண்டு. அப்படியே ஸ்வயநலக்காரர்களும் உண்டு. பொதுவாகச் சொன்னேன்.) அவனைப் பார்த்துக் கொண்டு, ''அதிதி தேவோ பவ'' என்ற கொள்கையைக் கொண்ட நம் தேசத்திலும் வீட்டு வாசல்களில் ''நாய் ஜாக்ரதை!'' போர்டு தொங்குவதைப் பார்த்தால் வேதனையாயிருக்கிறது.

தன் பத்னி என்பதே தெரியாமல் 'தீர்க்க சுமங்கலி பவ' என்று ஆசீர்வதிக்கிறார். பத்னிக்கு அப்படி ஆசி சொல்வது வழக்கம் கிடையாது.

ஆனால், லக்ஷ்மி கடாக்ஷமானது, துவாரகையிலிருந்து குசேலரின் ஊருக்குச் சென்று அவ்வளவு உயர்த்தியாய் அவர்களை மாற்றி விட்டது. மனைவியையே அடையாளம் தெரியவில்லை குசேலருக்கு!

அப்படியானால் மஹாலக்ஷ்மி கடாக்ஷத்தை என்னவென்று சொல்வது! அப்படிப்பட்ட ஏற்றமுடைய கடாக்ஷம் உடையவள் – ஒருநாளும் குறையாத கடாக்ஷம்.

பூதேவியும் ஸ்ரீதேவியும் மஹாவிஷ்ணுவைத் தினையளவும் பிரியாதவர்கள்.

எங்கிருந்து தோன்றினாள் இந்த மஹாலக்ஷ்மி என்று சுவாமி தேசிகன் ஸ்ரீ ஸ்துதியிலே கேட்கிறார்.

''அம்மா! குறைந்த, அல்ப அறிவே படைத்தவனான அடியேன், உன்னை என்னவென்று சொல்லி ஸ்தோத்திரம் பண்ண முடியும்? நீ உண்டான இடம் எது என்றே கண்டுபிடிக்க முடியவில்லையே! எதிலே நீ தோன்றினாய்? உன் பெருமையை எப்படித் தெரிந்து கொள்வது?'' என்று வியக்கிறார்.

இதையே பராசர மஹரிஷியிடம் மைத்ரேயர் கேட்ட போது அவர் சொன்னாராம் :

''மஹாலக்ஷ்மியுடைய பிறப்பு இங்கிருந்து தான் வந்தது என்று சொல்ல முடியாது. எப்போதும் மஹாவிஷ்ணுவுடன் கூடவேதான் இருக்கிறாள் அவள். அவதார காலத்திலே அங்கங்கே பிறந்து வந்தாள். இதை நீ உணர வேண்டும்.

''அந்த விஷ்ணு இருக்கிறானே... அவன் எப்படி எல்லா சராசரங்களுக்குள்ளும் உட்புகுந்து இருக்கிறானோ, அப்படி மஹாலக்ஷ்மியும் விபுவாக எல்லா சராசரங்களிலேயும் இருக்கிறாள். அதனால் விஷ்ணு லக்ஷ்மியை விட்டு விட்டுத் தனியே இல்லை. சர்வ வியாபி, சர்வாந்தர்யாமி என்றால் லக்ஷ்மியோடு சேர்த்துத்தான் சொல்லப்படுகிறது'' என்று ரொம்ப அழகாக பராசரர் எடுத்துச் சொல்லுகிறார்.

அவதார காலத்திலே ராமனாக பகவான் பூலோகத்திலே வருகிறபோது சீதையாக வருகிறாள் அவள்; கிருஷ்ணனாக வருகிறபோது ருக்மிணியாய் வருகிறாள். பகவான் எப்படி எப்படியெல்லாம் தன்னை மாற்றிக் கொள்கிறானோ அதற்கு ஏற்ப மஹாலக்ஷ்மியும் தன்னை மாற்றிக் கொண்டு அவனோடு கூட வந்து அவதரிக்கிறாள்.

பரமார்த்த ஸ்துதி என்கிற ஸ்தோத்திரத்திலே ரொம்ப அழகாகச் சொல்கிறார் சுவாமி தேசிகன்:

நாமெல்லாம் யக்ஞம் பண்ணுகிறோம். பலவிதமான யக்ஞங்கள். சுதர்ஸன யக்ஞம், நரசிம்ஹ யக்ஞம்... இப்படியெல்லாம்....

பகவானும் நித்யம் யக்ஞம் பண்ணிக் கொண்டிருக்கிறான் – அந்த யக்ஞம் அவனைத் தவிர வேறு எவராலும் பண்ண முடியாது. அவனைத் தவிர வேறு எவராலும் பண்ண முடியாத அந்த யக்ஞத்துக்குப் பெயர் சரணாகத ரக்ஷணம்!

யக்ஞம் பண்ணுவதற்குச் சில லக்ஷணங்களைச் சொல்கிறது சாஸ்திரம் – இளமையிலேயே பண்ண வேண்டும். வயதான பிற்பாடு பண்ணக் கூடாது. 'கிருஷ்ணகேசி' – கறுப்பு நிறத் தலைமுடியுடைய காலத்தில் பண்ண வேண்டும். ஜாத புத்ர : – புத்திரர்கள் இருக்க வேண்டும் – சந்தானம் இருக்க வேண்டும்; இல்லையானால் யக்ஞம் பண்ணக் கூடாது.

பகவானுக்கு – சரணாகத ரக்ஷணமாகிற

"வா வா" என்று வழிப்போக்கர்களைக் கூப்பிட்டுப் படுக்க வைத்துக் கொள்ளவே 'திண்ணை' என்பது நம்முடைய வைதிகமான க்ருஹ சில்பத்தில் இருந்தது. இப்போது அதெல்லாம் போச்சு. தெருவில் போகிறவர் சாப்பிடக்கூட ஒரு பங்கு அன்னம் போடப்பட்டு வந்த இந்த தேசத்தில் இம்மாதிரி அநுஷ்டானங்களை 'ஸுபெர்ஸ்டிஷன்' என்று தள்ளி வைத்து விட்டதும் மனஸுக்கு க்லேசமாயிருக்கிறது.



மேல்நாட்டு மோஸ்தரில் இங்கேயும் தனி மநுஷ்யனின் குடும்பம் தனக்கே என்று ஆனபிறகு, இங்கேயும் அங்கே மாதிரி ஸமூஹப் பணிகளை இன்ஸ்டிட்யூஷனலைஸ் செய்வதாகவும், Welfare State என்பதாக ராஜாங்கமே அநாதையில்லம், வயஸானவர் பென்ஷன் என்றெல்லாம் நடத்துவதுமாக ஆகிவிட்டது. இன்றைய 'ஸெட்-அப்'பில் இதுவுமில்லாவிட்டால் நிராதரவானவர்களின் பாடு ரொம்பவும் கஷ்டமாகத்தான் ஆகிவிடும். ஆனாலும் பூர்வத்தில் ஒவ்வொருவரும் 'வஸுதைவ குடும்பகம்' (லோகம் முழுக்க ஒரு குடும்பம்) என்ற அன்பான எண்ணத்தோடு தாங்களே ஆதரவற்றவர்களைத் தாங்கி தர்த்த முறையோடு பார்த்தால் இப்போது ராஜாங்க ரீதியில் ஆபீஸாக ஸமூஹ கார்யங்களை நடத்துவது இரண்டாம் பக்ஷம்தான்.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.**

யாகத்தைப் பண்ணுகிறானே – அவனுக்கு யார் தர்ம பத்னி...? அந்த உத்தமமான தர்மத்துக்கு ரக்ஷகியாகப் பக்கத்திலிருந்து நடத்தி வைக்கிறாள் மஹாலக்ஷ்மி.

யார் ரித்விக்குகள்? – காருண்யம் முதலான குணங்கள், தயை முதலான குணங்களெல்லாம் சரணாகத ரக்ஷணமாகிற யாகத்தில் ரித்விக்குகள். இவ்வளவு குணங்களிலும் தயைதான் மிக உயர்ந்தது.

பகவானிடத்தில் தயை இருப்பதால்தான் மற்றைய குணங்கள் பெருமையுறுகின்றன.

யக்ஞத்தில் வந்து கலந்து கொள்பவர்களுக்கெல்லாம் தக்ஷிணை தரவேண்டும். ஒருத்தர் யக்ஞம் நடத்த ஒரு லட்ச ரூபாய் கொடுக்கிறார். அவரும் கூட யக்ஞ தக்ஷிணையாக ஒரு ரூபாயாவது வாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்.

ஏனென்றால், இன்னும் பல யக்ஞங்களுக்கு அவர் உபகாரம் பண்ண வேண்டுமல்லவா...? அதற்கு அவர் செல்வம் அபிவிருத்தி அடைந்து, மேலும் உபகாரம் பண்ணும்படியான சக்தி ஏற்பட வேண்டும்; குறையாத ஐச்வர்யம் இருக்க வேண்டும் என்பதற்காக தக்ஷிணையை வாங்கிக் கொள்ள வேண்டும்.

பகவான் சரணாகத ரக்ஷணம் பண்ணுகிறான் என்று தெரிந்தவுடனே யார் யார் அந்த இடத்துக்கு வருகிறார்களோ, அத்தனை பேரும் எதை தக்ஷிணையாகப் பெறுகிறார்கள்...?

மோக்ஷமாகிற பதத்தைக் கையிலே கொடுக்கிறான் பகவான். பிறவித் துயர் கெட பிறவியை அறுத்து, சாச்வதமான நித்யானந்தத்தைப் பரமாத்மா நமக்குக் கொடுக்கிறான்.

லக்ஷ்மியோடு சேர்ந்துதான் இந்தக் காரியத்தைப் பரமாத்மா பண்ணுகிறான்.

பகவான் பொருளாக இருக்கிறான்.
மஹாலக்ஷ்மி சொல்லாக இருக்கிறாள்.
நீதியாய் அவன் இருக்கிறான்;
நீதியிலிருக்கிற தர்மமாய் அவள் இருக்கிறாள்.
ஸ்வாஹா என்ற சப்தத்தில் அவள் இருக்கிறாள்;
ஸ்வாஹா என்ற சப்தத்தின் பொருளாய் அவன் இருக்கிறான்....

ஆகவே அவனை வசீகரம் பண்ண வேண்டுமானால் சரணாகதிதான் வழி. சரணாகதி பண்ண வேண்டுமானால் லக்ஷ்மியை முன்னிட்டுப் பண்ண வேண்டும்.

ஈச்வரனே அப்படித்தான் பண்ணும்படி மந்த்ர ராஜ பத ஸ்தோத்திரத்திலே சொல்கிறான். லக்ஷ்மியோடு கூடிய பத்ரன் – மாலோலன் என்று அவனைக் குறிப்பிடுகிறான்.

அப்படிப்பட்ட லக்ஷ்மி நாராயணன், லக்ஷ்மி நரசிம்ஹனின் சரணாகத ரக்ஷண யக்ஞத்தில் ஆனந்தமாய்ப் பங்கேற்று சாச்வதமான மோக்ஷானந்தத்தைப் பெறுவோமாக.

**(நிறைந்தது)**

**ஆஸ்திக சமாஜத்தில் (சென்னை - 18) ஆற்றிய உரைகளின் தொகுப்பு**



# ராஜாஜியான காந்தி!

டைரக்டர் ஞான ராஜசேகரனின் பாரதியார் படத்தில் காந்தியாக நடிக்கிறார் பா.ஜ.கவின் அலுவலகப் பொறுப்பாளர்களில் ஒருவரான ராஜசிம்மன். காந்திக்கு இவர் மேட்ச் ஆன கதை கொஞ்சம் சுவாரஸ்யமானது என்கிறார் ஞான ராஜசேகரன்.

1919ம் ஆண்டு காந்திஜி சென்னை வந்த போது அவரை பாரதி சந்தித்தார். இந்தச் சந்திப்பு படத்தில் இடம் பெறுகிறது. இந்தக் கால கட்டத்தில் காந்திஜிக்கு சுமார் ஐம்பது வயது. அந்த வயதுடைய காந்தி வேடத்துக்குப் பொருத்தமான நடிகரைத் தேடி மகாராஷ்டிரா, குஜராத் என்று அலைந்தும் பலனில்லை. ஷூட்டிங் ஷெட்யூல் நெருங்க, நெருங்க டென்ஷன். ஆல் இந்தியா ரேடியோ மற்றும் தூர்தர்ஷனுக்குச் சென்று, அவர்களால் நாடகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் போட்டோக்களைப் பார்த்தார் இயக்குனர். கடைசியில் எதேச்சையாக தூர்தர்ஷன் செய்திப் பிரிவு இணை இயக்குனரான ஹெச். ராமகிருஷ்ணனிடம் இதுபற்றிப் பேசியபோது, "உங்களுக்குக் காந்தி கிடைச்சாச்சு சார்!" என்றார். அவர் சிபாரிசு செய்தவர், தமிழக பா.ஜ.க அலுவலகப் பொறுப்பாளரான ராஜசிம்மன்! உடனடியாக வரவழைக்கப்பட்டார். 'மொட்டையடித்துக் கொண்டு வர முடியுமா?' என்றதும் உடனே மொட்டை அடித்துக் கொண்டு வந்தார். அட! காந்தி கிடைச்சாச்சு!

ராஜசிம்மனுக்கு நடிப்பு அனுபவம் நஹி என்பதால் லேசான டென்ஷன். அதைப் போக்க, சுமார் ஆறு மணி நேரத்துக்குத் தொடர்ந்து வீடியோவில் ரிச்சர்டு அட்டன்பரோவின் காந்தி படத்தைப் போட்டுக் காட்டினார். ராஜசிம்மன் காந்தியாக நடிக்க இந்த ஏற்பாடு மிக உதவியது.

"இரண்டே சீன்கள் என்றாலும், பவர்புல்லாக இருக்க வேண்டும் என நினைத்தேன். அதன்படியே அமைந்துவிட்டது'' என்கிறார் ஞானராஜசேகரன்!

"படத்தில் பதிமூன்று வயது சிறுவனாக பாரதி அறிமுகமாகிறார். அதற்காக சிறுவன் ஒருவனைத் தேடி அடுத்தப்பயணம்! எதேச்சையாக ஒரு ஆன்மீகப் பத்திரிகையில் ஒரு சிறுவனின் படத்தைப் பார்த்த போது அவனது முகம், பாலபாரதி ரோலுக்கு அற்புதமாகப் பொருந்தும் என்று தோன்றியது. விசாரித்தபோது அம்பத்தூரில் உள்ள ஒரு மடத்தின் ஸ்வாமிஜியின் பேரன் புஷ்பக் என்று தெரிந்தது.

''அந்த ஸ்வாமிஜியிடம் விஷயத்தைச் சொன்னோம். பால பாரதி ரெடி.


"பாரதியாரின் நெருங்கிய நண்பர், குவளைக் கண்ணன். பாரதியாரின் வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றில் குவளைக்கண்ணனின் சித்திரம் இடம் பெற்றுள்ளது. அதை வைத்துக்கொண்டு, அந்த கேரக்டருக்குப் பொருத்தமானவரைத் தேடினோம். டி.பி. கஜேந்திரன் செலக்ட் ஆனார்" என்கிறார் ஞானராஜசேகரன்.

காந்திஜியாக நடிக்கிறேன் என்று வந்தவர்களில் ஒருவர் இனியன் சம்பத். ஆனால் அவரை ராஜாஜியாக நடிக்க வைத்திருக்கிறார்கள்.

பாரதியார் பணியாற்றிய இந்தியா பத்திரிகை அதிபர் மண்டயம் ஸ்ரீனிவாச ஐயங்கார் பாத்திரத்தில் நடித்திருக்கிறார் டெல்லி குமார். எட்டயபுரம் சமஸ்தான மன்னராக நடித்திருப்பவர் வி.ஜி. சந்தோஷம்!

— எஸ். சந்திரமௌலி



2000 ஜூலை 9
விக்ரம ஆனி 25
மலர் : 58
இதழ் : 50

# கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



## வாடிகனில் ஒரு பேச்சு; டெல்லியில் ஒரு பேச்சு!

நான்கு நாள் இத்தாலியப் பயணம் சென்ற பிரதமர், போப் ஆண்டவரைச் சந்திப்பதாக இல்லை. ஆனால், போப் ஆண்டவரே விரும்பியதன்பேரில் வாஜ்பாயின் பயணத்திட்டம் அவசரமாக மாற்றப்பட்டு ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.


எதிர்பார்த்தது போலவே, இந்தியாவில் கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்களும் தாக்கப்படுவது குறித்துக் கவலை தெரிவித்த போப், பிரதமர் உடனடி நடவடிக்கை எடுக்கும்படியும் வலியுறுத்தினார்.

பிரதமரும் 'தமது அரசு இந்த அநீதியைத் தொடரவிடாது; தவறு செய்தோர் கண்டுபிடிக்கப்பட்டுக் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்' என்று சமாதானம் கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டார்.

மறுநாளே இந்தியாவில் உள்துறை அமைச்சர் அத்வானி விடுக்கும் அறிக்கை, பிரதமரின் கருத்துக்கு நேர் விரோதமானதாக அமைந்திருக்கிறது!

நடந்த தாக்குதல்கள் எதுவுமே மத விரோதத்தால் தூண்டப்பட்டவை அல்ல என்பதுதான் அத்வானியின் அறிக்கை!

சர்ச்சுகள் குறி வைத்துத் தாக்கப்பட்டதும் ஒரு கிறிஸ்தவ பாதிரியார் கொலை செய்யப்பட்டதும் அந்தக் கொலைக்கு சாட்சியாயிருந்த ஒருவர் சந்தேகத்துக்குரிய




முறையில் இறந்து போயிருப்பதும் மதவிரோத நிகழ்வுகள் அல்ல என்று நம்பச் சொல்கிறார் அத்வானி.

போதும் போதாததற்கு, பஜ்ரங் தளத்தினர் தாங்கள் ஒரு கிறிஸ்தவ விரோத அமைப்பினர் என்று வாக்குமூலமே கொடுத்துள்ளனர்!

ஒரிஸ்ஸாவில் நடந்த பாதிரியார் ஸ்டெயின்ஸ் பயங்கர கொலை வழக்கில் முதல் குற்றவாளியான தாராசிங்கின் ஆதரவாளர்கள் ஓர் அமைப்பையே தொடங்கி அவரைத் தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப் போவதாகவேறு ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள்!


இத்தனைக்கும் பிறகு அத்வானியின் சமாதானத்தைப் பச்சைக் குழந்தைகூட நம்பாது.

பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்த பிறகு, கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் மீதான தாக்குதல்கள் அனேகமாக இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலுமே நடந்து விட்டன.

தமிழகத்திலும்கூட பி.ஜே.பி - தி.மு.க அரசியல் உறவு ஏற்பட்ட பிறகு கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்கள் பகிரங்கமாய் நடந்துள்ளன.

மதமாற்றத்துக்குக் கட்டாயப்படுத்துகிறார்கள் என்பது கிறிஸ்துவ அமைப்புகள் பேரில் சொல்லப்படும் புகார். இந்தக் காரணத்துக்காக கிறிஸ்தவர்களைக் கறம் வைத்துத் தாக்குவதாக, வெளிப்படையாகவேகூட ஹிந்து தீவிரவாத அமைப்புகள் ஒப்புக்கொள்கின்றன. தங்கள் செயலை நியாயப்படுத்த முயற்சி செய்கின்றன.

கட்டாயப்படுத்தி மதமாற்றத்துக்கு உட்படுத்துவதை ஏற்க முடியாதுதான். ஆனால், மதமாற்றத்துக்கான காரணங்கள் மதத்தைக் கடந்தவை. பொருளாதாரம், கல்வியறிவு போன்றவற்றில் பின்தங்கியவர்களுக்கு அவ்வசதிகளை அளித்து அவர்களது நம்பிக்கையைப் பெறும் அமைப்புகளைக் குறை காண்பது கஷ்டம். முள்ளை முள்ளால் எடுக்கும் பணியாக, அதே சேவைகளையும் பணிகளையும் ஹிந்து அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும். அதைவிடுத்து, கொலை, வெட்டு, குத்து, வன்முறை என்று




இறங்குவது ஹிந்து மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் விரோதமானது.

இத்தகைய அமைப்புகளின் பிடியில் பாரதீய ஜனதா கட்சி சிக்கியிருப்பது மிகவும் துரதிர்ஷ்டவசமானது.

பி.ஜே.பி ஆட்சியில் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு இருக்காதே என்பதே எதிர்க்கட்சிகளின் பலமான வாதமாக இருந்து வருகிறது. அதை மெய்ப்பிக்கும் வகையில் நிகழ்ச்சிகள் பல, இந்த ஆட்சிக்காலத்தில் நடந்து விட்டன. ஆளுங்கட்சியின் மறைமுக ஆதரவு இருப்பதால்தான் இத் தீவிரவாத அமைப்புகள் துணிச்சலுடன் பகிரங்கமாகச் செயல்படுகின்றன என்பது மிகத் தெளிவு.

பிரதமர் மட்டும் உறுதி காண்பித்து, ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங் தள் போன்ற அமைப்புகளின் கொடுக்கை நீக்கியிருந்தால் நிலைமை இத்தனை மோசமாகியிராது.

ஆனால் அவ்வமைப்புகள்தான் - அவற்றின் தொண்டர் குழாம்தான் - தேர்தல் வெற்றிக்கு உதவக்கூடிய ஆள்பலம் பொருந்தியவை என்பது பி.ஜே.பி கட்சி மேலிடத்தின் நம்பிக்கையாக இருந்து வருகிறது. ஆகவே, பிணைப்பை நீக்க இயலவில்லை.

ஐந்தாண்டு ஆட்சி உறுதியான நிலையிலாவது அப்பிணைப்பைத் துண்டித்து அடுத்த தேர்தலுக்குள் கட்சியைப் பலப்படுத்தியிருக்கலாம். அதில் தவறிவிட்டார் பிரதமர்.


சமீபத்தில் கிறிஸ்துவர்களுக்கெதிராக நடந்திருக்கும் தாக்குதல்களை விசாரித்து, மிக விரைவில் குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தருவதன் மூலமாவது இவ்வரசு ஓரளவு பரிகாரம் காணட்டும்.

இல்லாவிட்டால் ஆறாத புண்களைத் தாங்கிக் கொண்டுதான் பலர் அடுத்தத் தேர்தலில் வோட்டுப் போடுவார்கள். சிறுபான்மை சமூகம்தானே என்ற அலட்சியம் ஆபத்தானது; தேர்தலில் வெற்றி - தோல்வியை நிர்ணயிக்கும் வோட்டுகளாக அவை விளங்கக் கூடும்!

**ஜோ**திகா, தபு, சர்பானி முகர்ஜி, மஞ்சுளா, மானஸி, இஷிதா அருண், ராதிகா மேனன், மனோரமா என்று முழுக்க முழுக்க அல்லி ராஜ்ஜியமாக ஒரு திரைப் படம் தயாராகிக் கொண்டிருக் கிறது. தமிழில் மட்டுமில்லை, கன் னடம், தெலுங்கு, மலையாளம், இந்தி என்று ஐந்து மொழிகளில், நாலுகோடி ரூபாய் பட்ஜெட்டில்!

இந்தப் படத்தில் ஆண்கள் யாரும் நடிக்கவில்லை. ஒரே ஒரு காட்சியில் ஒரு ஆண்- அதுவும் கொலை செய்யப்பட்டு, பிணமா கத் தோன்றுகிறார்! படத்தின் டைரக்டர் பிரியதர்ஷன்.

படத்துக்குக் 'கல்லூரி மலர்கள்' என்று தாற்காலிகமாகப் பெயர் சூட்டியிருக்கிறார். ஆனால், இன் னும் பளிச்சென்று ஒரு டைட் டிலை வைக்க யோசித்துக் கொண்டு இருக்கிறார்!






# ஆண்களுக்குத் தடா!





''சில வருடங்களுக்கு முன், ஒரு மராத்தி நாடகம் பற்றிக் கேள்விப்பட்டேன். முழுக்கவும் பெண்களே நடித்த, கோர்ட் காட்சிகள் மட்டுமே இடம்



• பிரியதர்ஷன்

பெறும் நாடகம் அது. அதன் கரு என்னை மிகவும் அசத்தியது. மும்பை சென்ற சமயம் அந்த நாடகத்தைப் பார்த்தேன். கிரைம் திரில்லரான அந்த நாடகத்தில் கையாளப்பட்டிருந்த இன்னொரு விஷயத்தையும் ரசித்தேன்.

"திருமணத்துக்குப் பின்னும் இரண்டு ஆண்கள், தங்கள் நட்பைத் தொடர முடிகிறது; ஆனால், அதுவே பெண்களுக்கு சாத்தியமில்லாமல் போகிறது என்ற அம்சம்தான் அது. இந்த மரபை மாற்ற முயலும் இரண்டு சிநேகிதிகளுக்கு ஏற்படும் பிரச்னைதான் கதை'' என்கிறார்.

பணக்காரப் பெண் ஜோதிகாவும், மிடில் கிளாஸ் பெண் சர்பாணி முகர்ஜியும் (ஹேராமில் நடித்த ராணிமுகர்ஜியின் தங்கைதான்

இவர்) நெருங்கிய சிநேகிதிகள். ஜோதிகாவுக்குக் கல்யாணத்துக்குப் பார்க்கிறார்கள். கல்யாணம் தங்கள் நட்பைப் பிரித்துவிடுமே என பயந்து, திருமணத்தைத் தள்ளிப்போட ஐடியா பண்ணுகிறார் ஜோதிகா. தனக்கு ஒரு காதலன் இருப்பதாகவும், அவன் ஃபாரினில் இருப்பதாகவும் ரீல்விட்டு, ஜெயிக்கிறார்.

சட்டென்று கதையில் ஒரு திருப்பம். திடீரென ஒரு ஆண், தான் ஜோதிகாவின் அயல்நாட்டுக் காதலன் என்று அடிக்கடி அவருக்குப் போன் பண்ணுகிறான். குழம்பிப் போகிறார்கள் சிநேகிதிகள். ஒரு குறிப்பிட்ட தினத்தில், தான் அவர்கள் ஹாஸ்டலுக்கு நேரே வருவதாய்ச் சொல்லி, வயிற்றில் புளியைக் கரைக்கிறான்.

அன்று ஜோதிகாவின் ஹாஸ்டல் அறையில் பிணமாய்க் கிடக்கிறான் ஓர் இளைஞன்! (காதலன்) போலீஸ் வருகிறது. யார் கொலையாளி என்று புலனாய்வு தொடங்குகிறார் போலீஸ் அதிகாரியான தபு.

"படம் பார்க்கிறவருக்கு நிமிடத்துக்கு நிமிடம் சுவாரசியம் தான். பலர் மீதும் சந்தேகம் வரும். கடைசியில் சஸ்பென்ஸ் உடைகிறபோது, ஆச்சரியத்தில் உறைந்து போவீர்கள்" என்கிறார்



படப்பிடிப்பில்

பிரியதர்ஷன்.

இந்தப் படத்தில் நடித்திருப்பவர்களில் பலர், மும்பையில் பிரபலமான மாடல்கள். இஷிதா அருண், பிரபல பாப்பாடகி இலா அருணின் மகள். இவர்கள் சினிமாவுக்குப் புதிது என்பதால், தேவையானபடி நடிக்க வைப்பது ரொம்ப சுலபமாக இருந்ததாம்!

தபு, ஜோதிகா போன்ற பிரதான நடிகைகள், தமிழ், கன்னடம், மலையாளம் மூன்று மொழிகளிலும், ஒவ்வொரு காட்சிக்கும் வசனம் பேசியிருக்கிறார்கள். தெலுங்கிலும், இந்தியிலும் 'டப்' செய்துவிடப் போகிறார்கள். சில கேரக்டர்களை, அந்தந்த மொழிக்கு மட்டும் என்று வைத்து, ரீ ஷூட் செய்திருக்கிறார்கள். அப்படி, தமிழ்ப் படத்தில் மட்டும் நடிப்பவர்கள் மனோரமா, வடிவுக்கரசி.

கடைசியாக பிரியதர்ஷனிடம் ஒரு கேள்வி கேட்டோம்:

"உண்மையான கொலையாளி யார்? ஜோதிகாவா?"

"இல்லை."

"சர்பாணிமுகர்ஜியா?"

"இல்லை."

"அப்புறம்?"

"காதைக் கிட்டே கொண்டுவாருங்கள் சொல்லுகிறேன்."

சொன்னார். வாவ்!

விடைபெறும்போது அதை எழுதிவிடுவதில்லை என்று கோடம்பாக்கத்து தெய்வங்கள் மீதெல்லாம் சத்தியம் வாங்கிக் கொண்டுவிட்டாராதலால்–ரொம்ப ஸாரி!

— எஸ். சந்திரமௌலி

## ADMISSION NOTIFICATION

# NATIONAL INSTITUTE OF LABOUR EDUCATION & MANAGEMENT (NILEM)

**Offers the following six months Diploma Courses by Correspondence.**

- TOTAL QUALITY MGMT. & ISO 9000
- BUSINESS MANAGEMENT
- PERSONNEL MGMT. & INDUSTRIAL RELATIONS
- HUMAN RESOURCES DEVELOPMENT
- ENVIRONMENT & POLLUTION CONTROL
- BUSINESS ADMINISTRATION
- QUALITY CONTROL & ISO 9000
- INDUSTRIAL SAFETY
- PRODUCTION MANAGEMENT
- SALES & MARKETING MANAGEMENT
- FINANCIAL MANAGEMENT
- OFFICE ADMINISTRATION
- LABOUR LAWS
- MATERIALS MANAGEMENT
- EXPORT & IMPORT MANAGEMENT
- QUALITY ASSURANCE & QS 9000
- ENVIRONMENTAL MGMT. & ISO 14000/14001

No formal qualification is required for joining the Courses. Each diploma has 4 written papers. Tuition Fee Rs. 700/- (including Study Materials & Model Question Papers). Examination will be conducted in all major centres in India. For detailed Prospectus & Application Form send Rs. 30/- by D.D./ I.P.O. in favour of **NATIONAL INSTITUTE OF LABOUR EDUCATION & MANAGEMENT** and apply to **NILEM** No. 59, Second Street, Parameswari Nagar, Adyar, Chennai - 600 020. Ph : 044 - 4911443.



# ஸ்ரீ டிராவல்ஸ்

194 - அ, முதல் மாடி, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 6.
போன்: 8418339, 5568620; இ - மெயில்: sritrave@satyam.net.in

**தூரக் கிழக்காசிய சுற்றுலாக்கள்**
சென்னை - பாங்காக் - பட்டாயா - சிங்கப்பூர் - கோலாலம்பூர் - சென்னை
பயணத் தொகை: ரூ.88,000/- பயண நாட்கள்: 13
புறப்படும் தேதி: 27.07.2000
(விமானக் கட்டணம், உணவு, விமான நிலைய வரிகள், விசா, உட்பட) பாஸ்போர்ட் உள்ளவர்களுக்கு மட்டும்

அந்தமான் தீவின் இயற்கை அழகை கப்பல் மூலம் கண்டு களியுங்கள்
சென்னை - போர்ட் பிளேர் - சென்னை
பயணக் கட்டணம்: ரூ.5,900/- பயண நாட்கள்: 11
புறப்படும் தேதிகள்: 18.08.2000 & 25.08.2000
16 பேர் கொண்ட குழுவினருக்கு 1 டிக்கெட் இலவசம்)

**ஸ்ரீ டிராவல்ஸ் பெருமையுடன் அளிக்கும் பாரத தரிசனம்.**
சென்னை - ஹைதராபாத் - ஔரங்காபாத் - அஜந்தா - எல்லோரா - சீரடி - பம்பாய் - அகமதாபாத் - துவாரகா - சோம்நாத் - கிர்காடுகள் - மவுண்ட் அபு - உதய்பூர் - ஜெய்ப்பூர் - அமிர்தசரஸ் - ஜம்மு வைஷ்ணவி - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - டில்லி - ஆக்ரா - வாரணாசி - அலகாபாத் - கல்கத்தா - புவனேஷ்வர் - பூரி - சென்னை
பயணத் தொகை: ரூ. 9,900/- பயண நாட்கள்: 24
புறப்படும் தேதி : 20.08.2000
(குறைந்த நாட்கள், குறைந்த இடங்கள் வேண்டுவோருக்கும் பிரத்தியேக வசதி உண்டு)

'லே' பள்ளத்தாக்கின் இயற்கை அற்புதங்களையும் ஹிமாசல பிரதேசத்தின் பனிமலையில் கனிந்து குலுங்கும் ஆப்பிள் பழங்களின் காட்சியையும் கண்டு மகிழுங்கள்
சென்னை - சண்டிகர் - குலு - மணாலி - லடாக் (லே) - டில்லி
பயணத் தொகை: ரூ.8,500/- பயண நாட்கள்: 13
புறப்படும் தேதி: 27.08.2000
(ஒரு வழி விமானப் பயணத்துடன்)

**சிக்கிம், டார்ஜிலிங், நேபாள சுற்றுலா**
சென்னை - கல்கத்தா - டார்ஜிலிங் - காத்மாண்டு - போக்ரா - முக்திநாத் (Optional) - வாரணாசி - அலகாபாத் - சென்னை
பயணத் தொகை: ரூ.6,900/- பயண நாட்கள்: 13
புறப்படும் தேதி: 10.09.2000
(விமானப் பயணம் வேண்டுவோருக்கு பிரத்தியேக வசதி உண்டு)

**தினசரி பாலாஜி தரிசனம்**
சென்னை - திருச்சானூர் - திருப்பதி - சென்னை
டீலக்ஸ் புஷ்பேக் வசதியுடன்
காலை சிற்றுண்டி, பகல் உணவுடன் மற்றும் விசேஷ தரிசனம் உட்பட ரூ. 450/- மட்டும்.
எமது அலுவலகத்தில் இருந்து தினசரி காலை 6.30 மணிக்கு புறப்பட்டு இரவு 10 மணிக்கு வந்து சேரும்

**LTC வசதி உண்டு**

**அனைத்து கிரெடிட் கார்டுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்**

மேற்கண்ட அனைத்து சுற்றுலாக்களுக்கும் அருமையான தங்கும் அறைகள், தென்னிந்திய சைவ உணவு, ரயில் கட்டணம், இடங்களைச் சுற்றிப் பார்க்கும் வசதி அனைத்தும் பயணக்கட்டணத்துக்குட்பட்டவை.

● மா.வி. கோவிந்தராஜன், ஆரணி
*?வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடு கின்ற மகான் தற்போது யாரேனும் உண்டா?*
! இருக்கிறாரே, திருமங்கலம் முத்துராமலிங்கம்! அடடா! அறிக்கையிலே என்ன ஒரு உருக்கம்.

● ஆர். ராமசாமி, திருவண்ணாமலை
*? படிப்பை ஏற்றுக் கொள்வதுபோல் பண்பை யும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மாண வர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளாரே காஞ்சி பெரியவர்?*
! படிப்பு வேறு பண்பாடு வேறு என்ற நிலை நீடிக்கும்வரை காஞ்சி சுவாமிகளின் அறிவுரை அவசியமானதுதான்.

● கங்கா கணேசன், பொறையாறு
*? நிர்வாகச் செலவைக் குறைத்து வளர்ச்சிப் பணிகளுக்கு நிதியைப் பயன்படுத்த வேண் டும் என்று முதல்வர்களுக்குப் பிரதமர் கண் டிப்புடன் அறிவுரை கூறியுள்ளது பற்றி...?*
! பிறருக்கு உபதேசிப்பதை மத்திய அரசு தானே கடைப்பிடித்து முன்னுதாரணமாக விளங்கட் டும்.

● பா. சிவம் முருகன், சிவகங்கை
*? ஜெ. சொன்ன கல்யாணக் கதை, அதற்கு கலைஞர் பிடித்த கிடுக்கிப்பிடி பற்றி...?*
! எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிட்டு விட் டதே ஜெ.வின் நீதிமன்ற நாடகங்கள்! நவரசங் களையும் அல்லவா நடித்துக் காட்டிவிட்டார்.

● ஜோ. பன்னீர்செல்வம், சென்னை-84 ❑
*? 25 ஆண்டுகளுக்கு முன்பு, அன்றைய பிர தமர் இந்திராவால் நெருக்கடி நிலை பிரகட னம் செய்யப்பட்டதற்கும் அதன் மூலம் நாட்டுக்கு ஏற்பட்ட அவமானங்களுக்கும் காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் சோனியா நாட்டு மக்களிடம் இப்பொழுது மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற வாதம் சரியா...?*
! இந்திராவே மன்னிப்புக் கேட்டு, மக்களும் மன்னித்துவிட்டார்கள்; அப்புறமென்ன! எமர் ஜென்ஸியை வைத்து அரசியல் பண்ணிக் கொண்டிருப்பதை விடுத்து, பி.ஜே.பி. அரசு நல்ல ஆட்சியை அளிக்க முயற்சி செய்யட்டும். அதுதான் அடுத்த தேர்தலில் அவர்களைக் காப் பாற்ற முடியும். பழசைக் கிளறுவது அல்ல.

● ஆர்.பி.ஜெயச்சந்திரன், பூனாம்பாளையம்.
*? 'மூப்பனாரை முதல்வராக்கிக் காட்டுவேன்' என்ற சுப்ரமண்ய சுவாமியின் லேட்டஸ்ட் சபதம் பற்றி...?*
! மூப்பனாருக்குப் போதாத காலம் ஆரம்பித்துவிட்டது என்று அர்த்தம்.

● சி.மகேஷ், சென்னை – 26 ★

• உபதேசம்!



• உருக்கம்!



## இந்திராவுக்காக

*? 58 பேர் உறைய வைத்துச் சாகடிக்கப்பட்ட இங்கிலாந்து கொடுமை எதை உணர்த்து கிறது.*
! பிழைப்பு தேடி அயல்நாடு செல்லும் ஏழை மக்களின் பாதுகாப்பின்மையை.

● கே. ஆர். வேலுச் சாமி, அன்னூர்.
*? 'அரசியல் அசுத்தமாகிவிட் டது; ஓய்வு பெறப் போகிறேன்' என்று கூறியுள் ளாரே ராமகிருஷ்ண ஹெக்டே?*
! 'அரசியல் அசுத்தமாகி விட்டது; அதனால் பதவி



• நவரசம்!



• சபதம்!




நாடமாட்டேன்; ஆனால் அரசியல் சுத்தமாகும் வரை ஓய்வும் பெறமாட்டேன்' என்றால் பாராட்டலாம். ஹெக்டே போன்றவர்கள் இப்படிக் கூற வேண்டும் என்றுதான் எதிர்பார்க்கிறேன்.

● பொ. பொன் ராஜ்குமார், பொள்ளாச்சி

*? இன்டர்நெட் பயன்படுத்துவோர் எண்ணிக்கை நாளொன்றுக்கு ஒன்றரை லட்சம் உயர்கிறதாமே?*

! புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தினால் தான் அவர்களும் முன்னேற முடியும். நாடும் முன்னேறும். இல்லையெனில் பின்னடைவுதான்.

● ஆர்க்.எழிலன், திருச்சி 25

*? 2003ல் மின்வெட்டே வராது என்று அமைச்சர் ஆற்காடு வீராசாமி கூறியுள்ளாரே? இது சாத்தியமாகுமா? அல்லது தேர்தல் ஸ்டண்டா?*

! கலைஞரின் தலைமையும் இப்போதுள்ள

# சோனியா மன்னிப்புக் கேட்க வேண்டுமா?

ஊக்கமும் தொடர்ந்தால் சாத்தியமாகக் கூடியதுதான்.

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

*? மு.க.ஸ்டாலின் மட்டும் பிறக்காமலிருந்திருந்தால் சென்னை, சிங்காரச் சென்னையாக மாறியிருக்காது என்று சைதை கிட்டு சொல்கிறாரே...?*

! சைதை கிட்டு பிறக்காமலிருந்திருந்தால் தலைவருக்கு வெண்சாமரம், தளபதிக்கு வெண்சாமரமாக மாறியிருக்காது.

● எம். அசோக் ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி

*? அன்பு, ஆசை - என்ன வித்தியாசம்?*

! அன்பு - வழங்கப்படுவது. ஆசை - அனுபவிக்க விழைவது.

● அசார், சென்னை - 18

*? ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு அதன் அரசாங்கம் காரணமா? மக்களின் உழைப்பு காரணமா?*

! அரசாங்கத்தையும் மக்களையும் வழி நடத்திச் செல்லும் பொறுப்பில் உள்ள தலைவர் காரணம்.

**❑ ரூ.50 பரிசு பெறுபவர் :**
ஜோ. பன்னீர்செல்வம்
21, டாக்டர் அழகப்பா ரோடு,
புரசைவாக்கம், சென்னை - 84

**★ ரூ.25 பரிசு பெறுபவர் :**
சி. மகேஷ்
155/1பி, மேற்கு சிவன் கோயில் தெரு,
வடபழனி, சென்னை - 26



• ராமகிருஷ்ணன்

# கையெழுத்து கோல்மால்? கண்டுபிடிப்பது எப்படி!

**டான்சி நிலம் வாங்கியது சம்பந்தமான வழக்கில், சில ஆவணங்களில் உள்ள கையெழுத்து தன்னுடையதே அல்ல என்று சிறப்பு நீதிமன்றத்தில் கூறியுள்ளார் முந்நாள் முதல்வர் ஜெயலலிதா. ஒரு கையெழுத்து உண்மையானதா, போலியா என்பதை விஞ்ஞானபூர்வமாக எப்படிக் கண்டுபிடிக்கிறார்கள்? தமிழ்நாடு தடய அறிவியல் துறையின் துணை இயக்குனர் (தஸ்தாவேஜுகள்) ராமகிருஷ்ணனைச் சந்தித்துக் கேட்டோம்.**

"கையெழுத்து ஒரிஜினலா, போலியா என்பதை எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்?"

"சந்தேகத்துக்குரிய கையெழுத்து எங்களுக்குத் தரப்பட வேண்டும். கூடவே, ஒப்பு நோக்கப்பட வேண்டிய மாதிரிக் கையெழுத்தில் ஏழெட்டும் அனுப்பப்பட வேண்டும். சந்தேகத்துக்குரிய கையெழுத்தும், மாதிரிக் கையெழுத்துகளும் ஏறத்தாழ சம காலத் தவையர்க இருந்தால் ரொம்ப சௌகரியமாக இருக்கும்.

"கைரேகையைப் போலவே, ஒவ்வொரு தனி நபரின் கையெழுத்தும் மாறுபட்ட குணாதிசயங்கள் கொண்டவை. ஒருவரின் கையெழுத்தில் இயற்கையான ஓட்டம் இருக்கும். போடுகிறபோதே இயல்பான ஒரு வேகம் இருக்கும். ஒரே நபரின் ஏழெட்டுக் கையெழுத்தும் ஒன்றுபோல் இராது. துளி துளி வித்தியாசம் இருக்கும்.

சந்தேகத்துக்குரிய கையெழுத்தையும், அதே நபரின் மாதிரிக் கையெழுத்துகளையும் ஒப்பிட்டு, ஒத்துப் போனால், ஒரிஜினல் கையெழுத்துதான் என்ற முடிவுக்கு வந்து விடலாம்.

"போலிக் கையெழுத்து, இதற்கு நேர் மாறான குணாதிசயங்கள் கொண்டிருக்கும். இயற்கையான ஓட்டம் இருக்காது; இயல்பான வேகத்தைக் காண முடியாது; கையெழுத்துகளில் இடம் பெற்றுள்ள எழுத்துக்கள் சிரத்தையுடன் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு இருக்கும்; போடுகிறபோது பேனாவை எடுத்து, மறுபடி வைத்து, மறுபடி எடுக்கிற தொடர்ச்சியின்மையைக் காணலாம். போட்டு முடித்தபின், ஆங்காங்கே ரீ-டச் செய்யப்பட்டிருக்கும்.

"ஒரு கையெழுத்து நிபுணரால், தமது அனுபவத்தின் அடிப்படையில் இவற்றை மிகச் சுலபமாகக் கண்டுபிடித்து விட முடியும். காரணம், ஒருவர் இன்னொருவரது கையெழுத்தைப் போட்டுப் போட்டுப் பலதடவை பயிற்சி எடுத்துக்கொண்ட பின், (போலிக்) கையெழுத்துப் போட்டால்கூட, தான் போலிக் கையெழுத்துப் போடுகிறோம் என்ற உணர்வு காரணமாக மிக நுணுக்கமாக கவனித்தால் காட்டிக் கொடுத்து விடக் கூடிய சில வேறுபாடுகள் இருக்கவே செய்யும்."

"போலிக் கையெழுத்து என்று உறுதியான பின், அதைப் போட்டவர் யார் என்று எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்?"

"ஏறத்தாழ முன் கூறிய முறையில்தான். போலிக் கையெழுத்து போட்டிருப்பார் என்று யார் மீது சந்தேகம் ஏற்படுகிறதோ, அவரது மாதிரிக் கையெழுத்துகளைப் போலிக் கையெழுத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து உண்மையைக் கண்டுபிடித்து விட முடியும். சில சமயங்களில் நாலைந்து பேர் மீது சந்தேகம் எழுமானால் அவர்கள் ஒவ்வொருவரின் கையெழுத்து சாம்பிள்களைப் பெற்று, ஒப்பிட்டு, போலிக் கையெழுத்துப் போட்டவர் யார் என்று கண்டுபிடித்து விட முடியும்"

சந்திப்பு: **பாரதி**

படம்: **வெங்கடேஷ்**

# ஸ்ரீலக்ஷ்மி முத்து மாளிகை

வழங்கும்

## முத்து பரிசுத்திட்டம்

கீழே கொடுக்கப்பட்டுள்ள

ரூ.**3450/-** மதிப்புள்ள பொருட்கள் உங்களுக்கு

ரூ.**1250/-**க்கு **கிடைக்க வேண்டுமா?**

| பொருட்கள் | M.R.P. |
|---|---|
| முத்துக்கள் 30gm | 1,200/- |
| பட்டன் முத்துக்கள் 50CT | 1,250/- |
| China Jade Beads 5gm | 300/- |
| நவரத்தின செட், (A.D) | 700/- |
| மொத்த மதிப்பு | 3,450/- |

உதாரணம் 10-18

| | | |
|---|---|---|
| 17 | 10 | 15 |
| 12 | 14 | 16 |
| 13 | 18 | 11 |

[illegible] 12-20

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

### இதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

**12** முதல் **20** வரையுள்ள எண்களை உபயோகித்து கீழே கொடுக்கப் பட்டுள்ள வெற்று கட்டங்களை நிரப்புங்கள். கட்டத்தின் கூட்டுத் தொகையும் எந்தப் பக்கமிருந்து கூட்டினாலும் **48** வர வேண்டும். ஒரு கட்டமும் காலியாக இருக்கக் கூடாது. ஒரு எண்ணை ஒருமுறை தான் உபயோகிக்க வேண்டும். உங்களுக்கு உதாரணத்திற்கு 10 முதல் 18 வரை உபயோகித்து கூட்டுத் தொகை 42 வரும். ஒரு மாதிரி கொடுக்கப் பட்டிருக்கிறது.

ஐயா, நான் இத்துடன் ரூ.**250/-** DD/M.O அனுப்பியுள்ளேன். எனக்கு மேலே குறிப்பிட்டுள்ள பொருட்களை அனுப்பி வைக்க வேண்டுகிறேன். அதை நான் ரூ **1000/-** கொடுத்து பெற்றுக் கொள்வேன் என்று உறுதியளிக்கிறேன்.

பெயர் ..............................................

விலாசம் ..............................................

..............................................

..............................................

மாவட்டம் .............................. Pin ..............

தேதி                கையொப்பம்

அனுப்ப வேண்டிய முகவரி

**Sri Laxmi Muthu Maligai**

Shop No.9, Kasi Arcade, G.Flr, 116, Thyagaraya Road,
T.Nagar, Chennai - 600 017. ☎ : 8220856

**FIRST 1000 ENTRIES GET ONE DHRISTI - RING FREE**

நீங்கள் அனுப்பும் கூப்பன்களுடன் உங்களுது பிறந்த தேதி, நேரம், ஊர் இவற்றை எழுதி அனுப்பினால் இலவசமாக ஜாதகம் பார்த்து அதிர்ஷ்ட கல் போன்ற விவரங்களை தபாலில் அனுப்பப்படும்

*NOT FOR A LUCKY DRAW / LOTTERY BUT FOR SALES PROMOTION ONLY*



# ஆத்ரேயா

இப்பொழுது

புதுப்பொலிவுடன்



**ரெடிமேட் ரவிக்கைகள், பெட்டிகோட்ஸ், – நைட்டீஸ்**

- தாங்கள் போட்டு பார்ப்பதற்காகவே இரண்டு பிட்டிங் ரூம்கள்
- நீங்களே உங்கள் ப்ளோஸ்களை தேர்ந்தெடுக்கும் வசதி
- வாங்கும் ரவிக்கைகளில் ஏதேனும் சிறிய ஆல்ட்ரேஷன் இருந்தால் அதை உடனுக்குடன் நிவர்த்தி செய்யும் அனுபவம்
- கல்யாண பெண்ணிற்கு ரவிக்கைகள் தைத்து கொடுக்கும் சந்தோஷம்
- உங்களுடன் அன்புடன் பழகும் எங்களது பெண் விற்பனையாளர்களின் உன்னதமான சேவை

## ATHREYA GARMENTS™

1, Jambulinga Street, (Entrance from Valluvar Kottam High Road), Nungambakkam, Chennai - 600 034.
Phone: 822 6586 Fax No. 5360076. Tlx: 041-6753 RAJA IN
E.Mail: ols@md3.vsnl.net.in

*Web: http/www.iypol.com/athreya*

All major credit cards Accepted

CHARY'S

# சொஜ், சரியான பாட்டி!



மாதவனுக்கு ஹை டென்ஷன் வோல்டேஜ், –மன்னிக்க–ஹை வோல்டேஜ் டென்ஷன். தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளாததுதான் பாக்கி. அதைத் தேடிப் பிடித்து பிய்த்துக் கொள்ள வேண்டுமென்றால் டென்ஷனோ டென்ஷன். பாவம் +2வில் ஆரம்பித்து, ஹார்வர்ட் எம்.பி.ஏ. படித்து முடிப்பதற்குள், பாதி முடிசூடா மன்னனாகிவிட்டான். எஞ்சிய சாகுபடியை, கொஞ்சங்கூடக் கருணை தாட்சண்யமின்றி, அழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டுள்ள இந்த 'கோலா வார்' வேறு.

கார்கில் வாரைக் காட்டிலும் பன்மடங்கு பெரியது 'கோலா வார்.' மாமியார் மருமகள் சண்டையை வேண்டுமென்றால் அதற்கு ஈடாகச் சொல்லலாம். அத்தனை கோரமான வார்.

ஏதோ ஒரு தகர டப்பா கம்பெனியில் நிம்மதியாக வேலை செய்து கொண்டிருந்தவன், போதாத காலம் ஜோக்கோலா கம்பெனியில் ஜிஎம். சேல்ஸாக வந்து மாட்டிக் கொண்டான்.

தினம் ஒரு பாட்டிலாவது போட்டி கம்பெனி ஜிப்சி கோலாவைக் காட்டிலும் கூடுதலாக விற்றாக வேண்டுமென்பது ஆணை.

எதிரி சமசக்தி, எமசக்தி பலசாலி. கோலா வாங்கு, மூடியின் உள்புறம் சுரண்டு, பரிசு பெறு என்று மாதவன் விளம்பரப்படுத்தினால், அவன், கோலா வாங்க வேண்டாம், மூடியின் மேல் சுரண்டி இலவசமாக கோலாவும் பரிசும் பெறுங்கள் என்று அலறுகிறான். விட்டுவிட முடியுமா?

இவன் பாப்சிங்கரை மாடலாக்கினால் அவன் பாங்கரா கொண்டு உதைக்கிறான். பிரபல பாட்ஸ்மேனை விளம்பரத்தில் இறக்கினால் அவன் கில்லி எகிற வைக்கும் பௌலரிடம் செல்கிறான். சரி மிஸ் வேர்ல்டு, மினி ஸ்கர்ட் என்று போனால் போட்டிக்கு மிஸ் யுனிவர்ஸ், மின் மினிமினி... யப்பா! எல்லைகளுக்காக உலகில் நடக்கும் பல போர்களுக்கிடையே ஒரு எல்லையற்ற போர்!

பொறுமையிழந்து ஹாலில் எட்டு போட்டுக் கொண்டிருந்தான் மாதவன். ஆங்கிலப் பத்திரிகையில் கிரிக்கெட் சூதாட்டத்தைப் பற்றிப் படித்தபடி அவன் பாட்டியும் வெகு நேரமாக இவனை கவனித்தபடி இருந்தாள்.

பாட்டி கொஞ்சம் படித்த பாட்டி– எஸ்.எஸ்.எல்.சி. இவனைப் படிக்க வைத்த பாட்டி. புஷ்பம் எனும் அவள் பெயரை மாதவன் செல்லமாக ஃப்ளவர் என்று அழைப்பான். பதிலுக்கு பாட்டி அவனுக்குச் சூட்டிய காரணப் பெயர் 'எக்ஸ்ட்ரா லார்ஜ்'

''என்ன ப்ளவர், ஓரக் கண்ணால முறைக்கறே?''

''நா எங்க உன்னை முறைக்கிறது? இது வரைக்கும் 1547 எட்டு போட்டிருக்கே. ரொம்ப டென்ஷனோ?''

''டென்ஷ...னா....வா? 100% கலப்படமில்லாத அக்மார்க் டென்... சீசன் ஆரம்பிக்கிறதா...?''




"ஆரம்பத்திலேயே ஜிப்சியை விட அதிகம் விக்கணும், அதை அடிக்கணும்!"

"ப்ளவர்!"

"வியாபாரம்னா வேறென்ன இருக்க முடியும்? சோடாவுக்கு ஏன் இப்படி முட்டிக்கறீங்களோ?"

"ப்ளவர்! சோடா இல்ல கோலா!"

"சரி, என்ன செய்யப்போற?...லாரா தத்தாவுக்கு போன் போடவா?"

"ம்.... எதுவும் புரியலை. இதில பிரச்னையே, ஜிப்சி புதுசா வந்திருக்கிற பிரபல சினிமா ஹீரோவை வைச்சு பிரமாதமா விளம்பரங்கள் தயாரா வைச்சிருக்கான். எடுத்து உட்டா நாங்க அரோகரா! ப்ளவர், அதுக்கு அஞ்சு கோடி செலவு!"

"அஞ்சு கோடியா? காலணா கோலாவ நாலணாவுக்கு மேல விக்கிறதே பாவம்..."

"அதவிடு ப்ளவர்! அதை எதிர்க்க என்கிட்ட எதுவுமில்ல, புதுசா தயாரிக்க நேரமுமில்லை. அதனால ரொம்ப பயமாயிருக்கு!"

"எங்க காலத்து இஞ்சி சுரஸத்தை 'ச்சில்' பண்ணி சர்க்கரை போட்டா உங்க கோலா. அத அசுர விலைக்கு விற்க ஆயிரம் எம்.பி.ஏ..."

"ப்ளீஸ் ப்ளவர்! உன் கதையை விடு. இது அமெரிக்கன் மல்டி நேஷனல்."

"என்ன அமெரிக்கன்? வெறும் gun. நம்ம ஊர் மஞ்சளை பேடண்ட் பண்ணறான், பஸ் ஸ்டாண்டில விக்கிற இஞ்சி மொரப்பாவ ஸ்டைலா ஜிஞ்சர் மிண்ட்னு ப்ளேன் ஒளம்பும்போது தர்றான்... ம்... என்னவோ எக்ஸ்ட்ரா லார்ஜ், ஐ லவ் மை இந்தியா!"

மாதுரி

"அநியாயத்துக்கு டீவி. பார்த்தே கெட்டுப் போயிட்டே. ஆள விடு. நான் யோசிக்கணும்!" என்றபடி மீண்டும் எட்டு போடத் தொடர்ந்தான்.

**பா**ட்டியும் கிரிக்கெட் சூது கட்டுரையில் மூழ்கினாள். தப்பு பண்ணது வெளியே தெரிஞ்சதும் தடால்னு கடவுள் கால்ல விழுறான். நம்ம கலாசாரத்தில இது தெரிஞ்சே எதை ஆரம்பிச்சாலும் பகவான்கிட்ட சரணாகதி அடைஞ்சிட்டு ஆரம்பிக்கறோம். வரும் முன் காப்பு! எந்த கம்பசூத்திரத் துக்கும் விடை நம்மகிட்டயே இருக்கு. தெரியாம ஏனோ எங்கெங்கோ அலையறோம். சிந்தனை இப்படி ஓட, இன்னொரு ட்ராக்கில் கிரிக்கெட் துகிலுரிப்பைப் படித்தபடி இருந்தாள்.

"என்கிட்ட 100 கோடி இல்ல. எழுபதே தேறாது." "நீ ஒரு கோடி கொடுத்து வால் க்ளாக் வாங்கலையா?" "நீ துபாய்ல கேர்ள் பிரெண்டோட பத்து லட்சம் செலவு செய்தவன்தானே?" சே! கேவலம்!

கிரிக்கெட் வெறிக்கெட்டா போச்சு. மானங் கெட்ட-மக்கள் கிரிக்கெட்டே மூச்சுனு நினைச்சதாலே வந்த வம்பு!

பிரபல ஊழல் வீரர்களின் கலர் போட்டோக்களைப்

பார்த்துக் கொண்டிருந்த பாட்டிக்கு திடீரென ஒரு "பளிச்"!

அவசரமாக மாதவனை அழைத்தாள்.

"XL, உருப்படியா ஐடியா ஏதாவது கிடைச்சுதா?"

"ஏன், உன்கிட்ட இருக்கா?"

"யெஸ்!"

"வாட்?"

"ஜிப்சி கோலா சேல்ஸை ஒழிக்கலாம்!"

"என்னோடது கூடணும்!"

"மடையா, அது நடந்தா இது நடக்காதா? கிட்ட வா" என்று மாதவன் காதில் திட்டத்தைக் கிசுகிசுத்தாள். கேட்டதும் அதிர்ந்து போனான்.

"ப்ளவர், இது அநியாயமில்லையா!"

"காலணா கோலாவ..."

"சரி சரி சரி..."

டைரக்டரிடம் திட்டத்தை விளக்கி விட்டு நடுங்கியபடி எதிரில் உட்கார்ந்திருந்தான் மாதவன்.

"ம்....நீ ஹார்வர்ட் எம்பிஏவா?"

"யெஸ்.... சார்..."

"அப்படிப் போடு! அதான் இப்படி ஒரு பிரில்லியன்ட் ஐடியா!" என்று சீட்டிலிருந்து எழுந்து அவன் கைகளை இழுத்துக் குலுக்கினார்.

மறுநாள். குமரி முதல் கிழவன் வரை நாடே அல்லோலகல்லோலப்பட்டது. கோலாவும் கிரிக்கெட்டும் போதாதா நாட்டைக் கலக்க!

சாலைகளில், பத்திரிகைகளில், வானொலியில், டீ.வி.யில், இன்டர்நெட்டில், எல்லா மீடியாவிலும் மாதவனின் எதிரியான ஜிப்சி கோலாவின் வண்ண வண்ண விளம்பரங்கள் – அனைத்தும் ஊழலில் சிக்கித் தவிக்கும் கிரிக்கெட் ஹீரோக்களைக் கொண்ட பழைய விளம்பரங்கள். எங்கும் ஒரே களேபரம்!

திரும்பிய இடமெல்லாம் ஊழல் வீரர்களைப் பார்த்த மக்கள் பொங்கி எழுந்தார்கள்.

"கோடி கோடியா ஊழல்ல உறிஞ்சிட்டு கோலாவா உறியற.... நீ தொட்ட இந்த கோலாவ தொடறேனா பார்!"

"ச்சீ, He's no more my hero யா, cheat! He's a big zero! No more ஜிப்சி!" என்று சிறுசுகள் முகம் சிவக்க ஜோக்கோவிற்கு மாறின. பெரிசுகள்கூட.

"உன்ன என் புள்ள போல நினைச்சு நீ குடிக்கிற கோலா, போடற ஷூ எல்லாம் வாங்கினேனே, துரோகம் பண்ணிட்டியே!" அவர்கள் பங்கிற்குக் கசப்பைக் கொட்டி, ஜோக்கா கோலாவில் இனிப்பைத் தேடினர்.

விட்ட குத்தில் அவர்கள் முகம் வீங்கி விட்டது. ஜோக்காவின் கல்லா வெடிக்கிறது. நுரை தள்ளும் சேல்ஸ்!

அவமானப்படுத்தும் இந்த விளம்பரங்களை வெளியிட்டது யாரென்று கண்டு பிடிக்க ஜிப்சி கோலாவுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

லீகல் டிபார்ட்மெண்ட் துணையோடு நாட்டின் மிகப் பெரிய லாயர்களைத் தொடர்பு கொண்டார்கள்.

ஜோக்க கோலா மீது கேஸ் போடலாம், அடுத்து, ஹீரோக்கள் சீரோக்களானதால் தானே இந்த நஷ்டம். அவர்கள் மீதும் வழக்குப் போட்டு நஷ்டஈடு கேட்கலாம்...

அதனிலும் மேலான யோசனை.... ஜோக்காவின் பெரிய மூளை மாதவன். ஹார்வர்ட் எம்.பி.ஏவைக் கொக்கி போட்டு ஜிப்சிக்கு இழுக்க வேண்டியது...!

– முடிவு செய்து விட்டார்கள்! அவர்களுக்கென்ன தெரியும் – அந்தக் காலத்து எஸ்.எஸ்.எல்.ஸியின் மகிமை பற்றி...!



"கபில்தேவ் பேட்டியைப் பார்த்து நம்ம தலைவர் கெட்டுப் போயிட்டாரு!"

"எப்படி?"

"டீ.வி. பேட்டில தான் ஊழலே செய்யலைன்னு அழறாரு!" – பா. ஜெயக்குமார்

# சர்க்கரை நோய்க்கான
# புதிய ஹெர்பல் ஸிரப்

**உலக சர்க்கரை நோயாளிகள்- ஐந்து பேரில் ஒருவர் இந்தியர்!**

சர்க்கரை நோய்க்கான இந்தப் புதிய ஹெர்பல் ஸிரப், நோயாளியின் உடல்நலனையே கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டது.

தற்காலத்தில், இரத்தத்தில் சர்க்கரையின் அளவினை உடனே குறைக்கக்கூடிய திறன்வாய்ந்த பல மருந்துத் தயாரிப்புகள், மலிவான விலைகளில் எளிதில் கிடைக்கின்றன. இதனால், கட்டுப்பாடில்லாத சர்க்கரைச் சத்து மிகுந்த உணவினை உட்கொண்டு, உடனே மருந்தினையும் உட்கொள்ளும் வழக்கம் சர்க்கரை நோயாளிகளிடையே பரவலாகக் காணப்படுகிறது. ஆனால், திடீர் திடீரென மாறும் இரத்தச் சர்க்கரையின் அளவுகளால் நாளடைவில் இரத்தக் குழாய்களின் சுருங்கிவிரியும்தன்மை பாதிப்புக்குள்ளாகும் என்பதை எவருமே உணர வாய்ப்பில்லை.

இம்மாற்றங்களால் நாளடைவில் இரத்தக்குழாய்ச் சுவர்கள் தடிப்புற்று, உடலின் முக்கிய உறுப்புகள் பாதிப்புக்குள்ளாகி, குணப்படுத்த இயலாத மாற்றங்களை அடைகின்றன. உதாரணமாக, இரத்தக் குழாய்களில் ஏற்படும் குறைபாடுகளால் சிறுநீரகச் செயலிழப்பு, கண் பார்வையிழப்பு, நரம்பு மண்டல பாதிப்பால் கை, கால்களில் உணர்ச்சியின்மை, ஆறாத புண் ஏற்படல், மாரடைப்பு, பக்கவாதம் போன்றவை ஏற்படலாம்.

இவற்றுக்கெல்லாம் தனித்தனியே மருத்துவம் மேற்கொண்டு நம் உடல்நிலையை சீரழிவிலிருந்து காப்பாற்ற முயல்வதை விட, வராமல் தடுப்பதே புத்திசாலித்தனமாகும். இதற்கெனவே,

## அறிமுகப்படுத்துகிறோம்
## சர்க்கரை நோய்க்கான புதிய ஹெர்பல் ஸிரப்

மேற்குத் தொடர்ச்சி மலையில் வளரும் மூலிகைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டது. இதில் சேரும் மூலிகைகளின் மருத்துவப் பண்பினைக் குறிக்கும் மருத்துவக்குறிப்புகள் பழங்கால சித்த மருத்துவ ஏடுகளில் காணப்பட்ட போதிலும், பல வகையான பரிசோதனைகளையும் கடந்த பின்னரே இம்மருந்து அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. சோதனைக்குள்ளாக்கப் பட்ட பலரில் இம்மருந்து சிறப்பாகச் செயலாற்றியுள்ளது.

**ஹெர்பல் ஸிரப் உடலில் செயல்படும் விதம்**

- கணையத்தைச் சீரமைத்தல்
- இன்சுலின் சுரப்பினைத் தூண்டுதல்
- ஈரல் மற்றும் சிறுநீரகத்தைப் பாதுகாத்தல்
- பிற உறுப்புகள் பாதிப்பதைத் தடுத்தல்
- சர்க்கரை மற்றும் கொழுப்பு வளர்-சிதைமாற்றத்தை ஒழுங்குபடுத்தல்
- எந்த வித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாமல் செயல்புரிதல்.

**ஹெர்பல் ஸிரப்பின் நோக்கம்**

இந்த ஸிரப்பின் நோக்கமே சர்க்கரை நோயாளிகள் தினமும் மருந்து உட்கொள்வதிலிருந்து தடுத்தலே ஆகும். இந்த ஸிரப்பை பரிந்துரைக்கப்பட்ட கால அளவு அருந்தி வந்தால் சர்க்கரையின் அளவு கட்டுபாட்டிற்குள் வந்து விடும். மீண்டும் சிலகாலம் அருந்திய பிறகு உணவுக் கட்டுப்பாடு மற்றும் யோகப் பயிற்சிகளின் மூலமே சர்க்கரையின் அளவினை கட்டுக்குள் வைக்கலாம். ஏனெனில், நீண்டகாலம் உட்கொள்ளப்படும் எந்த மருந்துமே நாட்பட்ட நிலையில் கல்லீரல் மற்றும் சிறுநீரகத்தில் பாதிப்பினை உண்டாக்கலாம்.

**Dr. J. HEMASUJATHA, B.S.M.S., M.D. (Acu).,**

**ANNAI HOSPITAL**

o,Vasan Street , T. Nagar, Chennai - 600017. Near Panagal Park - ARR Complex **Tele : 8252988**

**குறிப்பு:** ஸிரப்புடன் சர்க்கரை நோயாளிகளுக்கான உணவுக் கட்டுப்பாடு அட்டவணை மற்றும் யோகாசனங்களை விளக்கும் வரைபடங்களுடன் கூடிய பகுதியும் இணைத்து வழங்கப்படும்.



## ரகசியம்

✉ 'பயந்து கொண்டே ஆடி னேன். ஆதலால்தான் நான் நன்றாக ஆடவில்லை. பியர்ஸ் நன்றாக ஆடி பிரெஞ்சு ஓப் பன் டென்னிஸில் வென்றார்' என்று மார்டினஸ் கூறுவது தான் வெற்றியின் ரகசியம். தன்னம்பிக்கை இருந்தால் அச் சம் தானாகவே விலகும்.

சென்னை-73, கேவி. ராமன்.

## கண்ணீர், கண்ணீர்

✉ கண் பார்வையில்லாத நகைச்சுவை எழுத்தாளர் ஏ.வீரப்பன் பற்றிய 'இது காமெடி அல்ல' செய்தி படித் ததும் கண்ணில் நீரை வர வழைத்து விட்டது. அவருக் குக் கண் பார்வை கிடைக்க இறைவனை வேண்டுகிறேன்.

திருச்சி – 11,

உஷாமுத்துராமன்.

## உண்மை மட்டும்

✉ ஜஸ்வந்த் சிங்கின் இலங்கை விஜயமும், கட னுதவி அறிவிப்பும், சந்திரி காவின் கரங்களைப் பலப் படுத்த உதவலாமே தவிர, இலங்கை யுத்தத்தை முடிவுக் குக் கொண்டு வரவோ, தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காணவோ உதவாது என்பதை, நெத்தியடி யாய் தலையங்கத்தில் சொன்னவிதம் நூற்றுக்கு நூறு உண்மையே!

கும்பகோணம், எஸ்.கே. மூர்த்தி.

## பொருத்தம்

✉ 'நிரை நேர் நேர்'

**பரிசாக ஒரு புளிமாங்காய்!**

என்ற தலைப்பி லான சிறுகதையில் தமிழாசிரி யரைக் காட்டியதோடு அந்தத் தலைப்புக்குப் பொருத்தம் சேர்க்க முயன்ற பெ. நாய கிக்கு நான் சிபாரிசு செய்யும் பரிசு - 'புளிமாங்காய்'.

சென்னை – 11,

அய்யாறு வாசுதேவன்.

## தனியிடம்

✉ தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகளில் தனக் கெனத் தனி இடம் பிடித்துக் கொள்ள எத்தகைய முயற்சி களை சன் தொ.கா. நிறுவனம் மேற்கொள்கிறது என்பதை வாசகர்கள் உணர முடிந்தது தங்கள் கட்டுரை வாயிலாக.

சென்னை – 26, சி. மகேஷ்.

## சொல்லாமலே

✉ டைலட் பற்றிய பா. ராக வனின் மலரும் நினைவு, டைலட்டின் இறுதி ஊர்வலத் தில் ஊரே கலந்து கொண்ட தற்கான காரணத்தை சொல் லாமல் சொல்லியது.

காஞ்சிபுரம், எம்.டி. ரவிகாந்த்

## பச்சக்

✉ 'பெரும்பாலான வீடு களில் பேய்களிருக்கின்றன: என் வீட்டிலில்லை தொலைக் காட்சி' என்ற வரிகளோடு முடிந்திருந்த யுகபாரதியின் 'பேய்வீடு' கவிதை மனத்துள் இறுக்கமாய் ஒட்டிக் கொண் டது.

காசிபாளையம்,

ஆ. சக்திவேலன்.

## மெஜாரிடி உணர்வு

✉ பெரும்பாலா னோருடைய தார்மீகமான கோபத்தை, மனத்தாங்கலை, வேதனையை நல்லி செட்டியாரு டைய (காச்மூச்) ''மனசு போதும்'' சிறப்பாகவே பிரதி பலித்தது.

வில்லிவாக்கம்,

கேவி. லட்சுமிநாராயணன்.

## குழப்பம்

✉ 'மனித உரிமைச் சட்டங் களும் சில குறிப்புகளும்' நூல் பற்றிய விமர்சனத்தில் எடுத் துக்காட்டப்பட்ட ஒரு சரித் திரச் சம்பவக் குறிப்பு பிழை யாக உள்ளது. மகாசாசனம் என்ற 'மேக்னகார்ட்டா' ஜான் அரசன் காலத்தில் 1215ம் வருடம்தான் கையெழுத்திடப் பட்டது. நூலில் குறிப்பிடப் பட்டிருப்பதாக நீங்கள் எழுதி யுள்ள 1297ம் ஆண்டிலுமல்ல; எட்வர்ட் அரசனாலும் அல்ல!

சென்னை – 21, அரு. சங்கர்.

(மகாசாசனம், ஜான் அர சர் காலத்தில் 1215-ம் வரு டம் கையெழுத்திடப்பட் டாலும் அதுநெறிமுறைப் படுத்தப்பட்டதும் அரசவை அங்கீகாரம் பெற்றதும் 1297ம் ஆண்டு, எட்வர்ட் மன்னன் காலத்தில்தான், என்கிறார் நூலாசிரியர் ராதாகிருஷ் ணன். இருப்பினும் குழப்பங் கள் தவிர்க்க, தேவையான திருத்தங்கள் இரண்டாம் பதிப்பில் செய்யப்படும் என் கிறார். – ஆசிரியர்)

**வட்டமேஜை**

**தம் அலுவலக வாழ்க்கையில் சந்தித்த சில நகைச்சுவை சம்பவங்களை 'இன்று ஒரு தகவல்' தென்கச்சி சுவாமிநாதன் நினைவு கூர்கிறார்.**



சென்னை வானொலி நிலையத்தில் திருக்குறள் வி. முனுசாமி அவர்கள் உரையை நான் ஒலிப்பதிவு செய்தேன். 'சான்றோர் சிந்தனை' நிகழ்ச்சிக்காக அவர் வந்திருந்தார். ஒலிப்பதிவு முடிந்தது.

'இங்கே வா' என்று என்னை அழைத்தார். போய் 'என்ன?' என்று கேட்டேன்.

'இன்று ஒரு தகவலுக்கு மேட்டரையெல்லாம் எங்கேயிருந்து எடுக்கறே?' என்று கேட்டார்.

எப்படி எழுதறே என்று கேட்கவில்லை. எங்கேயிருந்து 'எடுக்கறே'ன்னு கேட்டார். எம்மேல அவ்வளவு நம்பிக்கை!

'உங்க பாக்கெட்ல இருந்துதான் எடுக்கறேன்' என்றேன். 'ஆமாம் ஸார். உங்க கூட்டங்களுக்கு நிறைய வருவேன். குறிப்பெடுப்பேன். அதைக் கொஞ்சம் என்

# கிதிகலக்கிய சொப்பன வாழ்வு!

ஸ்டைல்ல மாத்தித் தருவேன். காரைத் திருடி பெயின்ட் மாத்தி புது கார் போல விற்கிறதில்லையா, அப்படித்தான் இது. உங்கள் கூட்டம், மத்தவங்க கூட்டம் இப்படி நிறைய போவேன். நிறைய படிப்பேன்' என்று விளக்கம் தந்தேன்.

கார் வரை சென்று அவரை வழியனுப்பப் போனேன். கார்க் கதவைத் திறந்தவுடன், 'ஒரு நிமிஷம்... உங்க பாக்கெட்ல இருந்து தான் எடுத்தேன்'னு நான் சொன்னேன். இதைக் கேட்டு உங்களுக்குக் கோபமே வரலியா? என்று கேட்டேன்.

'எதுக்கு எனக்குக் கோபம் வரணும்? நானே மத்தவங்க பாக்கெட்ல இருந்து தானே எடுக்கறேன்' என்று சொல்லிக் கொண்டே விர்ரென்று காரில் பறந்து விட்டார் திருக்குறளார்!

அடையாறிலிருந்து வானொலி நிலையம் வரை ஒருமுறை ஆட்டோவில் வந்தேன். டிரைவரிடம் பேசிக் கொண்டே வந்தேன். 'இந்தக் குரலை எங்கேயோ கேட்டிருக்கிறோமே' என்று அவருக்கு ஒரு சந்தேகம். அந்தச் சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள என்னிடம் பேச்சு கொடுத்துக் கொண்டே வந்தார் அவர். சாந்தோம் வந்ததும், 'வண்டியை எங்க நிறுத்தணும்?' என்று கேட்டார். 'ஏ.ஐ.ஆர்.' என்றேன். அவருக்கு நான் யார் என்பது கிட்டத்தட்ட உறுதியாகி விட்டது. வானொலி நிலைய வாசலில் வண்டி நின்றது. இறங்கினேன்.

"ஸார்... ஒரு சந்தேகம். நீங்கதான் இன்று ஒரு தகவல் சொல்றதா?" என்றார் ஆட்டோ டிரைவர். அவருக்கு இன்னும் சந்தேகம் முழுவதுமாய் நீங்கவில்லை போல!

"ஆமாம். நான்தான்."

"போங்க ஸார்... நீங்க 'பேண்ட்'ல்லாம் போட்டிருக்கீங்க" என்று அவர் சொன்னதும் நான் ஆடிப் போய்விட்டேன்.

"என்னப்பா சொல்றே நீ! நான்தாம்பா அது. ஏதோ நான் பேண்ட் போடறதே பாவம் போல சொல்றியே!"

"நீங்க சொல்ற விஷயங்கள்லாம் கேக்கறச்சே காவி வேட்டி கட்டி, தாடி வளர்த்து ஒரு சாமியார் மாதிரி இருப்பீங்கன்னு நினைச்சேன் ஸார்... ஸாரி..." என்றாரே பார்க்கலாம்.

**எ**லெக்ஷன் சமயத்தில எங்களுக்கெல்லாம் டென்ஷன் வந்துடும். ஏன்னா ஏகப்பட்ட விதிமுறைகள். எந்த நிகழ்ச்சியிலும் அரசியல்வாதிங்க பேரோ, அவங்க கட்சியோட பேரோ, சின்னத்தின் பேரோ வந்துவிடக் கூடாது. முக்கியமா சினிமாப் பாட்டு போட்டாக்கூட அதில் இதெல்லாம் வராம ரொம்ப கவனமாப் பாத்துக்கணும். 'காதுல' விளக்கெண்ணெய் விட்டுக்கிட்டு கவனிக்கணும்.

ஒருநாள் எனக்கும் என் நண்பர் ஆனந்தனுக்கும் சினிமாப் பாட்டு போடற ட்யூட்டி. என்ன பண்ணலாம், எப்படி ஒவ்வொரு பாட்டையும் தேர்ந்தெடுக்கறதுன்னு யோசிச்சப்போ நண்பர் ஆனந்தன் ஒரு அருமையான ஐடியா கொடுத்தார்.

பழைய பாடல்கள்ல ஒரு ரிகார்டை எடுத்தார். தியாகராஜ பாகவதர் பாடிய பாட்டு அது. தைரியமாப் போட்டார். 'சொப்பன வாழ்வில் மகிழ்ந்து...'ன்னு பாட்டு தொடங்கியது. 'எப்படி என் ஐடியா!'ங்கற மாதிரி என்னைப் பார்த்தார்.

***"அந்தப் பிச்சைக்காரனுக்கு ரொம்பக் குசும்பு!"***

***"என்ன செஞ்சான்?"***

***"என்கிட்ட தர்மப்பிரபுவே அப்படிங்கறான்... எங்கப்பாகிட்ட தர்மசிவாஜியே அப்படிங்கறான்"***

***- தஞ்சை ராகவ் மகேஷ்***



அடுத்த லைனே 'சுப்பிரமணிய சாமி' என்று வந்தது. ஒரு நிமிடம் திக்கென்று ஆனது. பாடல் 'லைவ்' ஆகப் போவுது. என்ன பண்றதுன்னு தெரியலை. கலங்கிப் போயிட்டோம். பழைய பாட்டுங்க மேல ரொம்ப நம்பிக்கை வச்சது தப்பாப் போச்சு. நல்ல காலமா எங்க மேல ஆக்ஷன் எதுவும் எடுக்கல்லே...

நான் ரொம்பவும் ரசிக்கிற உண்மை நகைச்சுவை நிகழ்ச்சி இது.

**எ**ன்னோட முதல் ரசிகையைப் பத்திச் சொல்லணும். நான் திருநெல்வேலி நிலையத்துல விவசாய நிகழ்ச்சி செஞ்சிகிட்டிருந்த போது என் குரலைப் பாராட்டி ஒரு நாள் ஒரு கடிதம் வந்தது. பெண்ணின் கையெழுத்து. எனக்கு ஒரே த்ரில். எனக்கு வந்த முதல் பெண் கையெழுத்துக் கடிதம். பாலான்னு பேர் போட்டிருந்தது.

'அம்பாசமுத்திரத்தில போஸ்ட் ஆபீஸ் பக்கத்துல முதல் வீடு'ன்னு வழியெல்லாம் எழுதியிருந்தது அந்தப் பொண்ணு. ஒருதரம் அந்தப் பக்கம் ஏதோ ஒலிப்பதிவுக்காக போக வேண்டியிருந்தது. 'சரி... இந்த ட்ரிப்ல எப்படியும் பாலாவைப் பாத்துடணும்'னு முடிவு பண்ணேன்.

இடத்தைக் கண்டுபிடிச்சுட்டேன். வாசலில் ஒரு அழகான பெண் குனிந்து கோலம் போட்டுக்கிட்டிருந்தா. அருகே போய், 'இங்கே பாலான்னு...' இழுத்தேன். என்னை நிமிர்ந்து பார்த்துட்டு, 'ஆமாம்... நீங்க...'ன்னு அவளும் இழுத்தாள். 'நான் திருநெல்வேலி ரேடியோ ஸ்டேஷன்ல வேலை செய்யறேன். என் குரல் ரொம்ப நல்லா இருக்குன்னு எழுதி பாலான்னு கையெழுத்துப் போட்டு..." நான் முடிக்கவில்லை.

"ஓ௱ம்... உங்களுக்கும் லெட்டர் போட்டுட்டாளா... இதே வேலை அவளுக்கு. எப்பவும் டிரான்சிஸ்டரும் கையுமா அலையறது. பக்கத்துல கத்தை கத்தையா போஸ்ட்கார்டு. எழுதிக்கிட்டே இருக்கிறது தான் வேலை. உள்ளே நேரா போங்க. பாலா பாட்டி ரேழியிலதான் உட்கார்ந்திருக்கா. போய்ப் பாருங்க..."

பாட்டியா? த்ரில் போன இடம் தெரியவில்லை! இருந்தாலும் சட்டென்று திரும்பி வர்றது நாகரீகமில்லை என்பதால் ரேழிக்குப் போனேன். பாலா பாட்டியைப் பார்த்தேன்.

"நீதான் அந்தப் புள்ளையாண்டானா? உன் குரல் எனக்கு ரொம்பப் பிடிக்கும். நல்லா இரு" என்று ஆசிர்வாதம் கிடைத்தது.

சந்திப்பு : **ராணிமைந்தன்**

படம் : **வெங்கடேஷ்**



# S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

**முதியோர் சேவை பெரியது!**

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு **(80G, Income Tax Excemption)** உண்டு

**S.V. HOME FOR AGED**
#8, Janakiraman Colony, Near Arumbakkam Bus Stand,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 475 5700; 475 1356. Pager : 9610 - 114668
Web Page : http/www.chennaibiz.com/svhome
Email: svhome@chennaibiz.com

மாணிக்க வாசகர் அருளிய **திருவாசகம்**

விலை ரூ. 100/-

(மூலமும் தெளிவுரையும்) புலவர் கருப்பூர் மு.அண்ணாமலை அவர்கள் இனிய எளிய நடையில் அற்புதமான உரை விளக்கம் எழுதியுள்ளார்கள்.

**ஜோதிட நூல்கள்**

- மகாகவி காளிதாசரின் உத்தர காலாமிர்தம்.......... 150.00
- அனுபவ மனை சாஸ்திரம்..... 50.00
- ஜோதிட ரகசியங்கள்............ 20.00
- ஜோதிட இரத்தினம் 108....... 25.00
- திருமண யோகமும் செவ்வாய் தோஷ பரிகாரங்களும்...... 40.00
- வாழ்க்கைத்துணை அமையும் யோகம்............ 40.00

**மருத்துவம் யோகாசனம்**

- டென்சனைப் போக்க வழிகள்.. 25.00
- மருந்தில்லாத மனநலமருத்துவம்............. 40.00
- இளமைக்கு ரகசிய வழிகள்.... 50.00
- யோகா சிகிச்சையும் செய்யும் முறையும்........... 40.00
- ஆரோக்கிய வாழ்வுக்கு யோகாசனங்கள்............... 20.00

**பக்தி நூல்கள்**

- ஸ்ரீ ராமானுஜர்....................... 70.00
- ஸ்ரீ விநாயக புராணம்............ 85.00
- ஸ்ரீ விஷ்ணு புராணம்............ 40.00
- ஸ்ரீ காயத்ரி மஹாத்மியம்........27.00

VPPயில் புத்தகங்களைப் பெற தெளிவான முகவரியுடன் தேவையான புத்தகங்களுக்கு எழுதுங்கள்.
உங்கள் ஊர் புத்தகக் கடைகளிலும் கிடைக்கின்றது.

**குமரன் பதிப்பகம்**
2, முத்துகிருஷ்ணன் தெரு, பாண்டிபஜார் அருகில்,
தியாகராயநகர், சென்னை–600 017. ✆: 8264046

**3**

நெற்றியில் பார்த்திபனுக்கு வியர்வை துளிர்க்க ஆரம்பித்தது. நாக்கு வரண்டு விட, தொண்டை கால்பந்தின் அளவு உப்பியது போல் தோன்றியது. முதல் முறை 'சாரி டீச்சர்' என்ற போது காற்று மட்டுமே வந்தது. இரண்டாவது



முறை 'சாரிங்க டீச்சர்' என்ற போது, குரல் வெளி வந்து விட்டது. டீச்சர் முறைக்கப் போகிறார்கள். பார்த்திபன் விதிர் விதித்து நின்றான்.

மோகனுக்கும் மெலிதாக இதயத் துடிப்பு அதிகரித்தது. நிலா ஒளியில் எண்ணெய் தேய்த்துக் குளித்து வரப்போகும் கோப வெம்மையைச் சமாளிக்க நினைத் திருக்க வேண்டும்.

பெண்களில் சிலர் பயந்து கொண்டிருந் தார்கள். பலர் சாதாரணமாக இருந்தார்கள். இந்தப் பயல்களின் வருகைப் பாவத்தில் எங்களுக்குப் பங்கில்லை என்பது போல அவர்களது தோற்றம் தெளிவாக இருந்தது.

காந்தாமணி டீச்சர், "பரவாயில்லை.. பரவா யில்லை" என்று சொல்லிவிட்டு, அழுத்தமான குரலில், "இங்க என்னப்பா வேலை, உங்க ரெண்டு பேருக்கும்?" என்றார்.

மோகன், "ஸ்டிரைக் சம்பந்தமாகப் பேச வந்தோம்" என்றான்.

"எப்போ ஸ்டிரைக்?"

"திங்கட் கிழமை."

"எம் பேர எதுலயும் இழுத்துராதிங்கப்பா" என்றார் சிரித்துக்கொண்டே.

பார்த்திபன் தயாரித்த குற்றப் பத்திரிகையில் மூன்று சென்டிமீட்டருக்கு அப்போதே இடைவெளி விழுந்து விட்டது. ஆனால் டீச்சர் ஏன் இப்படி திடீரென்று இவ்வளவு நல்லவராக



வும் அன்பாகவும் மாறினார்? ராமலிங்கனின் பிரச்னை உயிராபத்து வரை சென்று மீண்டதில் காருண்ய மதகுகள் திறந்து கொண்டு விட்டன.

"பஸ்ஸைக்கீது கல்லெடுத்து எறிஞ்சு அழிச்சாட்டியம் பண்ணிடாதீங்க. அமைதியா பண்ணுங்க எதுவானாலும்" என்றான். பிறகு வந்த காரியமாய் 12-பி கவிதாவைப் பார்த்து ஏதோ பேச ஆரம்பித்தார்.

பார்த்திபனுக்கு, போகிற போக்கைப் பார்த்தால் திங்கட்கிழமை ஹெச்-எம்மே ஸ்டிரைக் அறிவித்து விடுவாரோ என்றிருந்தது. எதிர்க்கட்சிகள் ஸ்டிரைக் அனுசரிக்க முடிவெடுத்த தினத்தில் ஆளுங்கட்சியே ஸ்டிரைக் அறிவித்தால் எப்படி இருக்கும்?

காந்தாமணி டீச்சர் படியிறங்கும் போது, "பேச வேண்டியது இருந்தா சீக்கிரம் பேசிட்டு கிளாசுக்குப் போங்கப்பா" என்று சொல்லிவிட்டுக் கடந்தார். தாண்டிப் போகும் அவரை நன்றியுடன் பார்த்தான் பார்த்திபன். அவர் வராவிட்டால், கைகழுவியதும் நேராக அவர்கள் வகுப்புக்கு திரும்புகிறவர்களாயிருந்தார்கள். உபசரிப்பின் உணவுக்குப் பின் மறைந்து நின்று கைகழுவிய சாகசத்திற்குப் பின் அவர்களுக்கு ஸ்டிரைக்கும் உலகமும் மறந்திருந்தது.

**க.சீ. சிவகுமார்**

மோகனுக்கு, 'டியர் கேர்ள்ஸ்' என்று கை சொடுக்கிக் கூப்பிட்டு ஸ்டிரைக்கைப் பற்றி லெக்சர் கொடுக்க வேண்டும் எனத் தோன்றியது. ஆனால் கற்பனைக்கும் நிஜத்துக்கும் உள்ள இடைவெளி பரிதாபகரமானது. ஜோதி ஜாமென்ரி பாக்ஸைத் திறந்து ஒரு பென்சிலை எடுத்துப் பார்த்திபனிடம் கொடுத்தான்.

"இது எதுக்கு, காந்தி பென்சிலு?" என்றான் இரண்டு இன்ச் பென்சிலை வாங்கிக் கொண்டு.

"இத வாங்கிக்கிட்டு போகத்தான வந்



திங்க?" என்றாள், ஜோதி முகத்தை சீரியசாக வைத்துக் கொண்டு. இவ்வளவு நகைச் சுவையைப் பார்த்திபன் எதிர்பார்த்திருக்க வில்லை.

"ச்சே, இது இல்ல. ஸ்டிரைக் விஷயமா?"

"திங்கட்கிழமைதானே? ஸ்டிரைக் பண்ணுங்க."

இதை அனிதா சொன்னாள். அவள் இப்படிச் சொன்ன விதத்தில் ஸ்டிரைக் குக்கு பருண்மையான உருவம் வந்து விட்டது. களிமண் பொம்மை பண்ணுகிற மாதிரி, கலப்பை பண்ணுகிற மாதிரி ஸ்டிரைக்கையும் 'பண்ணி', '27-ஆம் தேதி பண்ணிய ஸ்டிரைக்' என காட்சியகத்தில் வைத்து விட்டால் எவ்வளவு நன்றாய் இருக் கும்! ஆனால் ஸ்டிரைக்கே உன் வடிவம் தான் என்ன?

"ஸ்டிரைக் பண்றதுன்னா நீங்களும் வரணும்."

"நாங்க வந்து என்ன பண்றது?"

"மரம் வெட்டணும். அடிமரத்துல ரம்பத்தைப் பிடிச்சிக்கிட்டு ஆளுக்கொரு பக்கமா இழுக்கணும். என்னங்க நீங்க?"

"ஊர்வலம் போவோம். அதுல நீங்கள் லாம் கூட வரணும்."

பார்த்திபன் உண்மையில் சுடுப்பாகி விட்டான்.

"ச்சே... வெயில்ல நடக்கணுமா? நம்மால முடியாதப்பா" என்ற ராஜலட்சுமி, பின் னலை முன்னே விட்டு பின்னிப் பின்னிக் காட்டிக் கொண்டிருந்தாள்.

"பொது அறிவு ரொம்ப அதிகமுள்ள அரசியல் தலைவர் யார் தெரியுமா?"
"தெரியுமே, G.K. மூப்பனார்தான்!"
- தஞ்சை ஆதி



"ஆமா பார்த்தி. நீங்கள்லாம் போங்க" என்றாள் அனிதா கொஞ்சலாக.

மோகன் இப்போது ஊர்வலத்தைப் பள்ளி மைதானத்திலேயே ஒரு சுற்று சுற்றி வந்து முடித்துக் கொள்ளலாம் என நினைத் தான். வெயில், நிலவு, இரவு, பனி, மழை என்றெல்லாம் பார்த்தால் எதிர்ப்பைப் பதிவு செய்வது எப்படி? - பார்த்தி வேண் டிக் கொண்டான்.

"ஜோதி! நீதான் பார்த்துச் சொல்லணும்! எல்லாரும் போனாத்தான் வெயிட்டா இருக்கும்."

"வெயிட்டா இருக்கணும்னா அன்வர் அலி வந்தாலே போதுமே" என்றாள் அனிதா.

மோகன் கோபமாக, "ஜோக்கெல்லாம் வேணாம், வருவீங்களா? மாட்டீங்களா?" என்றான்.

"டென்ஷன் ஆகாதே" பார்த்திபன் சாந்தப்படுத்தினான்.

சுதா இப்பொழுது, "நான் ஊர்வலத்துல போறதைப் பார்த்தா எங்கப்பா தோலை உரிச்சுடுவாரு" என்றாள். சுதாவின் தகப் பனாரை மோகனும் பார்த்திபனும் வெறுத் தார்கள். சொன்னதால் அழிக்க முடியாத சுதாவின் வார்த்தைகளிலிருந்து தோலுரிக் கும் ஆயுதங்களுடன் அவரவர் அப்பாக்கள் ஞாபகங்களில் உதித்துக் கிளம்பினார்கள். ஊர்வலத்தில் பங்கெடுக்கும் பெண்களின் விருப்ப வண்டியை ஒற்றை வரியில் குடை சாய்த்தது சுதாதான்.

"முடியாது" என்றார்கள் கடைசி மொத்தமாய். ஊர்வலம் மட்டுமல்ல; எந்த ஒன்றுக்கும் வெளியிலிருந்தும் ஆதரவு தர லாம்; உள்ளிருந்தும் ஆதரவு தரலாம் என் கிற சமரசத்துக்கு உலகம் ஆளாகி விட்டது. பெண்கள், ஊர் வலத்தில் கலந்தால், வெளியிலிருந்து ஆதரவு. உள்ளே கோட்டவு னில் தங்கிவிட்டால் உள்ளிருந்து ஆதரவு. இருவரும் சோர்வுடன் வகுப்பறைக்குத் திரும்பினார்கள்.

வெள்ளிக் கிழமை மாலை உலகம் ஏக முடிவுக்கு வந்திருந்தது. திங்கட்கிழமை காலை மணியடித்ததும் தாங்கள் கூட வேண்டியது பிரேயரில் அல்ல. பள்ளிக்கு வெளியே நீளும் தார்ச்சாலை. அங்கிருந்து பங்களாவுக்கு ஊர்வலம். வெள்ளிக் கிழமைக்குள் அனைத்து மாணவர்களுக்கும் இது உறுதிப்பட்ட போது ஆசிரியர்களுக்கு இது தெரியாமற் போகுமா என்ன?

அந்த சாயங்காலத்தில் நான்கைந்து

ஆசிரியர்களைச் சுமந்து கொண்டு ஒரு கார் ரெபியமதியாக் கூடலூருக்குப் போனது. அதாவது எஸ்.பி.எல். லோகநாதனின் ஊருக்கு. தார்ப்பாதை, மெட்டல் ஜல்லிப் பாதை, மண் பாதை என சகல ஊடகங் களையும் கடந்து ஒரு கார் தங்கள் வீட்டுக்கு – அதுவும் ஆசிரியர்களைக் கொண்ட கார் வந்ததை லோகுவின் அப்பா பழனிச்சாமி யால் நினைத்திருக்கவே முடியவில்லை. பயல் ஒரு மகா பாதகத்தையோ மகா சாதனையையோ நிகழ்த்தி விட்டான். அது என்ன எனப் புரியாமல் நின்றார்.

"வாங்க.. வாங்க..." என்றார் வாத்தியார் களைப் பார்த்து. அவரது மனைவி வேலாத் தாள் தண்ணீர் தந்து உபசரித்து விட்டு காப்பி போடப் போனாள்.

லோகநாதன் எதிர்பார்த்தது போலவே, 'ஸ்டிரைக்'கைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டார்கள். இனி அது தானே நினைத் தாலும் தடுக்க முடியாத இடத்துக்குப் போய் விட்டது என்று தெரிவித்தான். ஆசிரியர்கள், பள்ளியின் வரலாற்றுக்கு ஒவ்வாத விஷயம் எதுவும் நடக்க வேண்டாமே என நயந்து வலியுறுத்தினர்.

'நீரியல் வல்லுனர் ப.செ. கந்தசாமி, மந்திரி மலர்வண்ணன், அர்ஜுனன் ஐ.ஏ.எஸ். ராமகிருஷ்ணன் ஐ.பி.எஸ். எழுத்தாளர் திருமால் முருகன்' எல்லோரும் நம் பள்ளியின் முன்னாள் மாணவர்கள் என்றனர்.

கஞ்சாக் குடித்து கைகால் விளங்காமல் பஸ் ஸ்டாண்டில் புழுதிக்கிடையில் செத்துக் கிடந்த கணேசமூர்த்தியின் நினைவு வந்தது லோகநாதனுக்கு.

அவன் மட்டும் எந்த ஸ்கூலாம்? ஆனால் அதைக் கூறி வாதிடும் துணிச்சல் லோகநாதனுக்கு இருக்கவில்லை.

இரவு பதினொரு மணிக்கு ஒரு ஒப்பந்தம் தயாரானது. பசித்த வயிறுகள் விரைவில் முடிவுக்கு வந்து விடுகின்றன. பழனிச்சாமி யாரையும் சாப்பிடாமல் கார் ஏற அனு மதிக்கவில்லை. சாப்பிட்டு நிறைவாகக் கிளம்பினார்கள். ஸ்டிரைக் நடக்க அனு மதித்து விட்டார்கள். அதன் கடைசியில் இருந்தது ஒரு வேட்டு – ஸ்டிரைக் ஏற் பாட்டாளர்களுக்கு.

**தி**ங்கட்கிழமை மணியடித்தது. ஹோவென ஒரு இரைச்சலும் ஊதா வெள்ளைகளும் திரண்டு தார்ச் சாலையில் வரிசை பாவித்தது. வகுப்புவாரியாக



''தலைவருக்கு பேச்சு எழுதிக் கொடுக்கவே ரெண்டு மூணுபேர் இருக் காங்க. அவங்க எழுதி தயாரிக்கறததான் பேசுவாரு!''
''அதுக்காக, 'பிள்ளையார் சுழி, பக்கம் 1'ன்னு பேச்சை ஆரம்பிக்கிறது சரியில்லை!''
- தஞ்சை ஆதி

தலைவன்கள் முன் நிற்க, நான்கு நான்கு பேராக நிரையாவர்க்கும் முன்னால் லோகு. நான்கின் தொடர் வரிசைக்கு துவக்கர் களாகி பார்த்திபன், பிரகாஷ், அன்வர் அலி, கலைச்செல்வன் நின்றிருந்தனர். ஊர்வலத் தில் கடையருக்கும் கடையனாய் மோகன் நின்றிருந்தான்.

சாலையின் இருமருங்கிலும் கே.என். காரும் எம்.எஸ்.பி. காரும் நின்றிருந்தது பார்த்திபனுக்கு வியப்பாயிருந்தது. இவர்கள் எதற்கு? என்று பொருமினான். கூடவும்தான் வரட்டுமே என்றுமிருந்தது. கூட வந்து பங்களாமேடு வரை நடந்து கடைசியாய் லோகநாதனின் இடிக்குரல் கேட்டு நாணட்டும்.

'ஆங்கில ஆசிரியர் தன் கவனத்தைப் பாடம் நடத்துவதில் காட்டுவது நல்லது' என்ற வரி, பார்த்திபன் தயார் செய்தது. கண்டன அறிக்கையில் அதை அவன் வாசிக்கிறபோது ஆங்கிலாரின் முகம் கோணுகிற போக்கைப் பார்க்க வேண்டும்.

ஊர்வலத்துக்கு கோஷங்கள் தயாரித் திருக்கலாம். ஊர்வலத்துக்கே இவ்வளவு பாடாயிற்று. இனி கோஷம் வேறா?

பள்ளியின் கதவு முன்னால் ஊர்வலத் தின் வால் இருக்க, தலை யுவஜீவன் இல்லத் தில் இருந்தது. லோகு நடக்கத் துவங்கினான்.

ஒழுங்கற்றுப் பிதுங்கி நெளியும் ரயில் தொடர் போன்றிருந்தது ஊர்வலத் தோற் றம். பிடித்தமானவர்களின் அருகாமையில் மாணவர்கள் செருகிக் கொண்டார்கள்.



**99** வயதை நெருங்கும்போது தூக்கத்தில் மரணமடைந்த பார்பரா கார்ட்லாண்ட் தமது முதல் நாவலை எழுதி வெளியிட்டபோது அவருக்கு வயது 21.

அவருடைய நாவல்களில் விரசமோ ஆபாசமோ இருந்ததில்லை. இவர் எழுதிய 723 நாவல்கள் 36 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உலகம் முழுவதும் பத்து லட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகி உள்ளன. மிக அதிக அளவில் நாவல்கள் எழுதியவர் என்ற வகையில் இவரது பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது.

சுற்றுச் சூழல் பாதுகாப்பு கருதி மரங்களை வெட்டக் கூடாது என்பதில் மிகவும் தீவிரமாக இருந்த இவர், தாம் இறந்தபிறகு தம்மைப் புதைக்க மரப் பெட்டியைப் பயன்படுத்தக் கூடாதென்று கேட்டுக் கொண்டார். அதனால் இவரது உடல் கனமான அட்டையில் செய்யப்பட்ட சவப் பெட்டியில் வைத்து புதைக்கப்பட்டது.

**- மகேந்திரன்**

மெலிதான உடற்தாக்குதல்கள், வசவுகள் ஆங்காங்கே நிகழ்ந்தன.

கரூர் சாலையில்தான் பங்களமா மேடு இருந்தது. டிராவலர்ஸ் பங்களா, ஒரு துவக்கப் பள்ளி, நூலகம், ஆதி திராவிடர் மாணவர் விடுதி, பஞ்சாயத்து அலுவலகக் கட்டடம் எனப் பல கட்டடங்களை உள்ளடக்கிய அந்த வளாகம் பங்களாமேடு என அழைக்கப்பட்டது. கட்டடங்கள் நீங்கலாக ஒரு பொதுக் கூட்டத்தைத் தாங்கும் வெற்றிட வசதியும் உண்டு.

இந்தப் பயல்கள் தினம் இப்படி நடந்தால் தேவலை என எண்ணியவண்ணம் பொது மக்கள் பலர் வேடிக்கை பார்க்கத் திரண்டு விட்டனர். பொதுக் கூட்டத் திடலில் மாணவர்கள் அமர்ந்தாயிற்று. தெற்கே பார்த்து அமர்ந்தவர்களுக்கு முன் வடக்கே பார்த்து நின்ற லோகு மலைப் பிரசங்கி போலிருந்தான்.

ஆனால் அவனது வலதும் இடதுமான புறங்களில் M.S.P. மற்றும் K.N. சாரைப் பார்க்கையில் சிலுவையில் அறையப்பட்ட யேசு போலவும் தோன்றியது.

தொண்டையைச் செருமிக் கொண்டு துவங்கினான்.

"அருமை மாணவர்களே...!" போச்சு இது கே.என். சாரின் வார்த்தை. சத்தியமாய் பார்த்திபன் எழுதியதல்ல.

"நமது பள்ளிக்குக் குடிநீர் வசதி மற்றும் கழிப்பறை வசதியின் பொருட்டு" பொருட்டாம்... ச்சே... இதில் தமிழைய்யாவும் புகுந்தாயிற்று.

'லோகுவே! லோகுவே! நீ நண்பர்களைக் கைவிட்டாய்.'

"அரசாங்கத்தாரை வலியுறுத்தி இந்த ஒருநாள் அடையாள..." பார்த்திபன் ஓடிப் போய் லோகுவின் சட்டையைப் பிடித்தான். கே.என். சார் விலக்கி விட்டார். ஸ்டிரைக் இவ்விதமாக முடிந்து பங்களா மேடு வெறிச்சோடியது.

பஞ்சாயத்து ஆஃபீஸின் கிழக்கு வேப்ப மரத்து நிழலிலிருந்து பிரகாஷின் தோளில் பார்த்திபன் சாய்ந்து அழுதான்.

"ஏமாத்திட்டான்... ஏமாத்திட்டான்" அமராவதி நதியின் பழைய இரவு பார்த்திபனைக் கேலி செய்திருக்க வேண்டும்.

"கண்ணைத் தொடச்சுக்கோ... இந்தா" பிரகாஷ் முதலில் கைக்குட்டை ஒன்றை நீட்டினான். கண்ணைத் துடைத்து முடித்ததும் கடிதம் ஒன்றை எடுத்துத் தந்தான்.

அது, அனிதாவின் கடிதம்.

(தொடரும்)

## 'கிளியோபாட்ரா' டெய்லர்

பழம்பெரும் ஹாலிவுட் ஸ்டாரான எலிசபெத் டைலருக்கு, லேட்டஸ்ட்டாய் ஒரு கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது. உலக அழகி கிளியோ



பாட்ராவைப் போன்ற கெட் அப்பில் எலிசபெத் டைலரின் பொம்மை ஒன்று வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அமெரிக்காவில் ஏக வரவேற்பு.

**- எம்.**

# பொன்னியின் செல்வன்

### பன்னிரண்டாம் அத்தியாயம்

## தூமகேது மறைந்தது!

நெடு நேரத்துக்கு அப்பால் பழுவேட்டரையருக்கு சிறிது நினைவு வந்த போது, அவர் ஒரு பயங்கரமான போர்க்களத்தில் இருப்பதைக் கண்டார். வாள்கள் ஒன்றோடொன்று மோதி ஜணஜணவென்று ஓங்கார ஒலி கிளப்பின. ஒரு பக்கத்தில் ஜய பேரிகைகள் முழங்கிக்கொண்டிருந்தன. அவற்றுடன் சேர்ந்து ஆயிரக் கணக்கான குரல்கள் "மகா ராஜாதிராஜ பாண்டிய மன்னர் வாழ்க! பாண்டிய விரோதிகள் வீழ்க!'' என்று கோஷமிட்டன. இன்னொரு பக்கத்தில் ஆயிரக் கணக்கான குரல்கள் "கங்க மன்னன் விழுந்துவிட்டான்! ஓடுங்கள்! ஓடுங்கள்!'' என்று கூக்குரலிட்டன. ஓடுகிறவர்களைத் தடுத்து நிறுத்தும் குரல்கள் சிலவும் கேட்டன.

அப்போது திடீரென்று ஒரு கணம் போர்க்களத்தில் நிசப்தம் நிலவியது. பழுவேட்டரையர் சுற்றுமுற்றும் பார்த்தார். இரண்டு கால்களையும் இழந்த விஜயாலய சோழனை இன்னொரு நெடிதுயர்ந்த ஆஜானுபாகுவான மனிதன் தன் தோள்களிலே தூக்கிக்கொண்டு வந்தான். தோள்மீது அமர்ந்திருந்தவன் இரண்டு கரங்களிலும் இரண்டு ராட்சத வாள்களை ஏந்திக்கொண்டிருந்தான். "சோழ வீரர்களே! நில்லுங்கள்! பல்லவர்களே! ஓடாதீர்கள்! ஆறிலும் சாவு! நூறிலும் சாவு! என்னைப் பின் தொடர்ந்து வாருங்கள்! எதிரிகளைச் சின்னாபின்னம் செய்வோம்!'' என்று அவன் கோஷித்தான். ஓடத் தொடங்கியிருந்த சோழ - பல்லவ வீரர்கள்

## அமரர் கல்கி





விஜயாலய சோழனைப் பார்த்து விட்டு, அவன் வார்த்தைகளைக் கேட்டு விட்டு நின்றார்கள். அவர்களுடைய முகங்களிலே சோர்வும் பீதியும் நீங்கி மீண்டும் தீரமும் வீரக் களையும் தோன்றின. பின்வாங்கியவர்கள் முன்னேறத் தொடங்கினார்கள். இந்த அதிசய மாறுதலுக்குக் காரணமாயிருந்த விஜயாலய சோழனை மீண்டும் பழுவேட்டரையர் பார்த்தார். அவனைத் தோளிலே தாங்கிக்கொண்டிருந்த வீரனையும் பார்த்தார். அதிசயம்! அதிசயம்! அப்படித் தாங்கிக்கொண்டு நின்ற வீரன் தாமே தான் என்பதைக் கண்டார். அந்தப் பழுவேட்டரையர் ஒரு கையால் தம் தோளின் மீதிருந்த இரு காலும் இல்லாத விஜயாலய சோழனைப் பிடித்துக்கொண்டு இன்னொரு கையில் பிடித்திருந்த நீண்ட கத்தியைக் சுழற்றிக் கொண்டே எதிரிகளிடையே புகுந்தார். அவர்கள் இருவரும் போன இடமெல்லாம் பாண்டிய வீரர்களின் தலைகள் தரையில் உருண்டு விழுந்தன.

போர் நிலைமை அடியோடு மாறி விட்டது. பாண்டிய சைனியம் சிதறி ஓடியது. சோழ பல்லவர்கள் வென்றார்கள். எட்டுத் திக்கும் அதிரும்படி ஜயபேரிகைகள் முழங்கின. பல்லவ சக்கரவர்த்திக்கு முன்னால் விஜயாலய சோழர் அமர்ந்திருந்தார்! அவருக்கு அருகில் பழுவேட்டரையர் நின்றார். பல்லவ சக்கரவர்த்தி சோழ மன்னரைப் பார்த்து, "வீராதி வீரரே! உம்மாலே



இன்று தோல்வி வெற்றியாயிற்று! இனிச் சோழ நாடு சுதந்திர நாடு! நீரும் உமது வீரப் புதல்வன் ஆதித்தனும் உங்கள் சந்ததிகளும் என்றென்றும் சுதந்திர மன்னர்களாகச் சோழ நாட்டை ஆளு வீர்கள்!" என்றார். உடனே விஜயாலய சோழர் தமக்கருகில் நின்ற பழுவேட்டரையரைப் பார்த்து, "அத்தான்! தங்களாலேதான் இந்த வெற்றி நமக்குக் கிட்டியது. சுதந்திர சோழ நாட்டின் சேநாதிபதியாகவும் தனாதிகாரியாகவும் உம்மை நியமிக்கிறேன். உமது சந்ததிகளும் சோழ குலத்துக்கு உண்மையாயிருக்கும் வரையில் தனாதிகாரிகளாகவும் சேநாதி பதிகளாகவும் இருப்பார்கள்!" என்றார். பழுவேட்டரையரின் காயங்கள் நிறைந்த முகம் பெருமிதத்தால் மலர்ந்தது.

திடீரென்று அந்த முகத்தில் கடுங் கோபம் தோன்றியது. அந்தப் பழைய பழுவேட்டரையர் இந்தப் புதிய பழுவேட்டரையரைப் பார்த்தார். "அட பாவி! துரோகி! சண்டாளா! என் குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பே! ஆறு தலைமுறையாகச் சேர்த்த அருமையான வீரப் புகழையெல்லாம் நாசமாக்கிக்கொண்டாயே? சிநேகிதத் துரோகமும் எஜமானத் துரோகமும் செய்தாயே? சோழ குலத்தின் பரம்பரைப் பகைவர்களுக்கு உன்னுடைய வீட்டிலே இடங்கொடுத்தாயே? உன்னுடைய பொக்கிஷத்திலிருந்து பொருள் கொடுத்தாயே? உன்னால் அல்லவோ இன்று சோழ குலத்துக்கு இறுதி நேரப் போகிறது! நீ நாசமாய்ப் போவாய்! உனக்கும் உன் குலத்துக்கும் உன்னால் உற்ற பழி உலகம் உள்ள அளவும் மாறவே மாறாது!" என்று சபித்தார். சபித்த பழுவேட்டரையரின் கண்களில் கண்ணீர் தாரை தாரையாகப் பெருகியது.

பிறகு, மற்றும் பல பழுவேட்டரையர்கள் வந்தார்கள். ஒவ்வொருவரும் தாம் தாம் செய்த வீரச் செயல்களைக் கூறினார்கள். ஒவ்வொருவரும் பழுவேட்டரையரைச் சபித்தார்கள். பின்னர் எல்லாரும் சேர்ந்து சபித்தார்கள். "சண்டாளா! குலத் துரோகமும் இராஜத் துரோகமும் செய்துவிட்டாயே? நாங்கள் உயிரைக் கொடுத்துச் சம்பாதித்த வீரப் புகழையெல்லாம் நாசமாக்கி விட்டாயே! உன் புத்தி ஏன் இப்படிப் போயிற்று?" என்றார்கள்.

பழுவேட்டரையர்கள் மறைந்தார்கள். கொடும்பாளூர் வேளார்களும் திருக்கோவலூர் மலையமான்களும் வந்தார்கள். தன்னந் தனியே நின்ற பழுவேட்டரையரைச் சூழ்ந்துகொண்டார்கள். "சீச்சீ! நீயும் ஒரு மனிதனா? சோழ குலத்தை நீயும் உன் பரம்பரையுந்தான் தாங்கி வந்தது என்று பெருமை அடித்துக்கொண்டாயே? இப்போது என்ன சொல்லுகிறாய்? சோழ குலத்துக்கு நீ யமனாக மாறி விட்டாயே? பாதகா! உன் பவிஷு எங்கே?" என்று கூறி எக்காளம் கொட்டிச் சிரித்தார்கள்.

அவர்களுக்குப் பின்னால் கூட்டமாக நின்ற சோழ நாட்டு மக்கள் கல்லையும் மண்ணையும் வாரிப் பழுவேட்டரையர் மீது எறியத்தொடங்கினார்கள். அச்சமயம் சுந்தர சோழ சக்கரவர்த்தி அந்தக் கூட்டத்தை விலக்கிக்கொண்டு பலமற்ற கால்களினால் தள்ளாடி நடந்து வந்தார். வேளிர்களையும் மலையமான்களையும் மற்றவர்களையும் கோபமாகப் பார்த்தார். "சீச்சீ! என்ன காரியம் செய்கிறீர்கள்? வீராதி வீரரான பழுவேட்டரையர் மீதா கல்லையும் மண்ணையும் எறிகிறீர்கள்? அவரையா துரோகி என்கிறீர்கள்? பழுவேட்டரையரின் துரோகத்தினால் நானும் என் குலமும் அழிந்து போனாலும் போகிறோம். நீங்கள் யாரும் அவரைக் குற்றம் சொல்ல வேண்டாம்! தனாதிகாரி! வாரும் என்னுடன் அரண்மனைக்கு!" என்றார். ஜனக்கூட்டம் கலைந்து போயிற்று. சுந்தர சோழரும் மறைந்தார். தம்பி காலாந்தக கண்டர் மட்டும் பழுவேட்டரையர் முன்னால் நின்றார். "அண்ணா! நம்மிடம் இவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறாரே சக்கரவர்த்தி! அவருக்குத் துரோகம் செய்யலாமா? அவருடைய குலத்தை அழிக்க வந்த பெண் பேயை நம் அரண்மனையில் வைத்துக் கொண்டிருக்கலாமா?" என்றார். உடனே அவரும் மறைந்தார்.

வந்தியத்தேவனும் கந்தமாறனும் அவர்களையொத்த வாலிபர்களும் பெரிய

பழுவேட்டரையரைச் சூழ்ந்துகொண்டார்கள். "மீசை நரைத்த கிழவா! உனக்கு ஆசை மட்டும் நரைக்கவில்லையே? பெண் மோகத்தினால் அழிந்து போனாயே? உன் உடம்பிலுள்ள அறுபத்து நாலு புண்களும் இப்போது என்ன சொல்லுகின்றன? அவை வீரத்தின் பரிசான விழுப் புண்களா? அல்லது துரோகத்தின் கூலியான புழுப் புண்களா?'' என்று கேட்டுவிட்டுக் கலகலவென்று சிரித்தார்கள். அவர்களைக் கொல்லுவதற்காகப் பழுவேட்டரையர் தம் உடை வாளை எடுக்க முயன்றார். ஆனால் உடைவாள் இருக்க வேண்டிய இடத்தில் அதைக் காணவில்லை.

இச்சமயத்தில் குந்தவைப்பிராட்டி வந்தாள். வாலிபர்களை நோக்கிக் கையமர்த்திச் சிரிப்பை நிறுத்தினாள்.

''பாட்டா! இவர்களுடைய விளையாட்டுப் பேச்சைத் தாங்கள் பொருட்படுத்த வேண்டாம். தங்கள் அரண்மனையில் உள்ள பெண் வேடங் கொண்ட விஷப் பாம்பைத் துரத்தி விடுங்கள்! எல்லாம் சரியாகி விடும்!" என்றாள்.

அவர்கள் மறைந்தார்கள். பழுவேட்டரையர் குலத்தைச் சேர்ந்த பெண்கள் வரத் தொடங்கினார்கள். பத்துப் பேர், நூறு பேர், ஆயிரம் பேர், ஆறு தலைமுறையைச் சேர்ந்தவர்கள் வந்து, அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். ''ஐயையோ! உனக்கு இந்தக் கதியா நேர வேண்டும்! நம்முடைய வீரக் குலத்துக்கு உன்னால் இந்தப் பெரும் பழியா ஏற்பட வேண்டும்! நாங்கள் எங்கள் கணவன்மார்களையும் அண்ணன்மார்களையும் தம்பிமார்களையும் பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளைகளையும் சோழ நாட்டுக்காகப் போர்க்களத்துக்கு அனுப்பி வைத்தோமே? அவர்கள் இரத்தம் சிந்தி உயிரைக் கொடுத்துப் பழுவூர் வம்சத்துக்கு இணையில்லாப் புகழைத் தேடித் தந்தார்களே? அதையெல்லாம் ஒரு நொடியில் போக்கடித்துக்கொண்டாயே?"



என்று கதறினார்கள்.

"பெண்களே! வாயை மூடிக்கொண்டு அந்தப்புரத்துக்குப் போங்கள். என்னால் ஒரு பழியும் உண்டாகாது!" என்று பழுவேட்டரையர் கஷ்டப்பட்டுப் பதில் கூறினார். அப்போது அந்தப் பெண்கள் ஒரு திசையில் சுட்டிக்காட்டினார்கள். யமதர்மராஜன் எருமைக்கடா வாகனத்தில் ஏறிக்கொண்டு கையில் வேலும் பாசக் கயிறும் எடுத்துக்கொண்டு வந்தான். பழுவேட்டரையரை நெருங்கினான். போகிற போக்கில், "பழுவேட்டரையா! உனக்கு மிக்க வந்தனம்! சுந்தரசோழனுடைய உயிரையும் அவனுடைய மக்கள் இருவர் உயிரையும் ஒரே நாளில் கொண்டு போக உதவி செய்தாய் அல்லவா? உனக்கு என் நன்றி!" என்று கூறினான் யமதர்ம ராஜன்.

"இல்லை, இல்லை! நான் உனக்கு உதவி செய்யவில்லை; செய்ய மாட்டேன்! உன்னைத் தடுப்பேன்! யமனே! நில்! நில்!" என்று பழுவேட்டரையர் அலறினார். யமனைத் தடுத்து நிறுத்துவதற்காக விரைந்து செல்ல முயன்றார். ஆனால் அவரை, ஏதோ ஒரு சக்தி பிடித்து நிறுத்தியது. ஏதோ ஒரு பெரிய பாரம் அவரை அமுக்கியது. நின்ற இடத்திலிருந்து அவரால் நகர முடியவில்லை.

"பார்த்தாயா! நாங்கள் சொன்னது சரியாய்ப் போய்விட்டதே!" என்று கூறிவிட்டுப் பழுவேட்டரையர் குலப் பெண்கள் ஓவென்று சத்தமிட்டுப் புலம்பினார்கள். அவர்களில் பலர் ஒப்பாரி வைத்து அழுதார்கள்.

அவர்களுடைய அழுகுரலின் சத்தம் நிமிடத்துக்கு நிமிடம் அதிகமாகி வந்தது. பழுவேட்டரையரால் அதைச் சகிக்க முடியவில்லை. அவர் பேச முயன்றார்; ஆனால் அழுகைச் சத்தத்தில் அவர் பேச்சு மறைந்துவிட்டது.

அழுகையையும் புலம்பலையும் கேட்கச் சகிக்கவில்லை. இரண்டு கைகளினாலும் செவிகளைப் பொத்திக் கொள்ள முயன்றார். ஆனால் அவருடைய கைகளும் அசைவற்றுக் கிடந்தன. அவற்றை எடுக்கவே முடியவில்லை.

ஒரு பெரு முயற்சி செய்து கரங்களை உதறி எடுத்தார். அந்த முயற்சியிலே அவருடைய கண்ணிமைகளும் திறந்துகொண்டன. சட்டென்று நினைவு வந்தது. அத்தனை நேரமும் அவர் அனுபவித்தவை மனப் பிரமையில் கண்ட காட்சிகள் என்பதை உணர்ந்தார். ஆனால் ஓலக்குரல் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. சற்றுக் கவனித்துக் கேட்டார். அவை பெண்களின் ஓலக் குரல் அல்ல; நரிகளின் ஊளைக்குரல்!

அவர் நினைவு இழந்துகொண்டிருந்த சமயத்தில் இலேசாகக் காதில் விழுந்த சம்பாஷணை ஞாபகத்துக்கு வந்தது.

"கிழவன் செத்துப் போய்விட்டான்!" என்றது ஒரு குரல்.

"நன்றாகப் பார்! பழுவேட்டரையருடைய உயிர் ரொம்பக் கெட்டி. யமன் கூட அவன் அருகில் வரப் பயப்படுவான்!" என்றது மற்றொரு குரல்.

"யமன் பயப்பட்டாலும் நரி பயப்படாது. கொஞ்ச நஞ்சம் உயிர் மிச்சமிருந்தாலும் நரிகள் சரிப்படுத்தி விடும். பொழுது விடியும்போது கிழவனின் எலும்புகள்தான் மிச்சமிருக்கும்!"

"நல்லசமயத்தில் நீ பிளந்த மண்டபத்தைத் தள்ளினாய். இல்லாவிடில் நான் அந்தக் கதியை அடைந்திருப்பேன். கிழவன் என்னைக் கொன்றிருப்பான்!"

"எங்கே? மண்டபத்தை நகர்த்த முடியுமா, பார்க்கலாம்!"

சற்றுப் பொறுத்து, "துளிக்கூட அசையவில்லை! ஒரு பகைவனுடைய பள்ளிப் படையைக் கொண்டு இன்னொருவனுக்கும் வீரக் கல் நாட்டி விட்டோம்" என்று கூறிவிட்டு மந்திரவாதி கலகலவென்று சிரித்தான்.

"சிரித்தது போதும், வா! படகு பிய்த்துக் கொண்டு ஆற்றோடு போய்விடப் போகிறது. அப்புறம் கொள்ளிடத்தைத் தாண்ட முடியாது!"

இந்த வார்த்தைகளை ஞாபகப் படுத்திக்கொண்டு பழுவேட்டரையர் தம்முடைய நிலை இன்னதென்பதை ஆராய்ந்தார். ஆம்; அவர் மீது பள்ளிப்படை மண்டபத்தின் ஒரு பாதி விழுந்து கிடந்தது. அதன் பெரிய பாரம் அவரை அமுக்கிக்கொண்டிருந்தது.

ஆனால் மூச்சுவிட முடிகிறது, எப்படி?

நல்லவேளையாக, மண்டபத்தோடு விழுந்த மரம் அவர் தோளின்மீது படிந்து

அதன்பேரில் மண்டபம் விழுந்திருந்தது. மண்டபத்தையொட்டி இருந்த மரந்தான் அவர் உயிரைக் காப்பாற்றியது.

மண்டபம் நேரே அவர் மேல்



விழுந்திருந்தால் மார்பும் தலையும் நொறுங்கிப் போயிருக்கும்.

கிழவனார் தம்முடைய உடம்பின் வலிமையை எண்ணித் தாமே ஆச்சரியப்பட்டார். அந்தப் பெரிய பாரத்தை இத்தனை நேரம் சுமந்தும் தம்முடைய உயிர் போகவில்லையென்பதை உணர்ந்துகொண்டார். ஆனால் இவ்வளவு கெட்டியான உயிரை இன்னமும் காப்பாற்றிக் கொள்ள முடியுமா?

ஆம்; எப்படியாவது காப்பாற்றிக் கொண்டேயாக வேண்டும். காப்பாற்றிக் கொண்டு சோழ குலத்துக்கு நேரவிருந்த அபாயத்தைத் தடுக்க வேண்டும். அப்படித் தடுக்காவிட்டால் அவருடைய குலத்துக்கு என்றும் அழியாத பழி இவ்வுலகில் ஏற்படுவது நிச்சயம். வானுலகத்துக்குப் போனால் அங்கேயும் அவருடைய மூதாதையர்கள் அனைவரும் அவரைச் சபிப்பார்கள். ஆகையால், எந்தப் பாடு பட்டாவது இந்த மரத்தையும் மண்டபத்தையும் அப்புறப்படுத்தி எழுந்திருக்க வேண்டும். ஐயோ! எத்தனை நேரம் இங்கே இப்படி நினைவு இழந்து கிடந்தோமோ என்னமோ தெரியவில்லையே! இதற்குள் ஒருவேளை நாம் தடுக்க விரும்பும் விபரீதங்கள் நேரிட்டிருக்குமோ?

இதற்கிடையில் நரிகளின் ஊளைக்குரல் நெருங்கி நெருங்கி வந்துகொண்டிருந்தது. நரிகள் மூச்சு விடும் சத்தம் அவர் தலைக்கு அருகில் கேட்டது! ஆகா! இந்த நரிகளுக்குக் கூடவா பழுவேட்டரையனைக் கண்டு இளக்காரமாகப் போய்விட்டது? பார்க்கலாம் ஒரு கை!

பழுவேட்டரையர் ஒரு கையினால் மட்டும் அல்ல. இரண்டு கைகளினாலும் பார்க்கத் தொடங்கினார். தம் உடம்பில் மிச்சமிருந்த பலம் முழுவதையும் பிரயோகித்து அவர்மீது விழுந்து கிடந்த மரத்தைத் தூக்க முயன்றார். மரம் சிறிது சிறிதாக உயர, உயர அதன்மேல் நின்ற மண்டபப் பாறை நகர்ந்து சரியத் தொடங்கியது. இடையிடையே அவர் செய்த ஹுங்காரங்கள் நெருங்கி வந்த நரிகளை அப்பால் நகரும்படி செய்தன.

ஒரு யுகம் எனத் தோன்றிய ஒரு நாழிகை முயன்ற பிறகு அவரை அமுக்கிக் கொண்டிருந்த மரமும் மண்டபப் பாறையும் சிறிது அப்பால் நகர்ந்து அவரை விடுதலை செய்தன.


அந்த முயற்சியினால் அவருக்கு ஏற்பட்ட சிரமங்காரணமாகச் சிறிது நேரம் அப்படியே கிடந்தார். பெரிய நெடு மூச்சுகள் விட்டார்.

ஆகாசத்தை அண்ணாந்து பார்த்தார். மண்டபத்துக்குச் சமீபமாதலாலும் புயலில் மரங்கள் பல விழுந்து விட்டிருந்தபடியாலும் வான வெளி நன்றாகத் தெரிந்தது. இப்போது கரு மேகங்கள் வானத்தை மறைத்திருக்கவில்லை. வைரப் பொறிகள் போன்ற எண்ணற்ற நட்சத்திரங்கள் தெரிந்தன. இலேசான மேகங்கள் அவற்றைச் சிறிது மறைத்தும் பின்னர் திறந்துவிட்டும் அதிவேகமாகக் கலைந்து போய்க்கொண்டிருந்தன.

சட்டென்று வானத்தில் வட திசையில் தோன்றிய ஒரு விசித்திரமான நட்சத்திரம் அவருடைய கவனத்தைக் கவர்ந்தது. அடடா! சில நாளைக்கு முன்பு அவ்வளவு நீளமான வாலைப் பெற்றிருந்த தூமகேதுவா இப்போது இவ்வளவு குறுகிப் போயிருக்கிறது? அந்த நட்சத்திரத்தின் ஒரு முனையில் சுமார் ஒரு அடி நீளம் வெளிறிய புகைத்திரள் போல நீண்டிருந்தது. பத்து நாளைக்கு முன்பு கூட வானத்தின் ஒருகோணம் முழுதும் நீண்டிருந்த வால் இப்படிக் குறுகி விட்ட காரணம் என்ன...?

வானத்திலிருந்து பார்வையை அகற்றிச் சுற்று முற்றும் பார்த்தார். நரிகள் இன்னும் போகவில்லையென்பதைக் கண்டார்! பத்து, இருபது, - ஐம்பது நரிகள் இருக்கும். அவற்றின் கண்கள் நெருப்புத் தணல்களைப் போல் காட்டின் இருளில் ஜொலித்துக் கொண்டிருந்தன. கிழவன் எப்போது சாகப் போகிறான் என்று காத்துக்கொண்டிருந்தன போலும்! போகட்டும்! அவ்வளவு மரியாதையாவது பழுவேட்டரையனிடம் இந்த நரிகள் காட்டுகின்றனவே...!

திடீரென்று வானமும் பூமியும் அந்த வனப்பிரதேசம் முழுதும் ஒளிமயமாயிற்று. பழுவேட்டரையரின் கண்கள் கூசின. அது மின்னல் அல்ல. வேறு என்னவாயிருக்கக்கூடும்? வானத்தை நோக்கினார். ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்த ஒரு தீப்பந்தம் வான வட்டத்



திலே ஒரு கோணத்தில் பிரயாணம் செய்துகொண்டிருக்கக் கண்டார். அதன் பிரகாசம் அவருடைய கண்களைக் கூசச் செய்தது. கண்ணை ஒருகணம் மூடி

விட்டுப் பிறகு திறந்து பார்த்தார். அந்தத் தீப்பந்தம் சிறிதாகிப் போயிருந்தது; வர வர ஒளி குறைந்து வந்தது; திடீரென்று அது மறைந்தேவிட்டது. பழையபடி இருள் சூழ்ந்தது.

இந்த அதிசயம் என்னவாயிருக்கும் என்று பழுவேட்டரையர் சிந்தித்துக் கொண்டே மீண்டும் வானத்தை நோக்கினார். குறுகிய தூமகேது சற்று முன் இருந்த இடத்தைப் பார்த்தார். அங்கே அதைக் காணவில்லை. ஆகா! தூமகேது தான் விழுந்துவிட்டது! இதன் கருத்து என்ன? இதன் விளைவு என்ன! உலகத்தில் ஏதேனும் விபரீதம் நடக்கப் போவதற்கு அறிகுறிதான். இராஜ குடும்பத்தினர் யாருக்காவது விபத்து நேரிடுவதற்கு அடையாளம். வால் நட்சத்திரம் மறையும்போது அரச குலத்தைச் சேர்ந்த யாரேனும் மரணம் அடைவார்கள். - இது வெகு காலமாக மக்களிடையே பரவியிருக்கும் நம்பிக்கை. அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது என்று சொல்லுவோரும் உண்டு. அதன் உண்மையும் பொய்மையும் நாளைக்குத் தெரிந்து விடும். நாளைக்கா? இல்லை! இன்றைக்கே தெரிந்து போய்விடும்..! அதோ கீழ்வானம் வெளுத்து விட்டது! பொழுது புலரப் போகிறது! இன்று இரவுக்குள் மூன்று இடங்களில் மூன்று விபரீத பயங்கர நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடும். அவை நடக்கப் போகும் விவரம் நமக்கு மட்டும் தெரியும். அவற்றைத் தடுக்கும் சக்தியும் நமக்குத்தான் உண்டு. தடுப்பதில் வெற்றி பெற்றால் தூமகேது விழுந்த அபசகுனத்தைக்கூட வெற்றி கொண்டதாகும். இல்லாவிடில்... அதைப் பற்றி எண்ணவே பழுவேட்டரையரால் முடியவில்லை. தடுத்தேயாக வேண்டும்! சோழர் குலத்தைச் சேர்ந்த மூவரையும் காப்பாற்றியேயாக வேண்டும்.

தமது முதல் கடமை, மிக முக்கியமான கடமை, ஆதித்த கரிகாலனைக் காப்பாற்றுவதுதான்! அவனுக்கு விபத்து வந்தால் அதன் பழி தன் தலையில் நேராக விழும். ஆகையால் கொள்ளிடத்தைத் தாண்டி கடம்பூருக்கு உடனே போய்ச் சேர வேண்டும். அதற்கு முன்னால், குடந்தைக்குச் சென்று தஞ்சைக்கும் நாகைக்கும் எச்சரிக்கை அனுப்பிவிட்டுப் போவது நல்லது. பின்னர், விதிவசம் போல் நடந்துவிட்டுப் போகிறது. தாம் செய்யக் கூடியது அவ்வளவுதான்!

பழுவேட்டரையர் எழுந்திருக்க முயன்றார். உடம்பெல்லாம் ரணமாக வலித்தது. மரம் விழுந்திருந்த இடம் மார்பில் பொறுக்க முடியாத வேதனையை உண்டாக்கிற்று. ஒரு கால் முறிந்துவிட்டது போல் தோன்றியது. தேகம் முழுதும் பல்வேறு காயங்கள் பட்டிருந்தன.

அவற்றையெல்லாம் அந்த வீரக் கிழவர் பொருட்படுத்தவில்லை. பல்லைக் கடித்துக்கொண்டு ஒரு பெரு முயற்சி செய்து எழுந்து நின்றார். சுற்று முற்றும் பார்த்தார். நல்லவேளையாக, அவருடைய மரணத்துக்காகக் காத்திருந்த நரிகள் அதற்குள் ஓடிப்போய் விட்டிருந்தன. தூமகேது விழுந்தபோது உண்டான ஒளி வெள்ளத்தைக் கண்டு மிரண்டு அவை ஓடிப் போயின போலும்!

குடந்தை நகரம் அங்கிருந்து எந்தத் திசையில் இருக்கலாம் என்பதை ஒருவாறு நிர்ணயித்துக்கொண்டு புறப்பட்டார். திடமாகக் கால்களை ஊன்றி வைத்து நடக்கத் தொடங்கினார்.

வழியெல்லாம் புயல் அடித்து மரங்கள் விழுந்து கிடந்தன. பெரு மழையினாலும் கொள்ளிடத்து உடைப்பினாலும் வெள்ளக் காடாக இருந்தது. இந்த இடையூறுகளையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தாமல் பழுவேட்டரையர் நடந்தார். உள்ளத்தின் கொந்தளிப்பு உடலின் சிரமங்களையெல்லாம் மறந்து விடச் செய்தது. ஆனாலும் நேரம் போய்க்கொண்டே இருந்தது. பொழுது விடிந்து இரண்டு ஜாம நேரம் ஆன சமயத்தில் குடந்தை நகரை அவர் அணுகினார். அந்த மாநகரின் மத்தியப் பிரதேசத்துக்குப் போக அவர் விரும்பவில்லை. அவரை இந்தக் கோலத்தில் பார்த்தால் ஜனங்கள் வந்து சூழ்ந்துகொள்வார்கள். என்ன, ஏது என்று கேட்பார்கள். அவர் செய்ய விரும்பிய காரியத்தைத் துரிதமாகவும் திறமையாகவும் செய்ய முடியாமற் போய்விடும்.

ஆகையினால் நகரின் முனையிலேயே, ஜன நெருக்கமில்லாத இடத்தில், யாரையாவது பிடித்து, தஞ்சைக்கும் நாகைக்கும் ஓலை அனுப்ப வேண்டும். பிறகு ஒரு வாகனம் சம்பாதித்துக் கொண்டு

கடம்பூருக்குக் கிளம்ப வேண்டும்.

துர்க்கை அம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள ஜோதிடரின் ஞாபகம் அவருக்கு வந்தது. ஆம்; அது தனிப்பட்ட பிரதேசம். அக்கம் பக்கத்தில் வேறு வீடுகள் இல்லை. ஜோதிடர் தகுந்த மனிதர்; நல்ல இயல்பு படைத்த மனிதர். இராஜ குடும்பத்துக்கும் முதன்மந்திரிக்கும் வேண்டியவர். அதனால் என்ன? யாராயிருந்தாலும் இந்தக் காரியத்தைச் செய்வார்கள். இராஜ குடும்பத்துக்கு வேண்டியவராக இருப்பதால் இன்னும் ஆர்வத்துடன் செய்வார். ஆகா! ஜோதிடருக்கு உண்மையில் ஜோதிடம் தெரியுமா, ஜோதிட சாஸ்திரத்தில் உண்மை உண்டா என்பதையும் இச்சமயத்தில் பரிசோதித்துப் பார்த்து விடலாம்.

அம்மன் கோவிலையும் ஜோதிடர் வீட்டையும் பழுவேட்டரையர் அணுகிச் சென்றார். கோவிலுக்கு முன்னாலிருந்த நெடிய பெரிய மரம் புயலில் முறிந்து விழுந்து கிடந்தது முதலில் அவருடைய கவனத்தைக் கவர்ந்தது. அடுத்தாற்போல் கோவிலை அடுத்து நின்ற இரட்டைக் குதிரை பூட்டிய ரதத்தின் பேரில் அவருடைய பார்வை விழுந்தது. அது விசித்திரமான அமைப்புள்ள ரதம். அந்த ரதத்தின் மேற்பகுதி ஓர் ஓடத்தைப் போல் அமைந்திருந்தது. வெள்ளம் வரும் காலங்களில் அவசரமாகப் பிரயாணம் செய்ய நேர்ந்தால் இம்மாதிரி ரதங்களை உபயோகப்படுத்துவார்கள். பெரிய நதிகளைக் கடக்கும்போது திடீரென்று நதியில் வெள்ளம் அதிகமாகி விட்டால் ஓடத்தை ரதத்திலிருந்து தனியாகக் கழற்றி விடலாம். குதிரைகளை அவிழ்த்து விட்டால் அவை நீந்திப் போய்க் கரை ஏறி விடும். ரதத்தில் வந்தவர்கள் ஓடத்தைத் தள்ளிக்கொண்டு போய்க் கரை சேரலாம்.

இத்தகைய ரதங்கள் சோழ நாட்டில் அபூர்வமாகத்தான் உண்டு. இது யாருடைய ரதமாயிருக்கும்? அரண்மனை ரதமாக இருக்க வேண்டும்; அல்லது முதன்மந்திரியின் ரதமாக இருக்க வேண்டும். இதில் வந்தவர்கள் இப்போது ஜோதிடர் வீட்டுக்குள் ஜோதிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் போலும்! அவர்கள் யாராக இருக்கும்? ரதசாரதியைக் கேட்கலாமா? வேண்டாம்! அவன் தம்மைப் பார்த்து மிரண்டு போனாலும் போவான். ஜோதிடர் வீட்டுக்குள் நேரே பிரவேசித்துப் பார்த்து விடுவதே நலம். அங்கே வந்திருப்பவர்கள் யாராயிருந்தாலும், இந்த ரதத்தைக் கேட்டு வாங்கிக்கொண்டால், கடம்பூர் திரும்பிச் செல்ல வசதியாக இருக்கும் அல்லவா?

ஜோதிடர் வீட்டு வாசலுக்குப் பழுவேட்டரையர் வந்த போது உள்ளே பெண் குரல்கள் கேட்டன. கிழவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. யாருடைய குரல்? ஏன்? இளையபிராட்டி குந்தவையின் குரல்போல அல்லவா இருக்கிறது? அவள் எதற்காக இங்கே வந்தாள்? இந்தச் சமயம் பார்த்தா வர வேண்டும்...? முதலில் இப்படி எண்ணியவர் உடனே மனத்தை மாற்றிக் கொண்டார். அவ்விதமானால், இளைய பிராட்டியாக இருந்தால், ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. குந்தவை தேவியின் காதில் விஷயத்தைப் போட்டு விட்டால் தம்முடைய பாரமே நீங்கியது போலாகும். அவளுடைய தந்தைக்கும் தம்பிக்கும் நிகழக்கூடிய ஆபத்தைப் பற்றிக் குறிப்பாகச் சொல்லி விட்டால் பிறகு அந்த சாமர்த்தியசாலியான பெண் வேண்டிய முன் ஜாக்கிரதை எடுத்துக் கொள்வாள். பிறகு தாம் நிம்மதியாகத் திரும்பிக் கடம்பூருக்குப் போகலாம். அங்கேயல்லவா தம்முடைய முக்கியமான கடமை இருக்கிறது?

பழுவேட்டரையர் ஜோதிடர் வீட்டு வாசலில் பிரவேசித்தபோது, முன்னொரு தடவை நாம் பார்த்திருக்கும் அதே காவல்காரன், - ஜோதிடரின் சீடன் - அவரைத் தடுத்து நிறுத்தினான். பழுவேட்டரையர் அப்போதிருந்த கோலத்தில் அவரை அவனால் அடையாளங்கண்டு கொள்ள முடியவில்லை. ஆகையினாலேயே "நில்!" என்று அதட்டும் குரலில் கூறிவிட்டுத் தடுத்தான். பழுவேட்டரையர் ஒருமுறை ஹுங்காரம் செய்துவிட்டு அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளினார். சீடன் குட்டிக்கரணம் அடித்துக்கொண்டு போய் வீதியில் விழுந்தான். பழுவேட்டரையர் மதயானையைப் போல் பூமி அதிர நடந்து ஜோதிடரின் வீட்டுக்குள் புகுந்தார்.

(தொடரும்)

**ம**ன நிம்மதி இல்லையா...
உடல் ஆரோக்கியம்
குறைவா?
படிப்பில் முன்னேற்றம்
வேண்டுமா!

**பணப் பிரச்சனையா**
**குடும்பத்தில் பிரச்சனையா**

போன்ற எல்லாவிதமான பிரச்சனை களையும் நாங்கள் அதிர்ஷ்டக் கற்கள் மூலம் தீர்த்து வைக்கிறோம் என்கிறார் Mystics உரிமையாளர் திருமதி வித்யா. அதிர்ஷ்டகற்கள் வியாபாரத்தில் தனக் கென ஒரு இடத்தைப் பிடித்து அமைதி யான சூழ்நிலையில் 2 ஆண்டு காலமாக வியாபாரம் செய்து வருகிறார். இவர் வெறும் அதிர்ஷ்டக் கற்களை மட்டும் தராமல் தீராத பிரச்சனைகளுடன் தன்னை நாடி வருபவர்களுக்கு உற்ற தோழியாக இருந்து அவர்களுக்கு எந்தவிதமான கற்களை கொடுத்தால் நிவாரணம் கிடைக்கும் என்பதை மிகுந்த அக்கறையும் கனிவுடனும் எடுத்துக் கொள்கிறார்.

உலகத்தில் கவலையில்லாத மனிதன் யாரும் இல்லை. வாழ்க்கை என்ற பட குக்கு கவலையும் கண்ணீரும் இரு துடுப்புகள் போன்றதாகும். இறைவனின் அருளால் நான் அளிக்கும் ஆலோ சனையை ஏற்று நான் தரும் கற்களை உபயோகித்து பலன் கண்டு என்னிடம் வந்து ஆனந்தக் கண்ணீர் மல்க நன்றி கூறும்போது பகவான் 'ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்கள் கூறும் வாக்கியம் நினை வுக்கு வரும். அது என்னவென்றால் என் றைக்கும் தூய்மையான மனதுடன் அடுத்தவர்களின் இன்ப துன்பங்களில் நாம் பங்கேற்றால் அதற்கு நிச்சயம் நல்ல பலனை அடையலாம். இந்த வாக்கி யத்தை நான் ஒரு வேதமாகவே வாழ்க் கையில் கடை பிடிக்கிறேன். உண்மை யிலேயே நான் இறைவனின் மிக அருகில் இருப்பதாகவே உணர்கிறேன் – இப்படி தன்னம்பிக்கையுடன் சொல்லும் Mystic வித்யாவின் தொலைபேசி மணி ஓயாமல் அடித்துக்கொண்டே இருக்கிறது. அத் தனைக்கும் மிகப் பொறுமையாக பதில் அளித்து நம்பிக்கை ஊட்டுகிறார்.

# வாழ்க்கை வெல்வதற்கே!



உங்கள்
பிரச்சனைகளை
தீர்க்க காத்திருக்கும்
வித்யாவின் முகவரி:

**Mystics**
**'தி வேர்ல்ட் ஆஃப் ஜெம்ஸ்'**
கடை எண் 19,
தமிழ்நாடு ஹவுஸிங் போர்டு,
ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் எண்
180, லஸ் சர்ச் ரோடு,
மயிலாப்பூர்,
சென்னை – 4
போன் : 4985854

ADVT

சென்னைவாழ் வி.ஐ.பி.க்கள் தூங்க இரவு ஒரு மணி ஆகிவிடும் என்ற நம்பிக்கையில், நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு போன் செய்து ஒரு ஜோக் சொல்லும்படிக் கேட்டால் எப்படியிருக்கும்? திட்டத்தை செயல்படுத்தப் பார்த்ததில் கிடைத்த உடனடி எதிர்விளைவுகள் இவை. பக்க விளைவுகள் பற்றி இனிதான் தெரியும்.



**வி**.ஐ.பி.களை அகரவரிசையில் தேர்ந்தெடுத்து, தொலைபேசியில் அழைப்பது என்ற முடிவுடன் முதலில் கவிஞர் அப்துல் ரகுமானின் எண்களை அழுத்தினோம். எதிர் முனையில் தொலைபேசி சிணுங்கத் தொடங்கியதே,

# நடுராத்திரி நற நற!



• லதா ரஜினிகாந்த்

நமக்கு அலறுவதுபோல் கேட்டது. போதாக் குறைக்கு இதயத்துடிப்பின் அளவுகளும் அதிகரித்துக்கொள்ள, கவிக்கோ தொலைபேசியை எடுத்து, நகைச்சுவை சொல்லுவாரா இல்லை 'படிமக்கவிதை' சொல்லுவாரா என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே, மணியடித்துக் களைத்துப்போன தொலைபேசி, தன்னைத் துண்டித்துக்கொண்டது.



• அப்துல் ரகுமான்

முதல் முயற்சிக்குக் கிடைத்த தோல்வியை நினைத்து ஒரு சொட்டுக் கண்ணீர் உதிர, அடுத்த கணம் தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தனின் முகம் மனக் கண்ணில் வந்துமோத, (அம்புலிமாமாவில் பார்த்த அதே முகம்) மனசுக்குள் தன்னம்பிக்கையை நிரப்பிக்கொண்டு,



பாலகுமாரனின் எண்களை அழுத்தினோம்.

இது என்னடா ஜோக்கிற்கு வந்த சோதனை என்று சொல்லும்படி, கத்திய தொலைபேசியைக் கண்டுகொள்வார் இங்கும் இல்லை. சீச்சீ, இந்தப் பழமும் புளிக்கிறதே என்று 'சி' வரிசையில் சிந்தாமணி முருகேசனின் எண்களைப் பார்த்தோம். விநியோகஸ்தர் சங்கத் தேர்தலில் எதிர்பாராத தோல்வியைச் சந்தித்தும் துவண்டு போகாமல் அடுத்தத் தேர்தலுக்குத் திட்டம் தீட்டிக் கொண்டிருப்பார். நிச்சயம் தூங்கி இருக்க மாட்டார் என்ற நம்பிக்கையோடு எண்களை அழுத்தினோம்.



• பாலகுமாரன்

சிந்தாமணியின் குரல், "வணக்கம்.. நான் சிந்தாமணி முருகேசன் பேசுகிறேன். இது ஓய்வு நேரம். உங்கள் தகவல் எதுவாயினும் 'பீப்' ஒலிக்குப் பிறகு கூறுங்கள். காலையில் தொடர்பு கொள்கிறேன்"

அடக் கொடுமையே! கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்ற வேதனையோடு சிந்தாமணியின் ரெக்கார்டு செய்யப்பட்ட ரெடிமேட் குரலை, ஆறுதலுக்காக மீண்டும் ஒரு முறை கேட்டோம்.

இதெல்லாம் சரிப்பட்டு வராது... ஒரு வி.வி.ஐ.பி. வீட்டிற்கு போன் செய்வோம் என்று முடிவு செய்து 'லதா ரஜினிகாந்த்' எண்களை 'பிரஸ்' செய்தோம்.

எதிர்முனையில் ஒரு ஆண் குரல். எடுத்தவர் லதாரஜினிகாந்தின் உதவியாளர் ஆறுமுகம்.

"ரொம்ப அவசரம். மேடம் இருக்காங்களா?"

"கொஞ்சம் இருங்க! பார்த்துட்டு வர்றேன். மேடம் தூங்கலைன்னா கட்டாயம் கனெக்ஷன் தர்றேன்" என்றார்.

நமக்கு சந்தோஷம். முதல் ஜோக் கிடைக்கப் போகிறதே என்று. முப்பது வினாடிகள் கழித்து ஆறுமுகமே எடுத்தார்.

"சாரி சார்... இப்போதான் படுத்திருக்காங்க. தயவுசெய்து காலையில கூப்பிடுங்களேன்."

அதற்குமேல் என்ன செய்ய என்று குழம்பிய படி, சினிமா மக்கள் தொடர்பாளர் மௌனம் ரவி வீட்டிற்கு போன் செய்தோம்.

இரண்டாவது பெல் அடித்தபோதே ரிசீவரை எடுத்துவிட்டார்.

எதிர்முனையில் ஒரு குழந்தை வீல் வீல் எனக் கத்திக் கொண்டிருந்தது.

"சார், ஒரு ஜோக் சொல்லுங்களேன்"



• யூகி சேது

"எம்பொண்ணு தூங்காம ஒரே அடம் பண்ணுது... நீங்க ஜோக் சொன்னா கூட இப்போ கேட்கிற மன நிலையில நான் இல்லே" என்று தொலைபேசியை டொக்கி விட்டார்.

அடுத்து பயந்துகொண்டே டி.என்.சேஷனின் எண்களை அழுத்தினோம். முதல் மணி அடித்து முடிவதற்குள் ரிசீவரை எடுத்தார் சேஷன்.

"நடுராத்திரியில யாரது நான்சென்ஸ்?"

"அய்யா மன்னிக்கணும்... ஒரு ஜோக் சொல்ல முடியுங்களா?"

"எங்கேயிருந்து பேசறே?"

வேறு வழியில்லாமல், "கல்கியிலிருந்து தாங்க.. நகைச்சுவை சிறப்பிதழுக்கு நடுராத்திரி ஜோக்!"

"படுவா.. உன் எடிட்டரைக் கூப்பிடு, இதெல்லாம் என்ன விளையாட்டு?" என்று சிம்மக்குரலில் கர்ஜித்ததும்... கொஞ்சநேரம் நமக்கு வார்த்தைகளே வரவில்லை. சேஷனே பேசினார்.

"என்னப்பா பயந்துட்டியா? நடுராத்திரியில போன் பண்ணினா கோபம் வராதா என்ன? போய் ஆகிற வேலையைப் பார்" என்று வைத்துவிட்டார்.

ஆனால் கம்ப்யூட்டரில் பட் பட் என்று அவர் எதையோ டைப் செய்தபடி நம்மிடம் 'பேசிக் கொண்டிருந்தது காதில் தெளிவாகக் கேட்டது... சேஷன் இன்னும் உறங்காப் புலிதான் போலும்.

அடுத்து நம்மிடம் மாட்டியவர் இயக்குனர் சசி.

"சாரி சார்! எந்த ஜோக்குமே ஞாபகம் வரமாட்டேங்குது" என்று கனிவாக, இனிய குரலில் பதில் சொன்னார். நாம் விடுவதாக இல்லை.

"ஏதாவது ஒரு கடி ஜோக்காவது டிரை பண்ணுங்க ப்ளீஸ்" என்று வற்புறுத்தினோம்.

"நாலு சொல்றேன்" என்றார்.

"கடி ஜோக்... கடிஜோக்..." என்று அதையே நாலுமுறை திருப்பிச் சொன்ன சசி "இதுதான் நாலு கடிஜோக்" என்றார்.

இதற்குமேல் அவரிடம் ஜோக் கேட்பது நல்லதல்ல என நினைத்துக் கொண்டு "இப்போது என்ன படம் செய்கிறீர்கள்" என்றோம்.



• சசி

"ஆஸ்கார் பிலிம்ஸ்க்கு செய்கிறேன்" என்றார்.

இந்த அகால வேளையில் ஒரு ஜோக்காவது கேட்டுவிடுவது என்ற முடிவுடன் யூகிசேதுவின் செல்போனுக்குத் தொடர்பு கொண்டோம்...

எதிர்முனையில் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் 'யூகிசேது ஸ்பீக்கிங்' என்றார்.

"என்ன சார் தூங்கலையா?" என்றதும், "இப்போதான் எனக்குப் பொழுது விடிஞ்சுருக்கு. பல்துலக்கிட்டு, இன்டர்நெட்ல, கடகட செய்திகளைப் பார்த்துகிட்டு இருக்கேன். காலையில் எட்டு மணிக்குதான் தூங்கப் போவேன்" என்றார்.

"என்ன சார் நையாண்டி பண்றிங்களா?"

"அதை எனக்கு பதிலா நீங்க செய்றீங்களே! இது ரொம்ப அநியாயம்" என்றவரிடம் 'ஒரு ஜோக் வேணுமே' என்று கேட்க, 'நையாண்டி தர்பாருக்கு வாங்க. மொத்தமா தள்ளுபடி விலையில கிடைக்கும்' என்றார்.

"சில்லறை விற்பனையில ஒரே ஒரு ஜோக்" என்று கெஞ்சியதைக் கண்டு ஒரு ஜோக் சொன்னார்.

"பெரியார் கார்லே ஒரு கூட்டத்திற்குப் போய்க் கொண்டிருந்தார். அப்போ திடீர்னு கார் நின்னுடுச்சி. எல்லோரும் இறங்கித் தள்ளினாங்க. பெரியார் மட்டும் சீட்ல உட்கார்ந்துகிட்டு இருந்தார். இதைப் பார்த்த டிரைவர், "அய்யா நீங்களும் இறங்கித் தள்ளினாதான் வண்டி கிளம்பும்" என்று சொல்ல, "எனக்குத் தள்ளாத வயசு. நீ இங்கே உட்கார்ந்துகிட்டு என்ன பண்றே வெங்காயம்!" என்றார்.

"அய்யய்யோ! ஏடாகூடமான ஜோக்கா இருக்கே. இது உண்மையில் நடந்ததா?" என்றோம் அதிர்ச்சியுடன்.

"அதான் இல்லே! இது கற்பனை" என்று தப்பித்துக் கொண்டார் (மதி) யூகிசேது.

ஒரு ஜோக் கிடைத்த சந்தோஷத்தில் கடைசியாக போலீஸ் கன்ட்ரோல் ரூமிற்கு போன் செய்து விடுவது என்று முடிவுடன் 103 எண்களை அழுத்தியதும், எதிர்முனையில் "போலீஸ் கன்ரோல் ரூம்" என்றது குரல்.

குரலுக்குச் சொந்தக்காரர் ராஜாமணி - தலைமைக் காவலர்.

"சொல்லுங்க சார் என்ன உதவி வேணும்?" என்றார்.

"ஒரு ஜோக் சொல்ல முடியுமா?" என்றதும்,

"நான் படிச்ச ஜோக் சொல்லலாமா" என்றார்.

"ஓ.. தாராளமா சொல்லுங்க!"

"யூகிசேது பிரியாணி செய்ய கத்துக் கொடுக்கிற சமையல் நிகழ்ச்சி நடத்தினா என்ன பெயர் வைப்பார்?" என்று நம்மைக் கேட்டதும் தெரியலையே என்று விழிக்க..

"முனியாண்டி தர்பார்" என்றதும் நாமும் சிரிக்க, அவரும் சிரிக்க...

"டூட்டியில சிரிக்கிறவன் யாருய்யா... என்ன வெளையாட்டு வேண்டிகிடக்கு?" என்று அதிகாரமாக இடையில் ஒரு வயர்லெஸ் குரல் பாய, தடால் என்று ராஜாமணி ரிசீவரைச் சாத்தினார். நாமும்தான்!

— சக்கரத்தாழ்வார்

விபடை நோக்கி நடந்துகொண்டிருந்தார் கேப்டன்.

'அடடா, தன் மனைவிக்கு ஏதோ இதய நோய்னு கேப்டன் அங்கிள் சொல்லியிருந்தாரே. பயிற்சி மும்முரம், பெங்களூர் பயணம் என்று போனதில் இதை மறந்துவிட்டிருக்கிறோம். ஒருவாரம் முன்பு பார்த்தபோது பலவீனம் தென்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் தனக்கு டீ போட்டுக் கொடுத்த அந்த அம்மாள் இப்போது மருத்துவமனையிலா?'

கார் நின்றதும் ஓட்டமும் நடையுமாகக் காப்டன் விஷ்ணுராமிடம் சென்று இது குறித்து விசாரித்தாள் சுவாதி. பிறகு "இப்போ உங்க மிஸஸ் எங்கே இருக்காங்க?" என்று .கேட்டுவிட்டு அவரது பின்னால் நடக்கத் தொடங்கினாள். காரைப் பூட்டிவிட்டு வந்த ராஜ்குமார் தன்னைத் தொடருவதையும் அப்படியே உறுதி செய்துகொண்டாள்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் விஷ்ணுராம் நுழைந்ததும் திடுக்கிட்ட சுவாதி "அங்கிள்" என்று சற்றே வீறிட்ட குரலை எழுப்ப, "அபாயக் கட்டத்தைத் தாண்டிட்டா" என்றபடி ஓர் அறைக்கதவைத் திறந்தார் அவர். கணவருக்குப் பின்னால் அக்கறை பொங்கும் முகத்துடன் வந்துகொண்டிருந்த சுவாதியைப் பார்த்ததும் கட்டிலில் படுத்திருந்த அந்த அம்மாளின் உடலில் ஒரு சிலிர்ப்பு உண்டானது.

"வாம்மா" என்ற ஒற்றை வார்த்தையை மட்டுமே அந்த அம்மாள் கூறினாலும் எதையெதையோ சொல்ல நினைத்து, முடியாமல் தவிப்பது போன்ற ஓர் உணர்வு அந்த முகத்தில் தென்பட்டது. 'பாவம், சொந்த மகளின் சாயலில் தான் இருப்பதால் இப்படி உணர்ச்சி வசப்படுகிறார்.'

"சிரமப்படாதீங்க. கடவுள் உங்க பக்கம்தான். இவ்வளவு மேஜர் ஆபரேஷன் வெற்றிகரமாக நடந்திருக்கே. இனிமே உங்களுக்கு எந்தப் பிரச்னையும் இல்லே. வீட்டுக்கு வந்ததும் எனக்கு வழக்கம்போல் ஸ்பெஷல் இஞ்சி டீ போட்டுத் தரணும் என்ன?"

கண்ணீர் வழிய இதைக் கேட்டுக் கொண்டிருந்த அந்த அம்மாள் நடுங்கும் கரங்களால் சுவாதியைத் தன்னருகே அழைத்து அவள் தலையைத் தடவிக் கொடுத்தாள்.

ராஜ்குமாரும் உணர்ச்சி வசப்பட்டது தெரிந்தது. "இந்த அம்மாளின் வாழ்த்தை நீ சத்யாவின் வாழ்த்தாகவே வச்சிக்கலாம் சுவாதி."

சுவாதி அப்போதுதான் கவனித்தாள், தன்னை அந்த அறைக்குள் அனுப்பிவிட்டு காப்டன் வெளியே தங்கி விட்டதை.

அவரை அணுகினாள். அவர் கண்கள் சிவந்திருந்தன. சுவாதியின் கைகளைப் பற்றி "ரொம்ப தாங்க்ஸ்ம்மா" என்று அவர் கூறியபோது தனக்கு ஒரு சோதனை என்று வந்தால் மனிதர்கள் எப்படி நிலைகுலைந்து போகிறார்கள் என்பது தெரிந்தது. அதுவும் மனைவியின் அருமை அவள் உயிருக்கே ஆபத்து என்ற நிலையில்தான் பெரும்பாலான ஆண்களுக்கு முழுமையாகத் தெரிகிறது! "உடம்பு சரியில்லாதவங்களை வந்து பார்த்ததுக்கெல்லாம் தாங்க்ஸ் சொல்வாங்களா என்ன?" என்று சிரித்தாள். கூடவே தான் அந்த அம்மாளைப் பார்க்கும் திட்டத்துடன் வரவில்லை என்ற குறுகுறுப்பும் உண்டானது.

"சுவாதி, வாயேன்" ராஜ்குமாரின் குரல்.

அவருடன் நடக்கத் தொடங்க, அவளுக்கு மருத்துவமனையின் பல இடங்களைச் சுற்றிக் காட்டினார். பெரிய, நவீன மருத்துவமனைதான்.

அம்மாவுக்கு இங்கு பலரைத் தெரிந்திருக்கும் போலும். ராஜ்குமார் அறிமுகப் படுத்தியபோதெல்லாம் சந்தோஷ வியப்பை வெளிக்காட்டினார்கள்.





நாற்பது வயதான நந்தகோபால் என்பவர் அம்மாவின் பெயரைக் குறிப்பிட்டபோதே உருகிப் போனார். "உங்கம்மாதான் எங்க வாழ்க்கைக்கே விளக்கேத்தினாங்க" என்றார் அவர் மனைவியும். எதற்காக மருத்துவ மனையில் வந்து படுத்துக் கிடக்கிறார்? நந்தகோபால் தலையைக் குனிந்துகொள்ள, அவர் மனைவிதான் பதிலளித்தார். "பலமுறை உங்கம்மா இவருக்கு எடுத்துச் சொல்லியும் இந்த சிக ரெட் பழக்கத்தை இவர் விடல்லே. நுரையீரல் இதனாலே கெட்டுப் போச்சு."

## அருண் சரண்யா

அதற்குள் அங்கு வந்த டாக்டர் "நோயாளியைச் சுற்றிக் கூட்டம் போட வேண்டாம். தயவு செய்து அவரை அமைதியாக இருக்க விடுங்க" என்றபடி அவர்களை வெளியேற்றினார்.

மருத்துவமனையைச் சுற்றிப் பார்க்கப் பார்க்க உடல்நலம்தான் மற்ற எதையும் விடப் பெரும் செல்வம் என்று சுவாதிக்குத் தோன்றியது.

கண் சிகிச்சைப் பிரிவில் ஒரு பத்து வயதுச் சிறுமி "ஐ, உங்க சிகப்பு வண்ணச் சேலை ரொம்ப அழகாயிருக்குக்கா" என்று பாராட்டியதைத் தொடர்ந்து அவளது அம்மா விம்மி விம்மி அழுவதைக் கண்டு சுவாதி காரணம் கேட்க, "பார்வையில்லாம தவிச்சவம்மா இவ. நேற்று நடந்த ஆப ரேஷனுக்குப் பிறகுதான் இவளாலே பார்க்க முடிஞ்சிருக்கு. அதுதான் இந்த ஆனந்தக் கண்ணீர்" என்றாள்.

''மணியாகுதும்மா'' என்று ராஜ்குமார் அவளை அவசரப்படுத்திக்கொண்டு வெளியேறினார். வாசல்வரை வந்தார் விஷ்ணுராம். மெல்லிய குரலில் ராஜ்குமாரிடம் ''இதை சுவாதியிடமிருந்து மறைப்பது சரியில்லை'' என்று அவர் கூறுவது கேட்டது.




**ம**ருத்துவமனையிலிருந்து கார் வீடு திரும்பிக்கொண்டிருந்தது.

சுவாதி மௌனத்தைக் கலைத்தாள். ''என்ன சார், மெட்ராஸுக்கு முதல் தடவையா வந்திருக்கீங்க. எப்படி இருக்கு? உங்கக் கிராமத்தோடு ஒப்பிட்டுப் பார்த்துப் பிரமிச்சுப் போயிட்டீங்களா?''

வெளியிலிருந்து சுவாதியின் புறமாகத் திரும்பிய ராஜ்குமாரின் முகத்தில் குழப்பம் அப்பட்டமாகத் தெரிந்தது.

''என்ன சுவாதி சொல்றே? சென்னைக்கு நான் புதுசா?''

''பின்னே என்ன சார், காரிலே ஏறியதிலேயிருந்து நானும் பார்த்துக்கிட்டுதான் வரேன். வலுக்கட்டாயமாக ஏதோ தெருவையே பார்த்துக்கிட்டு வரீங்களே. வேணும்னே என் கூடப் பேசுவதைத் தவிர்க்கிற மாதிரி இருக்கு.''

''அப்படியெல்லாம் எதுவுமில்லையே'' என்று அவர் சற்றே தடுமாற்றத்துடன் பதிலளித்தாலும், இப்போதுகூட அவர் தன் விழிகளைச் சந்திப்பதைத் தவிர்க்கிறார் என்றே அவளுக்குப் பட்டது.

''துரதிஷ்டவசமாக எனக்குக் கேட்கும் சக்தி ரொம்ப அதிகம் சார்.''

''என்ன சுவாதி தொடர்ந்து புதிராகப் போட்டுக்கிட்டு வரியே?'' ராஜ்குமார் புன்னகைக்க முயன்று தோற்றுக்கொண்டிருந்தார்.

''ஏதோ விஷயத்தை என்கிட்டே மறைப்பது சரியில்லேன்னு கேப்டன் உங்ககிட்டே சொன்னதைத்தான். 'கூடிய சீக்கிரம் சொல்விடுவேன்'னு நீங்க அவர்கிட்டே வாக்கு கொடுத்தீங்களே, அதைத்தான்.''

திகைப்புடன் ஓரிரு நிமிடங்கள் தலையைக் குனிந்துகொண்டார் ராஜ்குமார். பிறகு ''நாளைக்கு முதல்முதலாக கமர்ஷியல் ஃப்ளைட்டிலே போகப் போறியே. அதுக்குள்ளே மனம் வருத்தப்படும்படியான எதையும் தெரிஞ்சிக்க வேண்டாமேன்னு நினைச்சேன். இப்ப யோசிச்சா அதை சொல்லிடுவதே நல்லதுன்னு படுது... கேப்டன் தன் மனைவியின் உடல் நிலையைப் பற்றி என்ன சொன்னார்?''

''அபாயக் கட்டத்தைத் தாண்டிட்டதாக...''

''அது உன்னை சமாதானப்படுத்துவதற்காக சொன்னது. இன்னும் இருபது மணி நேரம் போனாத்தான் எதுவுமே நிச்சயம்னு சொல்லியிருக்காரு டாக்டர். ஆனா நீ கவலைப்பட வேண்டாம். அபாய கட்டத்தை தாண்டலேன்னாலும் கொஞ்சம் கொஞ்சமாக அவங்க உடல்நிலை முன்னேறிக்கிட்டுதானிருக்கு. இன்னும் பத்து நாளிலே அவங்களை வீட்டுக்கே டிஸ்சார்ஜ் செய்துடுவாங்கன்னு எனக்குப் படுது.''

''உள்ளுணர்வா?'' என்று கேட்ட சுவாதி, ராஜ்குமார் மீது சற்று முன் சுமத்தியக் குற்றத்தைத் தானே செய்யத் தொடங்கினாள். அவரைத் தவிர்க்கும் விதமாக வெளியே பார்க்கத் தொடங்கினாள். ''அம்மா நிச்சயம் வந்துவிடுவாள். அவளது முதல் கமர்ஷியல் ஃப்ளைட்டின்போது வந்திருந்து வழியனுப்புவாள் என்ற தனது உள்ளுணர்வுதான் பொய்த்துப் போகப் போகிறதோ?'' இருக்காது. இருக்காது!

**'பை**லட் ராம்நாத், கோ–பைலட் சுவாதி' என்று பெயர்கள் அறிவிக்கப்பட்டபோது பெருமையாக இருந்தது. விமானம் கிளம்ப ஒன்றரை மணி நேரம் இருக்கும்போதே தயாராகி விட்டார்கள். ஃப்ளைட் ப்ளானை சரி பார்த்துக் கொண்டனர். விமானம் பறக்கத் தகுதியானதுதான் என்ற சான்றிதழ் அதில் இருந்தது. கம்ப்யூட்டர் சரி பார்த்த விஷயம்தான் என்றாலும் விதிமுறைப்படி அவர்களும் அந்த விமானத்தைச் சுற்றிலும் ஒருமுறை நடந்து விமானத்தின் தயார் நிலையை உறுதி செய்துகொண்டார்கள்.

விமானத்தில் ஏறி காக்பிட்டை அடைந்தவுடன் எல்லா ஸ்விட்சுகளும் ஆஃப் நிலையில் இருக்கிறதா என்பதைச் சரி பார்த்தனர்.

'அட இந்த சுவிட்சுகள் ஆஃப் நிலையில் கீழ்ப்புறமாகவும், ஆன் நிலையில் மேற்புறமாகவும் இருக்கின்றனவே! ஒரு ட்ரிப்புக்கு ஒரு லட்சம் லிட்டர் எரிபொருளை நிரப்புவார்களா! இறக்கைகளின் நடுவில் உள்ள பகுதியில்தான் அது நிரப்பப்படுமா!'' என்றெல்லாம் பயிற்சிக் காலத்தில் விதவிதமாக ஆச்சரியப்பட்டது நினைவுக்கு வந்தது

சுவாதிக்கு.

தனது இருக்கையில் பைலட் உட்கார, அவருக்கு வலப் பக்கமாக சுவாதி உட்கார்ந்து கொண்டாள். அவர்களுக்கும் பின்னே ஃப்ளைட் என்ஜினியர் கோபால கிருஷ்ணன்.

கொசகொசவென்று பல திக்குகளிலும் பலவிதக் கருவிகள், சக்கரங்கள்.

சிக்னல் கிடைத்தது.

இந்நேரம் பயணிகள் தங்கள் இருக்கை பெல்ட்டுகளை கட்டிக் கொண்டிருப்பார்கள்.

ராம்நாத்தும், சுவாதியுமாக அங்கிருந்த நான்கு த்ராட்டில் பிடிகளை இழுத்தார்கள். என்ஜின் வேகமாக இயங்கத் தொடங்கியது. ரன்வேயின் முடிவில் சற்றே நின்றது.

"ரொடேட்" என்று சுவாதி சொல்ல, ராம்நாத் செயல்பட்டார். திடீரென்று நூறு டினோசர்கள் குரல் கொடுப்பது போன்ற பயங்கர ஒலியுடன் என்ஜின் மிருகசக்தி பெற்றது. ராம்நாத் 'கண்ட்ரோல் காலத்'தைப் பின்புறமாக இழுக்க, விமானத்தின் மூக்கு காற்றைக் கிழித்துக் கொண்டு மேற்புறமாகப் பறந்தது.

சீராக முன்னேறியது.

"என்னம்மா, முதல் முறையாக ஒரு கமர்ஷியல் ஃப்ளைட்டிலே வரே, எப்படியிருக்கு?" என்றார் ராம்நாத்.

"பொறுப்பு கூடியிருக்கு சார். இப்போ பல உயிர்கள் நம்ம கையிலாச்சே" என்ற போதுதான் கவனித்தாள் பைலட்டின் முகம் லேசாகச் சுருங்குவதை.

"என்ன சார் ஆச்சு?"

"ஒண்ணுமில்லேம்மா. இடது தோளில் சுரீல்னு ஒரு வலி."

அதன் அர்த்தம் விபரீதமாகவும் இருக்கலாம் என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றியபோதே திடீரென்று ஓர் அந்தகாரம். விமானம் ஏதோ மேகத்திற்குள் நுழைந்திருக்க வேண்டும்.

சில நொடிகளுக்குப் பிறகு விமானம் அதிலிருந்து வெளிவந்தபோது வெளிச்சம் எழுந்தது. அப்போது ராம்நாத் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாயத் தொடங்கியிருக்க, சுவாதி பதறினாள். 'தோளில் வலி என்று அவர் சொன்னது, இப்போது பொங்கும் வியர்வை – மாரடைப்புதான்.'

ஓடும் விமானம். இருபதாயிரம் அடி உயரம். பயணிகளில் யாரும் மருத்துவர் இல்லை. தவிர விவரம் கூறினாலே கலவரம் ஏற்படும். என்ன செய்ய?

சுவாதி திகைத்தாள்.

(தொடர்ந்து பறக்கும்)


**வாடிக்கையாளர்கள் சேவையில் 10 வருடங்கள்**

**10வது வருட விற்பனை துவக்கத்தில் விலைகள் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது**

**தரமான புடவைகளை குறைவான விலையில் விற்கும் ஒரே ஸ்தாபனம்**

மதுரை சுங்குடி புடவைகள்

பல வண்ண பல டிசைன் பாதிக் புடவைகள்

அழகிய மதுரை கைத்தறிப் புடவைகள்

பெங்கால் காட்டன்

பாலிகாட் புடவைகள்

நெகமம் & செட்டிநாடு

சுடிதார் துணிகள்

MADURAI TEXTILES

**மதுரை டெக்ஸ்டைல்ஸ்**

2, சிவப் பிரகாசம் சாலை,
பாண்டி பாஜார், சென்னை - 17
(அகஸ்தியர் கோயில் அருகில்)
போன் : 4332197

**பா**வக்காட்டிலிருந்து சித்தப்பா வருகிறார் என்று செய்தி வந்தபோது சாமிநாதனுக்கு அடிவயிறு, நுனிவயிறு எல்லாம் ஒரே கலக்காய்க் கலக்கியது.

ஒரு தடவை வந்தால் ஒரு மாதத்துக்குக் குறையாமல் தங்கி, ஊரில் ஒரு டாக்டர் விடாமல் செக் அப் செய்து கொண்டு, இன்னதுதான் டாக்டரைக் கேட்பது என்று வர்ஜா வர்ஜமின்றிக் கேள்விகள் கேட்டுத் துளைத்து ஒரு வழி பண்ணிவிடுகிற ராமசாமி சித்தப்பா வருகிறார்.

"நீங்க ரெண்டு காரியம் பண்ணலாம். ஒண்ணு, ஏதானும் மாறு வேஷம் போட்டுட்டு வந்து இங்கேயே, வீட்டுலயே, 'என்னோட மாமா'ன்னு சொல்லிட்டு இருக்கலாம். இல்லேன்னா பம்பாய், தில்லின்னு உங்க ஃப்ரெண்ட்ஸ் வீட்டுக்குப் போயிடலாம்!" என்றாள் ஜானகி.

"ஆமா. சித்தப்பா ஒரு மாசம் இங்கே இருக்கிற மாதிரி நான் பம்பாய்லயும் தில்லியிலயும் தங்கி இருக்க முடியாது. மாறு வேஷம் போட்டுக்கலாம்னா 'இந்தியன்' தாத்தா மாதிரி மேக் அப் போட்டுக்க எக்கச்சக்க செலவாகும். மூஞ்சி எல்லாம் வறவறன்னு வேற இழுக்கும்!"

ராமசாமி சித்தப்பா உயரம் என்றால் அப்படி ஓர் உயரம். ஆஜானுபாகுவான உடம்பு. காமராஜ் சட்டை. சாதாரணமாக ஓர் ஆடு தின்கிற தழை அளவுக்கு வெற்றிலை போடுவார்.

முப்பத்திரெண்டில் எந்தப் பல்லாவது வெளுப்பாய் இருக்கிறதா என்று தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டும். நின்ற இடத்திலிருந்து பேசினால் எட்டு ஊருக்குக் கேட்கும். எஸ்.டி.டி. ஐ.எஸ்.டி. எல்லாம் சித்தப்பா விஷயத்தில் தேவையே இல்லை...

"**எ**ங்கடா சாமா மேலயும் கீழயும் பார்த்துண்டு நிக்கறாய்?" என்று ப்ளாட்பாரம் ஒன்பதில் சித்தப்பாவின் ஸ்டென்டோரியன் குரல் கேட்டதும், அலறி அடித்துக்கொண்டு அருகில் போய் நின்றான் சாமிநாதன்.

ஒரு பெட்டியும், பெட் ஷீட்டில் சுற்றிய தலையணையுமாக, பிரம்மாண்டமாக நின்று கொண்டிருந்தார் சித்தப்பா. ப்ளாட்பார கூரையே கை உயர்த்தினால் எட்டி விடும் போல, விசுவரூப தரிசனம் மாதிரி இருந்தது.

"பத்து நாள்ள காதெல்லாம் ஒரே



# ஜமாலிக் சித்தப்பா

குடைச்சல். காதே கேட்கலை. இன்னிக்கே டாக்டர்ட்ட கூட்டிண்டு போயாகணும் நீ!"

"சாயந்தரம் போயிடலாம் சித்தப்பா!" என்றான் சாமிநாதன். அது சித்தப்பாவுக்குக் கேட்கவில்லை போலும்.

"என்னடா ஒண்ணும் உத்தரம் சொல்ல மாட்டேங்கறாய்?"

உத்தரமாவது, வாசக்காலாவது!

"அதான் சாயந்தரம் போகலாம்னேனே சித்தப்பா!" என்று இரைந்தான் சாமிநாதன். அது பிளாட்பார ஸ்பீக்கர்களில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த அறிவிப்புகளை மீறி ஒலித்ததில், சித்தப்பா காதில் விழுந்ததோ இல்லையோ, சகல சதர்ன் ரயில்வே பயணிகள் காதிலும் சத்தியமாய் விழுந்திருக்கும்.

காரில் ஏறியதும் சித்தப்பா காலை மடித்துச் சப்பணம் போட்டு உட்கார்ந்து கொண்டு விட்டார், வழக்கம்போல்.

வீடு போய்ச் சேர்ந்து குளித்து ரெஸ்ட் எடுத்துக் கொண்டு சாப்பிட்டுவிட்டு, கட்டில் விளிம்பைத் தாண்டிக் காலை நீட்டிக் கொண்டு படுத்தார் சித்தப்பா.

மாலை நாலு மணிக்கு "காபி போடட்டுமா?" என்று ஜானகி கேட்டபோது, "வெறும் காபியா? என்ன டிபன் பண்ணியிருக்காய்?" என்றார் சித்தப்பா.

ஒரு மணிக்குத்தான் சாப்பாடே ஆகியிருக்கிறது. நாலு மணிக்கு டிபன் கொண்டா என்கிறாரே மனிதர்!

"உப்புமா கிண்டிடு. பட்டாணி இருக்கா, பச்சப் பட்டாணி? நெறைய முந்திரிப் பருப்பை வறுத்துக் கொட்டு. பொட்டட்டோவப் பொடிப் பொடியா நறுக்கிப் போட்டுக்கோ. தக்காளி இருக்கோ? சின்னச் சின்னதா அரிஞ்சு போடு!"

ஜானகி சிறிய வாணலியில் உப்புமா தயாரித்துக் கொண்டிருக்கும்போது, தலை இடிக்காமல் அடுக்களைக்கு வந்து அடுப்பைப் பார்த்தார் சித்தப்பா.

"என்னது இது! இத்துனூண்டு பண்ணியிருக்காய்? எந்த மூலைக்கு இது! நாலு கரண்டி கூடக் காணாதே, ஹ்ம்!" என்றார் சித்தப்பா.

ஜானகியின் எந்தச் சமாளிப்பும் சமாதானமும் எடுபடவில்லை. அவள் நெளிந்த நெளிகளில் ஒடிசி, குச்சுப்புடி, பத்மா–நாட்டியம், பரத நாட்டியம் என்று சகல அம்சங்களும் நெளிந்தன.

"பெரிய வாணலியிலே பண்ணப் படாதோ?" என்று கடிந்து கொண்டான் சாமிநாதன்.

சித்தப்பா நாலைந்து முழுங்கலில் அத்தனை உப்புமாவையும் ஸ்வாஹா செய்தார்.

"ராத்திரிக்குச் சப்பாத்தி போரும். மெல்லிசாப் பண்ணத் தெரியுமில்லையோ?" என்றார் சித்தப்பா, உப்புமாவை ஒரு கை பார்த்த கையோடு.

"ரெண்டு மூணு டஜனாப் பண்ணி வச்சுடு" என்றான் சாமிநாதன். "பாதி ராத்திரி பன்னிரண்டு மணிக்கு எழுந்து பசிக்கறது என்பார் சித்தப்பா. ஒரு டஜன் தனியா டப்பால வச்சுடு!"

**மா**லை காது-மூக்கு-தொண்டை டாக்டரிடம் சித்தப்பாவைக் கூட்டிக்கொண்டு போன போதுதான், கையோடு ஒரு சிகையலங்கார நிபுணரையும் கூட்டிக்கொண்டு போகாமல் இருந்த பிசகு தெரிந்தது சாமிநாதனுக்கு.

சித்தப்பாவின் காது முழுக்கக் கொத்துக் கொத்தாக முடி, கோரைப் புல் கொரியன்புல் கணக்காய் வளர்ந்து செழித்திருந்தது.

"காது எங்கே?" என்றார் டாக்டர், சுற்றிச்

சாருகேசி

ஜுராஸிக் பார்க் படம் வெளியாகி இத்தனை ஆண்டுகள் ஆன பிறகும் கூட டினோசர்மேனியா இன்னும் குறைந்த பாடில்லை. டிஸ்னியின் டிஜிட்டல் ஸ்டுடியோவில், இன்னும் ஒரு அதி பிரம் மாண்ட டினோசர் பற்றிய



சினிமா தயாராகிறது. இதன் முதல் கட்டப் பணிகள் தொடங்கி பனிரெண்டு வருடங்கள் ஆகிவிட்டன. சுமார் நூற்று முப்பது மிலியன் டாலர் (சுமார் 560 கோடி ரூபாய்) இப் படத் துக்குச் செலவழிக்கப் பட்டுள்ளது.

அண்மையில், டிஸ்கவரி சேனலில் ஒளிபரப்பான டினோசர் பற்றி மூன்று மணி நேர டாகுமெண்டரி படத்தை உலகெங்கும் ஒண்ணே கால் கோடி பேர் பார்த்து ரசித்தார்கள். அதனை உலகம் முழுவ திலும் உள்ள முப்பது சேனல்கள், மறுபடி ஒளி பரப்ப அனுமதி பெற்றிருக் கிறார்கள்.

அது மட்டுமா? பிரிட் டனில் உள்ள டினோசர் மியூசியத்திலும் ஏகக் கூட் டம். அங்கு டினோசர் சாக்லேட் வெகு பிர பலம்.

சுற்றி வந்து.

“நீங்களே கண்டுபிடிச்சுக்குங்க, டாக்டர்!” என்று சாமிநாதன் சொல்ல நினைத்தான். வேறு ஒரு காது-மூக்கு-தொண்டை டாக் டராக இருந்தால், முதலில் காது நன்றாக வெளியே தெரிகிற மாதிரி பேஷன்ட்டைக் கூட்டிக்கொண்டு வாருங்கள் என்று தொண்டை கிழியச் சத்தம் போட்டிருப்பார். இவர் நல்லவர். அவருக்குச் சித்தப்பாவின் காதுதான் தெரியவில்லையே தவிர, சாமிநாதனை நன்றாகத் தெரியும்.

முதலில் இந்த முடியை எல்லாம் எடுத்தாலே போதும், சித்தப் பாவுக்குக் காது நன்றாகக் கேட்கும் என்று கூடச் சாமிநாதனுக் குத் தோன்றிற்று.

காதில் என்ன எல்லாமோ விட்டுக் கழுத்தைச் சாய்க்கச் சொன்னார் டாக்டர்.

“ஏராளமா வேக்ஸ் இருக்கு. கொஞ்சம் கொஞ்சமாத்தான் எடுக்கணும். எடுத்துட்டா சரியாயிடும்!” என்றார் டாக்டர்.

அத்தனை வேக்ஸ் இருந்தால் மேடம் டுஸாட்டின் வேக்ஸ் மியூசியத்தில் சித்தப்பாவின் சிலையையே தயார் பண்ணி விடலாமே என்று நினைத்து உள்ளுக்குள் சிரித்துக்கொண் டான் சாமிநாதன்.

நெய்வேலி சுரங்கத்திலிருந்து நிலக்கரி எடுக்கிற மாதிரி, தோண்டித் தோண்டி சித்தப்பாவின் காதுக் குறும்பியை எடுக்க வேண்டியிருக்குமோ?

காதில் திரவத்தை விட்டுக் கழுத்தை வலப்புறமும் இடப்புறமும் ஆட்டியதில் சித்தப்பாவுக்குக் கழுத்தில் ஒரே வலி.

“எனக்கு ஸ்பாண்டிலைடிஸ் இருக்கோன்னு சம்சயமா இருக்குடா!” என்றார் சித்தப்பா. “நாளைக்கே ஒரு ஆர்த்தோபீடிக் டாக்டர்ட்ட அப்பாயின்ட்மென்ட் வாங்கிடு. கேட்டயா?”

“அப்பாயின்ட்மென்ட் எல்லாம் ஒண்ணும் வேண்டாம் சித் தப்பா. வெறும் ஆயின்ட்மென்ட் போறும். கழுத்தைச் சுத்தி அழுத்தமா தேய்ச்சு விட்டால் வலி போயிடும்!” என்று சாமிநாதன் சொன்னதை அவர் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. எப்படி வாங்கிக் கொள்ள முடியும்? வேலிகாத்தான் செடி மாதிரி இருக்கிற அத்தனை முடியையும் தாண்டி, டன் கணக்கில் காதுச் சுரங்கத்தில் குவிந்து கிடக்கும் குறும்பியையும் தாண்டி அல்லவா அவர் செவி யில் அது போய்ச் சேர வேண்டும்?

மறுநாள் காலை, சித்தப்பா கழுத்து வலிக்கு ஆயின்ட்மென்ட் தடவிக் கொண்டிருந்தார். ஒரு முழு ட்யூப் காலி! எண்ணெய்க் குளியல் மாதிரி, இதென்ன ஆயின்ட்மென்ட் குளியலா!

“என்ன சித்தப்பா இது! கொஞ்சமா எடுத்து, வலிக்கற இடத் துல தேய்ச்சுட்டா வலி போயிடுமே?” என்று சாமிநாதன் சொன் னதை சித்தப்பா அலட்சியமாகக் கேட்டுவிட்டு, “இன்னம் ரெண்டு பாட்டில்கூட இந்த ஆயின்ட்மென்ட் வாங்கிடு. இல் லாட்டா ஆயுர்வேத வைத்தியசாலை ஏதாவது கிட்டக்க இருந்தா ஒரு பாட்டில் தைலம் வாங்கிண்டு வா. அது உடனே கேக்கும்” என்றார் சித்தப்பா.

சாதாரணமாகவே ஆயுர்வேதத் தைலங்கள் பினாயில் பாட் டில் சைஸில்தான் விற்கிறார்கள். இப்படி ஒரு ஜுராஸிக் சித்தப்பாவுக்கு, ஒரு டஜன் பாட்டில் அல்லவா தேவைப்படும்?

அவன் நினைத்த மாதிரியே, ஆயுர்வேத வைத்தியசாலையில் ஆறு பாட்டில்கள் கொடுத்தார்கள். கார் டிக்கியில் போட்டுத் தான் கொண்டுவர வேண்டியிருந்தது.

ஷாப்பிங் போறீங்களா 'தி.நகருக்கு'! மிஸ் பண்ணாதீங்க

# அஷ்வதீஸ் இருக்கு

(புடவைகளின் உலகம்)

- பாலி காட்டன்
- பெங்கால் காட்டன்
- வெங்கடகிரி
- ஆர்கன்ஸா
- ஷிபான்
- பூனம்

**5%**
சிறப்புத் தள்ளுபடி
31.07.2000
வரை

- காட்டன்
- போச்சம்பள்ளி
- கோரா சில்க்
- ஜார்ஜெட்
- கிரேப்
- கார்டன்




ஏராளமான ரகங்களில் புது டிசைன்களில்
புடவைகள் மற்றும் நைட்டிகள்
நீங்கள் விரும்பும் விலையில்
(ரூ. 150/- முதல் ரூ. 4,500/- வரை)

**Shop No. 14, Arihant-VTN Presidency**
**139, North Usman Road, T. Nagar,**
**Chennai - 17. Ph : 8218485**

# உடனே வேலை பெற

நேரிலும் தபாலிலும்

# ஓவிய ஆசிரியர் பயிற்சி

வரும் நவம்பரில் தமிழ்நாடு அரசுத் தொழில் நுட்பத் (ஓவியம்) தேர்வு எழுதி நீங்களும் ஓவிய ஆசிரியர் ஆகலாம். கல்வித் தகுதி: SSLC, +2, தேறிய, தவறிய ஆண்கள், பெண்கள். போட்டியில்லாத வேலை வாய்ப்பு. அரசுப் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் பணியாற்றலாம். அடிப்படைச் சம்பளம் ரூ. 4,500 + இதர படிகள் சேர்த்து ரூ. 6,100/- வரை மாதச் சம்பளம். எளிமையான பயிற்சி. வெற்றி நிச்சயம். குறைந்த பயிற்சிக் கட்டணம். வீட்டில் இருந்தபடியே தபால் மூலம் படிக்கலாம். நேர்முகப் பயிற்சியும் உண்டு.

**விவரப் புத்தகம் இலவசம்**

**AJANTHA SCHOOL OF ARTS**
**(Govt. Regd. No. 1075/89/MS/RD)**
**6, Muthu Nagar, (Near Sundar Thirumana mandapam)**
**POONAMALLEE, CHENNAI - 600 056.** **Ph : 649 0363**

இந்தியப் பிரதமர் லாகூருக்கு பஸ்ஸில் போக, பாக். பிரதமர் வரவேற்றது அந்தக் காலம். இப்போது நிலைமை நேரெதிர். அண்மையில், ஜெனரல் முஷ்ரபும், நமது மத்திய அமைச்சர் முரளி மனோகர் ஜோஷியும், ஒரே விமானத்தில் கியூபா சென்றபோது, சில இருக்கைகள் இடைவெளியில் அமர்ந்து ஒரே விமானத்தில் பயணம் செய்தனர். ஆனால் இரண்டு பேரும் முகம் பார்த்துப் புன்னகை செய்துகொள்ளக் கூட இல்லை!





காரைவிட்டு சாமிநாதன் இறங்கும்போது "என்ன தைல பாட்டில் வாங்கலியா?'' என்று கேட்டாள் ஜானகி.

"பின்னால டிக்கியில இருக்கு!"

''டிக்கியிலயா? அதென்ன மருந்தா, லக்கேஜா?"

"ஆமா! பின்னே இங்க் பாட்டில் மாதிரி சின்னதா தருவான்னு பார்த்தியாக்கும். ஆயுர் வேத தைலம் எல்லாம் அப்படித்தான். மலம் புழா, முல்லைப்பெரியாறு அணைல எல்லாம் போய்த்தான் நிறைச்சுண்டு வருவா போல் ருக்கு!"

அன்றைக்குக் குளிக்கப் போவதற்கு முன்னால் சித்தப்பா இரண்டு பாட்டில் தைலத்தைத் தீர்த்துவிட்டார். அனுமார் சிலைக்கு எண்ணெய்க் காப்பு செய்த மாதிரி, அவர் பாத்ரூம் முன்னால் நின்றபோது, அடுத்து என்ன டிமாண்ட் வைக்கப் போகிறாரோ என்று பயந்து போய் உட்கார்ந்திருந்தான் சாமிநாதன்.

ஒரு மணி நேரம் போலக் குளித்து விட்டு வந்த சித்தப்பா சாப்பிட உட்காரும்போது, "முதுகெல்லாம் ஒரே வலிடா. தைலம் தேச்சுத் தேச்சு ஒரே வலி. கை வலி. இடுப்புல வலி. என்ன பண்றது?" என்று கேட்டார்.

''யோகா பண்ணினா எல்லாம் சரியாயிடும் சித்தப்பா. அதான் பெஸ்ட் ட்ரீட்மெண்ட். இந்த மருந்து, தைலம் எல்லாம் ஒண்ணும் சரிப்படாது!''

"ஐயோ வேண்டாம்!" என்றாள் ஜானகி. "டாக்டர் டாக்டரா அலையறாப்பல, யோகா சென்டர்களுக்கும் இவரை இழுத்துட்டுப் போகணுமா?"

சாமிநாதனுக்கு ஜானகி சொல்லுவது சரியாகவே பட்டது. சித்தப்பா காலை மடித்துக் கொண்டு உட்கார்ந்தாலே மற்றவர்கள் நிற்கிற உயரத்துக்கு இருப்பார். 'உட்காருங்க' என்பார் யோகா ஸ்பெஷலிஸ்ட். 'உட்கார்ந்து தானே இருக்கேன்!' என்பார் சித்தப்பா. எதுக்கு வம்பு?

"எங்கேடா, ஏதோ யோகா சென்டருக்குக் கூட்டிண்டு போறேன்னயே?''- சித்தப்பா விடவில்லை.

"இந்த வாரம் பூரா யோகா ஸ்பெஷலிஸ்ட் இருக்க மாட்டார் சித்தப்பா. அமெரிக்கா, கனடான்னு ஓடிண்டே இருப்பார்!

"பிளேனுக்கெல்லாம் காசு செலவழிக்க மாட்டாரோ? ஊர் ஊரா ஓடி ஓடித்தான் யோகா சொல்லித் தருவாரோ?'' என்று கிண்டலாய்க் கேட்டார் சித்தப்பா.

"இந்த யோகா எல்லாம் சின்ன வயசுல நான் படிக்காததா?" என்று சர்வாங்காசனம், மயூராசனம், சிரசாசனம் என்று பல சாசனங்கள் உருவாக்க சித்தப்பா புறப்பட்டபோது, சாமிநாதனுக்கு மறுபடி வயிற்றைக் கலக்கியது.

சித்தப்பாவைப் பாலக்காட்டுக்குக் கிளப்ப என்ன வழி என்று சாமிநாதன் இருக்கிற கொஞ்ச நஞ்ச மூளையைக் கசக்கிக் கொண்டு யோசித்தபோது, ஒரு யோசனை உதித்தது.

"ஏன் சித்தப்பா, பிளஸ் டூ ரிஸல்டெல்லாம் வந்தாச்சே. மாலு மேல என்ன பண்ணப்போறா?"

"ங்?" என்றவர், "காலேஜ்தான். நிறைய இடத்துல அப்ளை பண்ணிருக்கா" என்றார்.

"நல்லாருக்கே. அட்மிஷனெல்லாம் ஆரம் பிச்சாச்சு. நீங்க அவ கூட இல்லேன்னா எப்படி?" என்றான் சித்தப்பாவின் மகள் மேல் மாளாத அக்கறை கொண்டவனாக.

சித்தப்பா ஒரு கணம் யோசித்தார்.

"எவ்வோ பாசம்டா தங்கைமேல் உனக்கு. நான் முடிவு பண்ணிட்டேன்."

சாமிநாதன் கலவரமாக அவரைப் பார்த்து, "என்ன முடிவு சித்தப்பா?"

''பாலக்காடு ஒண்ணும் எனக்கு சரிப்படலை கேட்டியா? இங்க மெட்ராஸ் வந்துடலாம்னுதான் பார்க்கறேன். சித்தப்பாவுக்குத் தேடித்தேடி டாக்டர் பார்க்கறவன் என் பொண்ணுக்கு ஒரு அட்மிஷனா வாங்கித் தர மாட்டாய்?"

சற்று நேரம் பிரமைபிடித்து நின்ற சாமிநாதன், பிறகு தனக்கு பாலக்காடு டிரான்ஸ்பர் கிடைக்க வழியுண்டா என்று யோசிக்க ஆரம்பித்தான்.

## மணம், குணம், சுவை

நிரம்பிய அனைத்து உணவுப் பொருட்களும்
கிடைக்கும் ஒரே ஸ்தாபனம்

KS&Co

# K. SUBRAMANIAM & Co

KS&Co

*A.C. DEPARTMENT SUPER STORE*

**47, SOUTH WEST BOAG ROAD T.NAGAR. ✆ 4337516 / 4337526**

*தரமான அரிசி, பருப்பு வகைகள், அனைத்து டிபார்ட்மெண்ட் பொருட்கள் மட்டுமல்லாமல், Fancy பொருட்கள் மற்றும் சுத்தமான காய்கறி வகைகளும் கிடைக்கும்.*

விரைந்திடுவீர் இச்சலுகை ஆகஸ்ட் 31, 2000 வரை மட்டுமே

ஒவ்வொரு முறையும் ரூ 500க்கு மேல் பொருட்கள்
வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு 500 கிராம்
பாசுமதி அரிசி (அ) 1000 கிராம் சர்க்கரை இலவசம்.

**NAVARATHIRI SPECIAL OFFER**

**1.7.2000 முதல் 31.8.2000 வரை ரூ. 500க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களில் பத்து நபர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.500க்கான பொருட்களை இலவசமாக அளிக்கிறோம். (2.9.2000 காலை 10 மணிக்கு வாடிக்கையாளர்கள் முன்னிலையிலேயே குலுக்கல் நடைபெறும்)**

**BRANCHES**

21. NATESAN STREET, T.NAGAR, CHENNAI -17 ✆ 4345522 / 4341188
1, SINGARA GARDEN II[nd] STREET, WASHERMENPET, CHENNAI - 21 ✆ 5953894 / 5953822

**VISA & MASTER CREDIT CARDS ACCEPTED**

VISIT US @www.tnagar.com/ksandco. E-Mail - ks and co @ tnagar. com



படித்துப் பயன் பெற! பரிசளித்து மகிழ்ந்திட!

தமிழ்ப் புத்தகாலயம்

# தமிழ்ப் புத்தகாலயம்—தாகம்

8. மாசிலாமணித் தெரு (பிளாட் 3), பாண்டிபஜார், தி.நகர்,
சென்னை - 600 017 ✆: 4345904
email:tamilputhakalayam@yahoo.com

**பரபரப்பான விற்பனையில்!**

| | | |
|---|---|---|
| உள்ளொளிப் பயணம் | இறையன்பு | 100/- |
| ஏழாவது அறிவு (120 நாட்களில் 2ம் பதிப்பு) | இறையன்பு | 75/- |
| ஐ.ஏ.எஸ் தேர்வும் அணுகுமுறையும் (ஆறாம் பதிப்பு) | இறையன்பு | 40/- |
| விண்டோஸ்தான் என்ன? | க. அபிராமி | 100/- |
| மல்டி மீடியா கற்றுக் கொள்ளுங்கள் | க. அபிராமி | 75/- |
| கணினி ஓர் அறிமுகம் (2ம் பதிப்பு) | க. அபிராமி | 18/- |
| பச்சை மரம் ஒண்ணு (படங்களுடன் சிறுவர் கதை) | க. அபிராமி | 45/- |
| வெற்றியின் ரகசியங்கள் (13ம் பதிப்பு) | அகிலன் | 55/- |
| இன் தமிழ்க் கடிதங்களும் கட்டுரைகளும் (8,9,10ம் வகுப்பு மாணவர்க்கு) | மா. பேபி சரோஜா பி.லிட், பி.எட் | 42/- |
| சிரிப்போ சிரிப்பு (படங்களுடன்) | அ. குமார் | 16/- |

பணி நேரம்: 9.30 — 6.00 ஞாயிறு விடுமுறை விபிபிக்கு எழுதுங்கள் :

*அகிலன், நா.பா, ராஜம் கிருஷ்ணன், இந்துமதி, மாலன், வாஸந்தி நூல்கட்கு எழுதுங்கள்!*

படித்துப் பயன் பெற! பரிசளித்து மகிழ்ந்திட!


படித்துப் பயன் பெற! பரிசளித்து மகிழ்ந்திட!
படித்துப் பயன் பெற! பரிசளித்து மகிழ்ந்திட!



# மேயரின் வாழ்த்து; மடாதிபதிகளின் ஆசி!

பிளஸ் டூ தேர்வில் அக்கவுண்டன்ஸியில் சாந்தி மாநிலத்திலேயே முதல் இடம். தீபப்ரியா, உணவு பதப்படுத்துதல் பாடத்தில் மாநிலத்தில் முதல் இடம். அறிவுடைநம்பி தத்துவப் பாடத்தில் மாநிலத்தில் முதல் இடம். இந்த மூன்று பேருமே சென்னை மாநகராட்சிப் பள்ளிக்கூடத்து மாணவ மாணவிகள்.

இவர்களுக்கும், மற்ற மாநகராட்சிப் பள்ளியில் படித்து அதிக மார்க் வாங்கிய மாணவர்களுக்கும், சங்கரா கல்வி அறக்கட்டளை ரொக்கப் பரிசும், வெள்ளிப் பதக்கமும் வழங்கியிருக்கிறது. காஞ்சி மடத்துப் பெரியவர்கள் முன்னிலை வகித்து ஆசீர்வதிக்க, மேயர் மு.க.ஸ்டாலின் பரிசுகளை வழங்கினார்.

மாநில அளவில் முதல் மார்க் வாங்கிய மூவரையும் சந்தித்துப் பேசினோம். அக்கவுன்டன்சியில் முதல் மார்க் வாங்கிய சாந்தியின் அப்பா ஒரு போஸ்ட்மேன். ஒரு சகோதரன் ஒரு சகோதரி. "தினமும், அன்று நடந்த பாடங்களைப் படித்து விடுவேன். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களும், அப்பா, அம்மாவும் கொடுத்த ஊக்கம், பொதுத் தேர்வை சிறப்பாக எழுதக் காரணமாக இருந்தது. நிறைய மார்க் வரும் என்ற நம்பிக்கை இருந்தது. இருநூறுக்கு இருநூறு என்பது இனிய ஷாக்!" என்று கூறும் சாந்தி, எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் பி.காம்., படிக்க விண்ணப்பித்திருக்கிறார்.

உணவு பதப்படுத்துதலில் முதல் மார்க் வாங்கியுள்ள தீபப்ரியாவின் குடும்பம் ஏழ்மையானது. இவரது அப்பா வைத்திருந்த கடையில் ஏகப்பட்ட நஷ்டம். "அக்கா, டைப்பிஸ்ட் வேலை பார்த்துக் கிடைக்கிற சம்பளத்தை நம்பி ஜீவனம் நடக்கிறது. எனக்கு அடுத்து நியூட்ரிஷியன் அண்டு டயடிக்ஸ் படிக்க வேண்டும் என்கிற ஆர்வம். காயிதே மில்லத் கல்லூரியில் விண்ணப்பமும் போட்டிருக்கிறேன். மாநிலத்தில் முதல் ரேங்க் என்பதால் சீட் கிடைப்பதில் சிக்கல் இருக்காது. ஆனால், படிப்பைத் தொடர முடியுமா என்பதுதான் இன்று முன் எழுந்து நிற்கும் கேள்வி" என்கிறார். குடும்பத்தினர் வசதி இல்லையே என்று சோகமாய்க் கூறுகிறார்கள்.

அறிவுடைநம்பியின் அப்பா ஒரு பியூன். அப்பாவும், ஆசிரியர் குமாரும் அளித்த ஊக்கம், இவர் மாநிலத்தில் முதல் மாணவராய் வரச் செய்துள்ளது. "என் சாய்ஸ் தொழிற் கல்விதான். சென்னை மாநகராட்சி நடத்தும் சமுதாயக் கல்லூரியில் கம்ப்யூட்டர் பயிற்சி பெறப் போகிறேன். கம்ப்யூட்டர் படித்தால் நல்ல வேலை கிடைக்கும். குடும்பத்தைக் காப்பாற்ற உதவியாக இருக்கும்'' என்கிறார் குடும்பப் பொறுப்பை உணர்ந்தவராக.

பரிசுகளை வழங்கி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் உரையாற்றிய போது, "படிக்கிற போது குட் பாய், குட் கேர்ள் என்று நல்ல பெயர் வாங்கினால் மட்டும் போதாது. வளர்ந்து பெரியவர்களானதும், 'நல்ல மனிதர்' என்று பெயர் எடுக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியின் இறுதியில் தேசிய கீதம் ஒலித்த போது காஞ்சி மடாதிபதி அடென்ஷனில் நின்றும் இளையவர் கூடவே பாடியும் நாட்டுக்கு மரியாதை செய்தனர்.

— மௌலி

படம் : யோகா

கங்கை வழங்கும் சிறப்பு வெளியீடு!

# கம்பராமாயணம்

மூலமும் படலக் கதைச் சுருக்கமும்

**(ஆறு காண்டங்கள்)**

கங்கை

பதிப்பாசிரியர்கள் : பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன்
பேராசிரியர் : தெ. ஞானசுந்தரம்

விலை விவரம் :

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் | ரூ. 75 | அயோத்தியா காண்டம் | ரூ. 75 |
| ஆரண்ய காண்டம் | ரூ. 60 | கிஷ்கிந்தா காண்டம் | ரூ. 50 |
| சுந்தர காண்டம் | ரூ. 75 | யுத்த காண்டம் | ரூ. 250 |

* ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் அருஞ்சொற்பொருள் விளக்கம்
* ஒவ்வொரு தொகுதிக்கும் பாடல் முதற்குறிப்பு அகராதி
* ஆங்காங்கே சித்ரலேகாவின் அரிதான காட்சிப் படங்கள்
* நல்ல வெள்ளைத் தாளில் அமைந்த அச்சு. கெட்டி அட்டை பைண்டிங்குடன் கூடிய சிறந்த பதிப்பு

ஆறு காண்டங்களும் 2400 பக்கங்கள், செட் விலை ரூ.585/- ஒரே செட்டாக வாங்குகிறவர்களுக்கு ரூ. 500க்குத் தரப்படும். பதிவுத் தபாலில் பெற ரூ. 530/- டிராப்டு அல்லது M.O. அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள்.

விரிவான விலைப்பட்டியலுக்கு எழுதுங்கள்.

வெளியீடு : **கங்கை புத்தக நிலையம்**

13, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 600 017.

## "5 வருட இடுப்பு வலியிலிருந்து ஆப்ரேஷன் இன்றி குணமடைந்தேன்!!!"



Lakshmi Iyer

ஸ்ரீமதி, லக்ஷ்மிஐயர்,
மேட்டூர்டேம் R.S.,
சேலம் மாவட்டம்,
தமிழ்நாடு.

கடந்த ஐந்து வருடங்களாக இடுப்பில் வலி இருந்து வந்தது. இதனால் குனிந்து நிமிரும் பொழுதும், சிறிது தூரம் நடக்கும் பொழுதும், உட்கார்ந்து எழுந்திருக்கும் பொழுதும், மாடிப்படி ஏறி இறங்கும்பொழுதும் , பிடிப்புடன் கூடிய வலி இருந்தது. ஆங்கில மருத்துவரிடம் சென்று **C.T. Scan** எடுத்துப் பார்த்த போது, இடுப்பில் கடைசி இரண்டு எலும்புகள் விலகி இருப்பதாக கூறினார்கள் **(L4, L5, DISC PROLAPSE)**இதற்கு சில மருந்துகளையும், இடுப்பில் போட்டு கொள்வதற்கு **Belt**-ம் எழுதிக் கொடுத்தார்கள். இருப்பினும் வலி நிற்கவில்லை. பின்பு ஆப்ரேஷன் **(Operation)** செய்தால் குணமடையும் என்று கூறினார்கள் அப்பொழுது **"MARC HERBAL CARE(P)LTD."** நிறுவனத்தின் விளம்பரத்தை செய்தித்தாள்களில் கண்டு நானும் எனது கணவரும் அங்கு சென்றோம். டாக்டரின் ஆலோசனைபடி அவர்கள் கொடுத்த மூலிகை பவுல்டீசை (Poultice) வெளிப்பிரயோகமாக தினமும் தவறாமல் தடவி வந்தேன். 9 வார தொடர்ச்சியான சிகிச்சைக்குப் பிறகு தற்பொழுது எனது வலிகள் அனைத்தும் நீங்கி பரிபூரண நிவாரணம் அடைந்தேன். நன்றி.

★ காலம் காலமாக வேதமகரிஷிகள் சித்தர்கள் கண்டுபிடித்து பரிசோதித்து அனுபவப்பட்டு வெற்றிகண்ட ஆயுர்வேத மூலிகை மருத்துவமுறைப்படி எங்களது நிறுவனம் ஒரு வெளிப்பிரயோக மூலிகை பவுல்டீசை (Poultice) கொண்டு ஆர்த்திரைட்டீஸ், ஸ்பாண்டிலைட்டீஸ், தோள்பட்டை வலி, முதுகுவலி, குதிக்கால்வலி, கைகால் மூட்டுவலி ஆகியவைகளுக்கு தகுதிவாய்ந்த அனுபவம் மிக்க ஆயுர்வேத, சித்தா மற்றும் அலோபதி மருத்துவர்களின் மேற்பார்வைகளின் கீழ் சிகிச்சை அளித்து வருகிறோம்.

★ ஒரு வரைப்போல் மற்றொருவரது உடல்வன்மை இருப்பது இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மை எனவே கால மாற்ற விளைவுகளால் மனிதனின் உடல்வன்மையில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம் என்பதை **MARC HERBAL CARE (P) LTD** நன்கு உணர்ந்துள்ளன.

கலந்து ஆலோசிக்க இப்போதே தொடர்பு கொள்க.
தொலைபேசி
**0413-346683**

காலை 9 மணி முதல், இரவு 7 மணி வரை
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

**MARC ஹெர்பல் கேர் (பி) லிமிடெட்**
32, செயின்ட் தெரேஸ் வீதி, பாண்டிச்சேரி – 1
(ராமன் தியேட்டர் எதிர் வீதி, ஃபார்ச்சூன் பேக்கரி எதிரில்)
**Fax : 91 - 0413 - 346683**

MARC HERBAL CARE







"**கொ**ஞ்சம் wait பண்ணுங்க."

"அந்த ஆளை வெளியே அனுப்பு."

"ரொம்ப புழுக்கமா இருக்கு. Fanஐப் போடு."

"File ஐ ஒழுங்கா அடுக்கி வை."

"மானேஜர் இன்னொரு போன்ல பேசிக்கிட்டிருக்காரு. கொஞ்சம் 'லைன்'ல இருங்க."

நமது அன்றாட வாழ்வில் இதுபோன்ற எத்தனையோ விஷயங்களைப் பேசுகிறோம். எல்லாவற்றையும் இங்கிலீஷ்லயே பேசணும்ங்கற ஆசை எல்லாருக்குமே உண்டு.

கொஞ்சம் try பண்ணினா எல்லாவற்றையும் ஈஸியா பேசலாம்.

கொஞ்சம் wait பண்ணுங்க என்பதை wait for some timeன்னு சொன்னால் போதும்.

இதையே கொஞ்சம் மரியாதையா சொல்லணும்னா please wait for sometime னு சொல்லுங்க.

இதை இன்னும் பணிவாகச் சொல்லணும்னு நீங்க ஆசைப்பட்டா 'Could you please'ங்கற வாக்கியத்தை use பண்ணி could you please wait for sometime?ன்னு சொல்லுங்க.

சரி, அடுத்ததா 'அந்த ஆளை வெளில அனுப்பு' – கோபமா மத்தவங்ககிட்ட இங்கிலீஷ்ல கத்தணும்னா,

முதல்ல வெளியே அனுப்புங்கறதை இங்கிலீஷ்ல எப்படிச் சொல்றதுன்னு தெரிஞ்சுக்கணும்.

'Send'ன்னா அனுப்பு;

'out'ன்னா வெளியே;

'send out' – வெளியே அனுப்பு.

'அவரை' அதாவது அந்த 'ஆளை'ங்கறதை எப்படிச் சொல்றது?

Heன்னா அவர்.

Hisன்னா அவருடைய.

Himன்னா அவரை.

எல்லாத்தையும் சேர்த்து send out himன்னு அவசரப்பட்டு சொல்விடாதீங்க.

இந்த out, up, off போன்ற வார்த்தைகளை

# ஆங்கிலமே அருகில் வா!

வி. ராஜகோபாலன்

வாக்கியத்துல use பண்றதுக்கு ஒரு rule இருக்கு.

அதைப் பத்தி சொல்றேன். கொஞ்சம் கவனமா கேளுங்க.

'send out'ங்கற வார்த்தையோட himங்கற வார்த்தையைச் சேர்க்கும்போது send பக்கத்துலயே himங்கறதைச் சேர்த்து 'out'ங்கறதைக் கடைசில தள்ளிடணும்.

அதாவது 'send out him'ங்கறதை 'send him out' ன்னு சொல்லணும். என்ன புரியுதா? கொஞ்சம் குழப்பமா இருக்கு இல்லியா?

இன்னும் ரெண்டு மூணு உதாரணம் சொல்றேன். புரியுதா பாருங்க.

Throw (த்ரோ)ன்னா 'எறி'ன்னு அர்த்தம். outன்னா வெளியே. ஏய், அதை வெளில தூக்கி எறின்னு சொல்லணும்னா,

throw out itன்னு சொல்றதுக்குப் பதிலா 'throw it out'ன்னு சொல்லுங்க.

Spitன்னா 'துப்பு'ன்னு அர்த்தம். ஏய், அது என்ன வாயில, வெளில துப்பித் தொலை' என்று சொல்லும்போது,

'spit it out'ன்னு சொல்லுங்க.






**சு**ம்மா மென்று முழுங்காதே, என்ன சொல்லணுமோ சொல்லித் தொலை என்று (பேச்சு வழக்கில்) சொல்வதுண்டு. இதை 'come on, spit it out' என்றும் சொல்லலாம்.

என்ன இப்போ புரியுதா?

எல்லாத்தையும் இன்னொரு வாட்டி சொல்றேன். கவனிங்க.

Send him out. அந்த ஆளை வெளியே அனுப்பு.

Throw it out. அதை வெளியே தூக்கி எறி.

Spit it out. அதை (வெளியே) துப்பி விடு.

'Out'ங்கற வார்த்தையை வாக்கியங்கள்ல எப்படி use பண்ணணும்னு புரிஞ்சுருக்கும்'னு நெனக்கிறேன்.

இப்போ 'up'ங்கற வார்த்தையைப் பார்க்கலாம்.

'விண்ணப்ப மனு'ங்கறதை application form' னு சொல்றோம்.

ஒருத்தர்கிட்ட application formஐ கொடுத்து ஸார், இதை fill up பண்ணணுங்கன்னு சொல்லணும்னா 'fill up it'ன்னு சொல்றதுக்குப் பதிலா fill it upன்னு சொல்லுங்க.

**ரெண்டுமே கரெக்ட்தான்!**

கோடிட்ட இடங்களை நிரப்புங்கள் என்பதை Fill up the blanks என்றும், சிலர் Fill in the blanks என்றும் குறிப்பிடுவதுண்டு.

இதில் எது சரி என்ற குழப்பம் வேண்டாம். Fill in the blanks, Fill up the blanks இரண்டுமே சரிதான்.

மத்த விஷயங்களை அடுத்த வாரம் பார்க்கலாம்.

(தொடரும்)



**காச்-மூச்**

**கண. சிற்சபேசன்**

# டப்பா போயே போச்சு!

எங்காவது குடிதண்ணீர் அண்டாவுடன் தம்ளரைச் சங்கிலியால் இணைத்து வைத்திருந்தால் எனக்குக் கோபமல்ல, ஆத்திரமே பொங்கி வரும்! அப்படி இணைத்து வைத்தவர்கள் மீது அல்ல என் கோபம். அதற்குக் காரணமாக இருக்கும் பொது மக்கள் மீதுதான்! பொது இடங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நம் மக்கள் எப்போதுதான் தெரிந்து கொள்ளப் போகிறார்களோ என்று உள்ளம் குமுறும்.

தம்ளரைத் திருடிக் கொண்டு போகிறவர்கள் இருப்பதால்தானே, பாவம், தம்ளருக்கு 'காது குத்து கல்யாணம்' பண்ணி, தாலி போல சங்கிலியைப் போட்டுக் கட்டி வைக்கிறார்கள்!

எம்.எம். இஸ்மாயில் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்தபோது அங்கேயும் இப்படி தம்ளரைச் சங்கிலியால் இணைத்து வைத்திருந்தார்கள்.

'என்ன ஸார்? - என்ன மாதிரியான உயர்ந்த இடம் இது! உங்களைப் போன்ற நீதிபதிகளும், வழக்கறிஞர்களும்தானே இங்கே வருகிறார்கள்! இங்கே போய் ஏன் தம்ளரை...' என்று ஒருமுறை இஸ்மாயில் அவர்களிடம் இழுத்தேன்.

'உன்னைப் போலவும் சில ஆட்கள் அப்பப்ப இங்கே வராங்களே' என்றார் அவர்!

பொது இடங்களில் நேர்மையாக நடந்து கொள்கிறார்களா என்பதைச் சோதிக்க ஒருமுறை, ஒரு திட்டம் போட்டோம். மதுரையில் ஒரு பொது இடத்தில் தபாலாபீசிலிருந்து இன்லண்ட் கவர்கள்/கார்டு/கவர் என்று நிறைய வாங்கி அடுக்கி வைத்தோம். பக்கத்தில் ஒரு டப்பா வைத்தோம். பொதுமக்கள் உரிய காசைப் போட்டு விட்டு கார்டையோ, கவரையோ எடுத்துக் கொள்ளலாம். தினமும் எண்ணிப் பார்த்தோம். விற்பனையானவற்றின் மதிப்பை விட டப்பாவில் அதிகமாகவே பணம் இருந்தது. ஒரு ரூபாய் போட்டு எழுபத்தைந்து பைசாவுக்கு (அந்த நாளில்) கவர் வாங்கி, டப்பாவில் மீதி சில்லறை இல்லாமல் போனதால் சரி போகட்டும் என்று அப்படியே போய் விட்டதால் சேர்ந்த உபரி அது. 'அடடே! நம் மக்களிடம் இப்படி ஒரு நேர்மையா! பரவாயில்லையே' என்ற மகிழ்ச்சியில் தினம் தினம் பணத்தை எண்ணி அந்த டப்பாவிலேயே போட்டு வைத்திருந்தோம். ஒரு வாரம் பிரச்னையே இல்லை.

எட்டாவது நாள் அந்த டப்பாவையே காணோம்!

— **ராணிமைந்தன்**

படம் : **வெங்கடேஷ்**



காஞ்சி காமகோடி பீடாதிபதி அருள்மிகு
ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மற்றும்
அருள்மிகு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி
சுவாமிகள் ஆசீர்வாதங்களின் நல்லாசியுடன்

FIRST SATELLITE TOWNSHIP !!
**NEW KANCHI NAGAR**
Enathur Near Kanchipuram

**2400 sq.ft**
**Rs.36,000/-**

மத்திய அரசு நிறுவன பணியாளர்கள்
வீட்டு வசதி கூட்டுறவு சங்கம்

(Multi State Co-operative Society Act 1984 - ன் கீழ் பதிவு செய்யப்பட்டது)
பதிவு எண் : MSCS/CR/81/99 - UNDER
(Department of Agricultural & Co-operation, Government of India)

**1, சுப்பாரெட்டி தெரு (லேக் வியூ ரோடு அருகில்)**
**மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.**

**இத்திட்டம் பற்றி** ★ இத்திட்டம் எல்லோருக்கும் பொருந்தும். ★ முதலில் வருபவருக்கு முதல் இடம். ★ Central Acts ல் பதிவு செய்யப்பட்டது. லாப நோக்கத்தோடு செயல்படவில்லை. சேவையை அடிப்படையாக கொண்டது. D.T.P. அங்கீகாரம் பெற்றுள்ளது.

**அருகாமையில்** ★ காஞ்சி காமகோடி சங்கர மடம், காமாட்சி கோவில், ஏகாம்பரநாதர் கோவில், வரதராஜ சுவாமி கோவில், ★ ஸ்ரீ சந்திர சேகர சரஸ்வதி விஸ்வ மகா வித்யாலயா, காஞ்சி பல்கலைக்கழகம், பாலிடெக்னிக், கலை, அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகள், மருத்துவ கல்லூரி (கட்டப்பட உள்ளது) L & T மற்றும் அட்கோ நிறுவனங்கள். ★ Hi-Tech சிட்டி நிறுவப்படவுள்ளது.

★ முன்பதிவு மூலம் மனையை பார்வையிட வாகன வசதி செய்து தரப்படும்.
★ குரூப் பதிவு ஏற்றுக்கொள்ளப்படும். ★ உடனடி பத்திர பதிவு செய்யப்படும்.

K. GOVINDAN M.A.M.L. CHAIRMAN ✆ (O) (044) 3711597 (R) 489 6362

திரு. பாபு 2A, காமாட்சி அம்மன் தெற்கு மாட வீதி, காஞ்சிபுரம் போன் : 20093

www.satellitetown.com





**1898 ஆண்டு முதல்**

**வைத்ய ரத்ன பண்டிட்**
**D. கோபாலாசார்லு**
**அவர்களின்**

**ஆயுர்வேதாஸ்ரமம்**
**ஜீவாம்ருதம்**

**மற்றும்**

பாரம்பரிய ஆயுர்வேத வைத்திய முறையில்
பல வியாதிகளுக்கும் தீர்வு காண

- மூலிகைகள் ஆயுர்வேத மருந்துகள்
- ஒவ்வொருவருக்கும் அவரவர் உடல் நிலைக்கு ஏற்ப சிகிச்சை
- ஆயுர்வேத பஞ்சகர்மா முறை

முதலியன உடல் புத்துணர்ச்சி பெற, மன அமைதி பெற, வாத சம்பந்தமான நோய்கள் மூட்டு வலி, நரம்பு தளர்ச்சி முதலியவற்றுக்கு சிகிச்சைகள்

**ஆயுர்வேதாஸ்ரமம்**
**பிரைவேட் லிமிடெட்**
70, ஜி.என். செட்டி ரோடு,
தி. நகர், சென்னை - 600 017
போன்: 8281381, 8214193


## நலம் தரும் நவராத்திரியில் வளம் தரும் ஹோமம்!

அன்னை காமாட்சி தவம் புரிந்ததாகக் கருதப்படும் வேலூர் மாவட்டம் கொண்டாபுரம் திருத்தலத்தில் அருள்புரியும் ஸ்ரீ பஞ்சவர்ணேஸ்வரர் ஆலயத்தில் புரட்டாசி மாதம் 15-ம் தேதி (1.10.2000) சுக்கில பட்சம் சதுர்த்தி திதி, விசாக நட்சத்திரம் கூடிய நன்னாளில் தருமபுர ஸ்ரீசுதர்சன பீடாதிபர் ஸ்ரீ.உ.வே. லக்ஷ்மி நரசிம்மாசாரிய சுவாமிகள் தலைமையில் உங்கள் இல்லமெல்லாம் செல்வம் செழிக்கச் செய்யும் ஸ்ரீசூக்த – ஸ்ரீதனாகர்ஷண ஹோமம் – 108 ஸ்ரீ லக்ஷ்மி கடாட்ச யந்த்ர பூஜை சனிப் பெயர்ச்சி ப்ரீதியுடன் நடைபெற பரம்பரை அறங்காவலர்களில் ஒருவரான B. செந்தில்நாதன் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்.

மேற்படி ஹோமத்தில் சங்கல்ப கட்டணம் ரூ.100/- செலுத்துவோர்க்குப் பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும். ரூ. 250/- அனுப்புபவர்க்கு மகாலட்சுமி வெள்ளி டாலர் கூரியர்மூலம் அனுப்பி வைக்கப்படும். ரூ.2000 செலுத்துபவர்களை நாங்களே சென்னையிலிருந்து நேரில் அழைத்துச் சென்று, ஹோமத்திலும், 108 லக்ஷ்மி கடாட்ச யந்த்ர பூஜையிலும் பங்கேற்க வைத்து, ஹோம பிரசாதமும், லக்ஷ்மி கடாட்ச யந்த்ரமும் அளித்து, அழைத்து வருகிறோம்.

ஜாதகப்படி ஏழரைச் சனி – அஷ்டமச்சனி – அர்த்தாஷ்டமச் சனி (மேஷம் – ரிஷபம் – மிதுனம்– துலாம் கும்பம்) நடைமுறையில் இருப்பவர்கள் ரூ.2000/- செலுத்தி யந்த்ர பூஜையில் பங்கேற்பதன் மூலம் கஷ்ட நஷ்டங்களிலிருந்து விடுபடலாம். செல்வச் செழிப்பு காணலாம். கட்டணங்களை *ஸ்ரீ லக்ஷ்மி நாராயண யஞ்ய சமிதி* என்ற பெயருக்கு எம்.ஓ, டி.டி, காசோலை மூலமாக எடுத்து, *582, 18-வது தெரு, அஷ்ட லட்சுமி நகர், ஆலப்பாக்கம், சென்னை – 600 116* என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். அனைவரும் செழிப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.

# இரட்டைப் பிள்ளை

ராஜுவின் இரட்டைப் பிள்ளை லுக்கு நிகரான புகழுடன் விளங்கிய விஷயம் அவனது இரட்டை நாயனக் குரல். பிறந்த போது அவன் அழுத அழுகையில் செவிப்பறை கிழிந்து போய், டாக்டர் சாந்தகுமாரி டி.ஜி.ஓ. ஓர் ஈ.என்.டி.யை அவசரமாகத் தேடி ஓடியதாக நித்யகல்யாணி நர்சிங்ஹோமில் சொன்னார்கள்.

"குழந்தைக்குத் தொண்டை நன்னாருக்கு... கோரோஜனையே போட்ட வேண்டாம்..." என்று சந்தோஷப்பட்டுக் கொண்ட அம்புஜம் பாட்டிக்குப் பிறவியிலேயே 'இரு செவியும் மந்தம்'. கிச்சாமி தாத்தா, ராஜு வாய் திறப்பதற்கு முன் ஹியரிங் எய்டை மறக்காமல் ஆஃப் செய்தாரென்றால் சந்துரு தாத்தா அதைத் தொலைத்தே விடுவது என்று தீர்மானித்துச் செயல்படுத்தியும் விட்டார்! அவரது தர்மபத்னி ராஜம்மாள் 'இந்த வம்பெல்லாம் எதற்கு?' என்று ராஜுப் பயல் அவன் அம்மாவின் கர்ப்பத்திலிருந்த போதே சொர்க்கத்துக்குச் சீட்டு வாங்கிக் கொண்டு போய் விட்டாள்.

பெற்ற புண்ணியத்துக்காக ராஜுவின் இரட்டை நாயனத்தைச் சகித்துக் கொள்ளும் பிரத்யேக பாக்கியம் அவன் அம்மா சுசீலாவுக்கு மட்டும்தான் வாய்த்தது.

ராஜுவின் அப்பாவாகப்பட்ட கோபி, உலகத்துப் பிற அப்பாக்களைப் போலவே பொறுப்புணர்ச்சி மிக்க ஆண்பிள்ளை. ஆகவேதான் டாக்டர் சாந்த



குமாரிக்கு நேர்ந்த கதியைக் கேள்விப் பட்டதும் வங்கியின் கூடுவாஞ்சேரி கிளைக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு விட்டான்! ராஜு துயிலெழு முன் புறப்பட்டுப் போய் அவன் துஞ்சிய பிறகே திரும்பினான். விடுமுறை நாட்களில் காதுக்குக் கால் கிலோ வீதம் பஞ்சை அடைத்துக் கொண்டு அந்தப் பஞ்சில் கழுத்து நோவெடுத்துத் தூங்கிப் போனான்.

# ராஜு

ஸீதா ரவி

"குழந்தைக்கு நன்னா கார்வை நிக்கறது. சீக்கிரமா யாரையாவது சிட்சைக்கு ஏற்பாடு பண்ணு..." என்று அவன் பிறந்த ஏழாம் மாதமே பாட்டியைச் சிலாகிக்க வைத்தது.. ராஜுவின் உச்சஸ்தாயி அழுகை.

"ஊஹூம்! கடைசி வரைக்கும் மூச்சை நன்னா பிடிச்சுக்கறான் பாரு... இவன் பெரிய ஸ்விம்மராத்தான் வருவான்..."என்று ஒரு



விரைவில்...
பக்திப் பரவசத்தில்
ஒரு புதிய ஆன்மிகத்

தாத்தாவும்,

''சே! சே! குடும்பத்துக்கே ஜலத்துல கண்டம்யா! அவனைக் கபடியிலே விடணும்'' என்று இன்னொரு தாத்தாவும் பகல் கனவுகளில் பரவசப்பட, ராஜுவும் பள்ளிப் பருவம் அடைந்தான்.

அவன் அழுகைக்குப் பயந்து கொண்டு ஏழுமலையானுக்கு முடிகொடுக்காமல் அ.தி.மு.க. வக்கீல்களைக் காட்டிலும் அதிக முறை வாய்தா வாங்கி விட்டாள் சுசீலா. ஆகவேதான் ராஜுவின் கூந்தல் இரட்டைப் பின்னல்களாக முடையப்பட்டு நீண்டு கிடந்தது.

'கொஞ்சம் வெட்டி தனியா எடுத்து வைச்சுட்டா என்ன... பின்னும்போது தினம் இவன் இடுகிற ஊளையில் ராத்திரியெல்லாம் துர்ச்சொப்பனம் வருகிறதே...?'

'அச்சச்சோ! தொடப்படாது! பெருமாளுக்குத்தான் முதல்ல முடிகுடுக்கணும்.'

'இங்கேருந்து எடுத்துண்டு போய்க் குடுத்தாப் போச்சு...'

'சும்மாயிரு! உன் சீப்புக்கே இத்தனை கத்தினா கத்திரிக்கு டெசிபல் எங்க போகும் யோசிச்சியா...?'

– இப்படியான ஜீவ-மரண போராட்டத்தில் சுசீலாவும் அவள் அந்தராத்மாவும் ஈடுபட்டுத் தவித்த பிறகு, கடைசியில் பெருமாளே பார்த்துக் கொள்ளட்டும் என்ற முடிவுக்கு வந்திருந்தனர்.

காலை ஏழரைக்கு சுசீலா கையில் சீப்பைக் கண்டதும் பாயிரம் பாட ஆரம்பிக்கும் ராஜுவின் தொடர் அழுகை தாளாமல் தலையைப் பிய்த்துக் கொண்டதில், சுசீலாதான் அந்தப் பெருமாள் கேட்காமலே தினமும் முடிகொடுத்துக் கொண்டிருந்தாள்!

**ம**ழலையர் பள்ளியில் இருந்தவரை பிரச்னையிருக்கவில்லை. பால்குடி மறவாத பிற பிள்ளைகளிடையே ராஜு இருந்ததால் அவர்கள் அவனது ஜடையைப் பிடித்திழுக்கவோ கேலி செய்யவோ முயற்சி செய்யவில்லை.

ஆனால் இப்போதைய கதையே வேறு. ராஜு, ஒன்றரை கிலோ புத்தகங்கள் சுமக்கும் எல்.கே.ஜி. ஸ்காலர்! அவன் சகாக்களோ, பின்னலைப் பின்னின்று இழுக்கும் விளையாட்டின் மேன்மையை முற்றிலும் உணர்ந்திருந்தனர்.

இழுத்த மறுகணமே அவன் குரல் 1200 வாட்ஸில் அலறும் மைக்கேல் ஜாக்ஸன் அளவுக்குப் போய்விட, டீச்சரின் கவனமும் சக்தியும் அவனை அடக்கவே முழுவதுமாகச் செலவாகிவிடும். பாடங்கள் இல்லாமல் அன்றைய பொழுது மணல் விளையாட்டு என்ற சுதந்தர மாநிலத்தில் கழியும்.

இந்த கின்டர்கார்டன் ராஜதந்திரம் தினசரி வழக்கமாகிவிட, ஒரு கட்டத்தில் ராஜுவின் பெற்றோருக்குப் பள்ளியிலிருந்து 'சீட்டு' வந்து விட்டது :

*உங்கள் குழந்தைக்கு முடிவெட்டி நீட்டாக அனுப்பாவிட்டால் பள்ளியிலிருந்து வெளியேற்ற வேண்டியிருக்கும். – ஒரு வாரம் அவகாசம் தருகிறோம்.*

பெருமாள் காணிக்கைக்கு இனிமேலும் வாய்தா கேட்க முடியாது.

ஏழுமலைகளிலும் எதிரொலிக்கக்கூடிய ராஜுவின் குரலை எண்ணிக் குலைநடுங்கினாள் சுசீலா.

'பெருமாளே! இவன் மட்டும் முடியெடுக்கும் பணியாளரைத் துரத்தியடிக்காமலிருந்தால் நானும் உனக்கு முடிகொடுக்கிறேன்' என்று வேண்டிக் கொண்டான் கோபி!

**ப**யணம் முழுக்க சமர்த்தாகத் தூ[illegible]க் கொண்டே வந்த கோபி, தலையைக் காண்பிக்கும் போது சேர்த்து வைத்த சக்தியையெல்லாம் வெளிப்படுத்தப் போகிறான்; ஏழுமலையான் அபய – வரத ஹஸ்தங்களால் செவிகளை மூடிக் கொள்ள, ஜகத்சம்ரக்ஷணமே ஸ்தம்பிக்கப் போகிறது என்று கொள்ள மாளா பயத்தில் சுசீலா

# நெஞ்சு நெகிழச் செய்யும் தொடர் ஆரம்பம்!

**விவரங்கள் அடுத்த வாரம்**

நடுங்கினாள்.

கோபியோ இந்த அல்ப விசாரங்களைக் கடந்து, வந்தது வரட்டும் என்ற உயர்நிலையைத் தொட்டு விட்டிருந்தான்.

ஆனால், என்ன ஆச்சர்யம்! மொட்டையடித்தபோது ராஜு அழவேயில்லை! 'ஹூம்' என்று கூடச் சொல்லவில்லை. மாறாக, அழுதழுது நிரந்தரமாய் வீங்கிக் கிடந்த மண்டையை இப்படியும் அப்படியுமாகத் திருப்பிக் காட்டி பணியாளருக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்தான். அவர் வேலை முடிந்ததும் 'தேங்க் யூ மாமா!' என்று கன்னத்தில் முத்தமும் கைக்கு இரண்டாகப் புளிப்பு மிட்டாயும் கூடக் கொடுத்தான்!

'செடியாய வல் வினைகள் தீர்க்கும் திருமால்' கண் திறந்து விட்டானே என்று நெக்குருகினாள் சுசீலா. 'குழந்தையின் சிகையோடு அழுகையையும் வாங்கிக் கொண்டு விட்டானே! அவன் கருணையே கருணை!'

கோபி வினயமே உருவாக மாறி, தன் முன்வழுக்கை போக மிச்சமிருந்த முடியைக் காணிக்கையாக்கிவிட்டு ஜரகண்டிக் கிடையே ஜகன்னாதனுக்கு இதயங்கனிந்த நன்றி செலுத்தினான்.

சென்னை திரும்பும் வரை காத்திருக்க முடியாமல் திருப்பதியில் நிகழ்ந்த திருப்பத்தை எஸ்.டி.டி. மூலம் பாட்டி - தாத்தாக்களுக்குத் தெரிவித்து விட்டுப் புறப்பட்ட போது கூட ராஜு அழவில்லை.

"இனிமேல் அழவேமாட்டான் பாருங்கோ..." என்று சுசீலா உணர்ச்சிப் பெருக்கால் அழுதுகொண்டே பஸ் ஏறினாள்.

"கௌரீ கல்யாணம்..." பாட்டி ஆரத்தி எடுத்து, செந்நீரை நெற்றியில் இட்டபோது ராஜு அவள் கையை ஒதுக்கித் தள்ளி கத்தவில்லை.

தாத்தாக்கள் இருவரும் பேரனின் சிர் திருத்தத்தைக் கேக் வெட்டிக் கொண்டாட முடிவு செய்து பேக்கரிக்குப் போய்விட்டார்கள்.

அவசரமாகக் குளித்து, அடுப்பங்கரைக்குள் புகுந்தாள் சுசீலா.

ராஜு மைனஸ் இரட்டைப் பின்னலை தைரியமாய்க் குளிப்பாட்டி, பவுடர் அடித்து, யூனிஃபார்ம் மாட்டி விட்டு விட்டுக் குளிக்கப் போனான் கோபி.

அடுத்த இரண்டாவது நிமிடம் பேட்டை அதிர பழைய அலறல் மங்களகரமாக வீட்டை நிறைத்தது.

சுசீலா ஓடி வந்தாள். கோபி குளியலறைக் கதவை ஒருக்களித்து கழுத்தை நீட்டினான். இரு செவியும் மந்தமான பாட்டி கூட "ஏண்டா கத்தறே?" என்றாள்.

சுவரில் தொங்கிய கண்ணாடி முன், பிரம்பு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு ஏறி நின்ற ராஜு, புதிய வீரியத்துடன் அலறினான்.

"எங்கே என் இரட்டைப் பின்னல்?"

"சாமிக்குக் கொடுத்தாச்சுடா கண்ணு... நீ கூட மாமாவுக்கு தாங்க்யூ சொல்லி முத்தா குடுத்தியே..."

"எனக்குத் திரும்ப வேணும்" மொட்டை மண்டையில் படபடவென்று அடித்துக் கொண்டான்.

"வளர்ந்துடும். சீக்கிரமா வளர்ந்துடும் இதோ பாரு... அம்மா மாதிரி நீளமா..." - தன் எலிவால் கூந்தலைக் காண்பித்தாள். "அழக்கூடாது!..."

"எனக்கு இப்பவே வேணும்... கொண்டு வந்து ஒட்டி வைய்யி..."

அழுகை புதிய உயரங்களைத் தொட, கேக் டப்பாவுடன் உள்ளே நுழைந்த தாத்தாக்கள் ஸ்தம்பித்து நின்றார்கள்.

கோபி பஞ்சு வாங்க வேண்டும் என்று மனத்துள் குறித்துக் கொண்டான்.

"பெருமாளே! என்ன சோதனை!" என்றாள் பாட்டி...

சுசீலா செய்வதறியாது தலையைப் பிய்த்துக் கொண்டாள். ○

# ஆடு போனா ஆபத்தில்லே!

தி.மு.கவே கலைஞரின் குடும்பச் சொத்தாக மாறி வருவதாகவும், அவரது குடும்பச் சச்சரவுகளில் கட்சியினர் பலிகடா ஆக்கப் படுவதாகவும் அதிரடியாகக் குற்றப்பட்டியல் வாசித்து விட்டு, கலைஞருக்கும் கட்சிக்கும் 'டாட்டா' சொல்லி அம்மா கட்சியில் ஐக்கிய மாகியிருக்கிறார் திருமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் முத்துராமலிங்கம். ஒரு வலிமையான ஆளும் கட்சியிலிருந்து, எதிரணிக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினர் தாவியிருப்பது, ஆளும் கட்சி வட்டாரத்தில் அதிர்வு அலைகளை உண்டாக்கியிருக்கிறது. சட்டமன்றத் தேர்தல் வருவதற்கு இன்னமும் சில மாதங்களே இருக்கக்கூடிய நிலையில், 'மேலும் பலர் விலகக் கூடுமோ!' என்ற சந்தேகத்தையும் இது கிளப்பியிருக்கிறது.

திண்டுக்கல் பாராளுமன்றத் தொகுதியை உள்ளடக்கியது திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி. 1996ம் ஆண்டு தேர்தலில் முத்துராமலிங்கத்துக்கு டிக்கெட் கிடைத்ததற்குக் காரணம் அவருக்கு மு.க. அழகிரியுடன் இருந்த நெருக்கம்தான்.

1996ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்பு சேடப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் தளபதிக்கும் அழகிரிக்கும் நெருக்கம் அதிகமானது. முத்துராமலிங்கம் ஓரங்கட்டப்பட்டார். தளபதியின் சகோதரிக்குப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கொடுத்தது, முத்துராமலிங்கத்திற்கு மேலும் எரிச்சலைக் கொடுத்தது. அந்த நேரத்தில் தெற்குப் பகுதியில் ஆதிக்கம் செலுத்துவது தொடர்பாக அழகிரிக்கும் ஸ்டாலினுக்கும் மோதல் இருந்தது. இந்த நிலையில் மதுரைக்கு வந்த ஸ்டாலினை வரவேற்கச் சென்றார் முத்துராமலிங்கம். 'இளைஞர் அணி பொறுப்பிலிருப்பதால் வரவேற்கப் போனேன்' என்று அவர் சொன்னாலும் பின்னர் முற்றிலும் அழகிரியால் புறக்கணிக்கப்பட்டார்.


•முத்துராமலிங்கம்

தொகுதிப் பணிகளுக்கு அரசு அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கவில்லை. கூட்டுறவு வங்கி, பால்வள நிறுவனம் ஆகியவற்றில் பதவியைப் பெற நடந்த முயற்சிகள் தோல்வியுற்ற நிலையில் சென்ற 1999ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் முத்துராமலிங்கம் மிக வெளிப்படையாகவே தி.மு.க.வுக்கு எதிராகச் செயல்படத் துவங்கினார். அவரைப் பற்றி ஏகப்பட்ட புகார்கள் அப்போதே தலைமைக் கழகத்துக்கு வந்தன.

"அவர் ஒரு கறுப்பு ஆடு என்பது நெடுநாளாகவே தெரிந்த விஷயம்தான். கொள்கைப் பிடிப்புள்ளவராக இருந்திருந்தால் எந்த சோதனையையும் தாங்கிக் கொண்டு கழகத்தில் இருந்திருக்க வேண்டும்'' என்கிறார் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரான சுப்புலட்சுமி ஜெகதீசன்.

ஆனால், முத்துராமலிங்கம் தாவியதன் காரணமாக மதுரை வட்டாரத்தில் கழகத்திற்கு ஒரு பாதிப்பும் வராது என்கிறார்கள் கழகப் பிரமுகர்கள். "அவர் நிழல் கூட அவர் பின்னால் போகாது."

முத்துராமலிங்கத்தின் தாவல் ஏற்படுத்தும் அரசியல் தாக்கத்தை விட, ஜாதி ரீதியாக தி.மு.க.வுக்கு எதிரான சக்திகள் திரளுவதுதான் கலக்கமாக இருக்கிறதாம். 'புதிய தமிழகம்' கிருஷ்ணசாமி தி.மு.க.வுடன் நெருங்க, நெருங்க, தென் மாவட்டங்களைச் சேர்ந்த சில தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் விசுவாசம் கேள்விக்குரியதாகி விடும் என்கிறார்கள்.

- தில்லப்பா

தங்கம், வைரம், மாணிக்க மரகத நகைகள் Hyderabad pearls Italian Coral, China Jade, Coral flower sets, Antique finish & Kundan Jewellery, Gold foil beads, Amethyst & garnet, Navaratna Stones, Malas, Lucky Birth stones, imported colour beads

**ASTROLOGER**



**FACE READER**

**10gms Rs.250 to Rs.3500/-**



Each purchase Rs.**1350/-** get one real **Navaratna Stone Set** (AD) **FREE of cost**

## Sri Laxmi Muthu Maligai

Shop No.9, Kasi Arcade, Ground Floor,
116, Thyagaraya Road, T.Nagar, Chennai - 17.
☎ : **8220856**

**DAILY FIRST 50 PURCHASERS GET ONE DHRISTI - RING FREE**

உங்களுது பிறந்த தேதி, நேரம், ஊர் இவற்றை எழுதி அனுப்பினால் இலவசமாக ஜாதகம் பார்த்து அதிர்ஷ்ட கல் போன்ற விவரங்களை தபாலில் அனுப்பப்படும்

## Laxmi Savings Scheme

Pay just Rs.**225/-** per month for 12 months and take home Rs.**3375/-** worth any items in our show room end of 12th month (except Gold) (inclusive of a **Bonus** of Rs.**675/-**)

Each member gets one real Navaratna Stone Set (AD) **FREE of cost** on enrollment.

**VISA, MASTER, AMERICAN EXP CARDS ACCEPTED**

## ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் சீர் பலகாரங்கள்



**அறிமுகம்!**

**ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்**

5, டாக்டர் சிங்காரவேலு வீதி, பாண்டி பஜார்,
சென்னை 17. போன் : 4343805
4, காந்தி நகர், முதல் மெயின் ரோடு, அடையார்
சென்னை 20. போன் : 4413805

எங்களிடம் ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறும் அனைவருக்கும் எங்களது வாழ்த்துக்கள்

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி

# P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES

102, USMAN ROAD, T. NAGAR, CHENNAI - 600 017. PH: 4344442, 4327764

**TUESDAY HOLIDAY** (10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

**P.R.** ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்துபயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-

| நட்சத்திரம் | ராசி | ராசிக்கேற்றகல் | கல்லின் எடை | வெள்ளி மோதிரம் விலை | இன்சூர் தபால் செலவு |
|---|---|---|---|---|---|
| அசுவினி, பரணி, கார்த்திகை முதல் பாதம் முடிய | மேஷம் | பவழம் | 2 CARAT | 400/- | 50/- |
| கார்த்திகை 2-ம் பாதம், ரோகிணி, மிருகசீரிஷம் 2ம் பாதம் முடிய | ரிஷபம் | வைரம் | 5 CENT | 2250/- | 200/- |
| மிருகசீரிசம் 3-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் முடிய | மிதுனம் | மரகதபச்சை | 20 CENT | 400/- | 50/- |
| புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம் முடிய | கடகம் | முத்து | 2 CARAT | 400/- | 50/- |
| மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய | சிம்மம் | மாணிக்கம் | 20 CENT | 400/- | 50/- |
| உத்திரம் 2ம் பாதம் முதல், அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய | கன்னி | மரகத பச்சை | 20 CENT | 400/- | 50/- |
| சித்திரை 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3ம் பாதம் முடிய | துலாம் | வைரம் | 5 CENT | 2250/- | 200/- |
| விசாகம் 4ம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய | விருச்சிகம் | பவழம் | 2 CARAT | 400/- | 50/- |
| மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய | தனுசு | புஷ்பராகம் | 1 CARAT | 400/- | 50/- |
| உத்திராடம் 2ம் பாதம், திருவோணம் அவிட்டம் 2-ம் பாதம் முடிய | மகரம் | நீலம் | 20 CENT | 400/- | 50/- |
| அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3ம் பாதம் முடிய | கும்பம் | நீலம் | 20 CENT | 400/- | 50/- |
| பூரட்டாதி 4ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய | மீனம் | புஷ்பராகம் | 1 CARAT | 400/- | 50/- |
| தனுசு, மீன ராசிக்காரர்கள் கனக புஷ்பராக மோதிரமும் அணியலாம் | | | 25 CENT | 500/- | 60/- |
| ராகு, கோமேதகம் | | | 50 CENT | 400/- | 50/- |
| கேது, வைடூரியம் | | | 20 CENT | 400/- | 50/- |
| அனைவரும் அணியக்கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம் | | | 2 CARAT | 400/- | 50/- |

*** நவரத்தினம் மோதிரம் அணிந்தால் மிகவும் நல்லது. ***

அனைவரும் அணியக்கூடியது கார்னெட் மோதிரம் ரூ. 400/- கார்னெட் மோதிரம் அணிந்தால் செல்வ வளம் பெருகும். வியாபாரம், படிப்பு, ஞாபக சக்தி அதிகரிக்கும்.

குறிப்பு : புஷ்பராகம், வைரம், நவரத்தினம், ஆகிய மோதிரங்கள் வெள்ளியிலும், தங்கத்திலும் அணியலாம்.

மீதி அனைத்து ராசிக்கல் மோதிரங்கள் வெள்ளியில் அணிய வேண்டும். வெள்ளியில் அணிந்தால் பலன் அதிகம். மேற்படி ராசிக்கல் மோதிரம் நம்பிக்கையுடன் அணிந்து முயற்சி செய்தால், கல்வி, தொழில், வேலை வாய்ப்பு, வியாபாரம், அனைத்திலும் 100 சதவீத வெற்றி கிடைக்கும்.

* எங்களிடம் நியூமராலஜி படியும் கல் மோதிரங்கள் கிடைக்கும் * திருக்கணித பஞ்சாங்கப்படி கம்ப்யூட்டர் ஜாதகம் ரூ. 50/-

***குறிப்பு: எங்கு ஜோதிடம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ரூ. 400/-க்கு ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறுங்கள். ஒரிஜினல் கல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.***

பல வாடிக்கையாளர்கள் பணம் அனுப்பிவிட்டு முகவரி எழுதுவது இல்லை. முகவரி இல்லாமல் எங்களால் தொடர்பு கொள்ள முடியாது. முகவரி தெளிவாக எழுதவும்.

ADVT



# கிரிக்கெட் கிரவுண்டில் சிந்தனைச் சிற்பி!

**நா**ற்பதாயிரம் மக்கள் எழுந்து நின்று பாராட்ட, நான் ஒரு பிட்சில் நின்றுகொண்டு பேட்டை உயர்த்திக் காட்ட வேண்டும் என்பது என் மாளாத விருப்பம். அதற்கான முயற்சி சிறு வயதிலேயே துவங்கியது. அந்தக் காலத்தில் கிரிக்கெட் விளையாட்டில் நாட்டம் காட்டவில்லையென்றால் திருவல்லிக்கேணியிலிருந்து நாடு கடத்தி விடுவார்கள். காலில் செருப்பிருக்கிறதோ இல்லையோ கையில் கிளவுசை மாட்டிக்கொண்டு 'பேட்'டை சுற்றிக்கொண்டு தெருவில் பீடு நடை போடுவதில்தான் எத்தனை பெருமை! திருவல்லிக்கேணிக்கும் திருவட்டீஸ்வரன் பேட்டைக்கும் ஐலண்ட் கிரவுண்டில் மோதல்.

தி.பேட்டை வீரன் அடித்த பந்து ஏவுகணை போல் பாய்ந்து வந்து ஷார்ட்- லெக்கில் இருந்த என் கணுக்காலைப் பதம் பார்க்க, 'ரிடை' ஆனேன். அப்போது பட்ட விழுப்புண்ணின் விளைவாக ஓடுவதில் தகறாறு. எனக்காக வாழ்க்கை முழுவதற்குமா பை-ரன்னர் தேட முடியும்?

போதாததற்கு, கிரிக்கெட் கிரவுண்டில் சிந்தனைச் சிற்பி ஆகிவிடுவேன். 'பழ'மான காட்சகளைக் கோட்டை விட்டால் ஸ்டம்பைப் பிடுங்கிக் கொண்டு அடிக்க வர மாட்டார்கள்? அப்புறம் சோடா புட்டிக் கண்ணாடி வேறு. பின்னர்தான் ஞானோதயம் வந்தது. இத்தனை சங்கடங்களை வைத்துக் கொண்டு நாம் கிரிக்கெட்டில் சாதிப்பது மகா கஷ்டம். ஸ்டம்புகளுக்கு தெண்டனிட்டு கிரிக்கெட்டுக்கு 'டாடா' சொல்லி விட்டேன்.

**க**ல்லூரி நாட்களில் நான் படிக்கிறேனோ இல்லையோ, நன்றாக விஸில் அடிப்பேன். இதனால் பஸ் கண்டக்டர்களுக்கும் எனக்கும் பலநாள் தகராறு வரும். கண்ணகி சிலையிலிருந்து 'என்ன மச்சி' என்று நண்பர்கள் குரல் கொடுப்பார்கள். கல்லூரி கலைநிகழ்ச்சிகளின்போது முழுப் பாட்டையே விஸிலில் வெளுத்துக் கட்டுவேன். 'மியூஸிக் பார்ட்டி' வைடா என்று நண்பர்கள் வற்புறுத்தவே, ஆர்வம் உள்ள பலரைச் சேர்த்துக்கொண்டு துவக்கினேன். மந்தைவெளியில் கல்யாண கச்சேரி வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் நிகழ்ச்சி தொடங்கியதும் கல்யாண ஹால் வெறிச் சோடிவிட்டது! ஒரே ஒருவர் மட்டும் கண்களை மூடி ரசித்துக் கொண்டிருந்தார். மனம் பூரித்துப் போனது. கச்சேரி முடிந்தும் சீட்டிலிருந்து அவர் எழுந்திருககவில்லை. பின்னர் தான் அவர் தூங்குகிறார் என்று தெரிந்தது. உடனே இசைக்கும் 'குட்பை' சொல்லி விட்டேன்.

இதெல்லாம் விடுங்கள். எனக்கு யோகாசனம் எல்லாம் தெரியும். காலை ஐந்து மணிக்கு எழுந்து வாக்கிங், யோகாசனம் செய்ய வேண்டும் என்று தினசரி முயற்சி செய்கிறேன். இரவு இரண்டரை வரை படித்து விட்டுப் படுத்தால் எழுந்திருக்கும்போதே எட்டரை மணி ஆகிவிடுகிறது. அதற்குப் பின் மெரினாவில் நடக்கத் துவங்கினால் ஆபீஸ் செல்பவர்களுக்கு நான் கார்ட்டூன் ஆகி விட மாட்டேனா? இந்த ஒரு சின்ன ஆசைகூட எனக்கு இன்னும் கண்ணாமூச்சி காட்டுகிறது.

— ரமா

**வி.ஐ.பி விருப்பம்** | **மதன்**



# அப்பு

எக்கச்சக்கமாக வளைந்து நெளிந்து நீட்டி முழக்கி கொஞ்சிக் குலாவி ஓவர்-ஆக்டிங் செய்யத் தூண்டிவிடும் ஒரு காரெக்டர் இந்த கூத்தாண்டவர் சமாசார காரெக்டர். அதை இத்தனை அளவோடு மிடுக்காகக் கண்ணியத்தோடு செய்ய நிச்சயம் பிரகாஷ்ராஜால் மட்டும்தான் முடியும். மகாராணிக்கு ஜே!

மாடல்கள் தோற்கும் அளவிற்கு டிரஸ் பண்ணும் பிரசாந்திற்கு ஷேவ் பண்ணாத முகமும், கலைந்த தலையும் இன் பண்ணாத 'ஷர்ட்'டும் பகுத் அச்சா ஹை! நடிப்பிற்குக் கண்களை எக்ஸ்பிளாயிட் பண்ணும் 'நேக்'ஐப் புரிந்து கொண்டிருக்கும் ஒருசில நடிகர்களில் 'அப்பு' ஏக் ஆத்மி ஹை!

“காலையிலிருந்து சாயந்திரம் வரை சும்மா இருக்கணும்— சாப்பாடு போட்டு 300 ரூபாய் தருவார்கள்” என்ற ரமேஷ்கண்ணாவின் 'பீலா ஆஃபர்'ஐ நம்பி ஆசாமிகள் நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு சுற்றம் சூழலோடு கிளம்ப, ர.க. கோஷ்டி சகிதமாக நண்பனிடம் போய், “சும்மா இருக்கிற வேலைக்குக் கிளம்பியிருக்கிற இவங்களை விட நான் எவ்வளவோ மேல் இல்லை!” என்று லாஜிக் பேசுவது ப்ரில்லியண்ட்.

அக்காவின் வாழ்க்கை + காதலி தேவயானியின் எதிர்காலம் இரண்டையும் பாழ் பண்ணிய/பண்ணுகிற பிரகாஷ்ராஜைப் பழிதீர்க்கிறார் பிரசாந்த். இரண்டிற்கும் ஒரே ஆள் தான் பொறுப்பு என்பதைக் கதையின் முற்பகுதியில் பிரசாந்த் புரிந்து கொள்வதாக அமைத்திருந்தால் பழிதீர்க்கும் படலம் இன்னும் 'ஃபோர்ஸ்ஃபுல்' ஆக இருந்திருக்குமோ?

அந்த இன்ஸ்பெக்டர் ஸேம் ஸைடு கோல் போட்டவுடன் தியேட்டரே ஸ்டன் ஆகி விட்டது. கொஞ்சம் கூட எதிர்பார்க்காத திருப்பம். ஆமாம், அவர் ஏன் எப்போதும் கான்ஸ்டபிள்களோடு சுற்றாமல் அடியாள் சகிதமாகவே சுற்றுகிறார்?

மரண அடி வாங்கும் ஹீரோ சொர்க்க வாசலைத் தொட்டு விட்டு மீண்டும் சிலிர்த்துக் கொண்டு எழுந்து வருவதை மாற்றவே முடியாதா?

— கிருஷ்ணா சிதம்பரம்




# ~~பாண்டி~~ தாண்டி பஜார்!

**எ**ந்தெந்த சாலைக்கோ பெயர் மாற்றம் செய்கிற சென்னை மாநகராட்சி, தி.நகர் பாண்டி பஜாரின் பெயரை 'தாண்டி பஜார்' என்று மாற்றி விடலாம். அதன் இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடிவரை, மாநகராட்சி கவுன்சிலர்கள் பிளாட்பாரத்திலேயே ஒரு நடை போய் வந்தால், பெயர் மாற்றத் தீர்மானத்தை ஏக மனதாக நிறைவேற்றி விடுவார்கள் என்று துண்டு போட்டுத் தாண்டலாம்.

பிளாட்பாரத்தின் ஒரு பாதியை கடைக்காரர்கள், தங்கள் கடையின் இலவச இணைப்பாக நினைத்து, கடைச் சாமான்களைப் பரப்பி, ஆக்கிரமித்துக் கொண்டு விடுகிறார்கள். மறு பாதியை பிளாட்பாரத்துக் கடைகள் ஆக்ரமித்துக் கொண்டுவிடுகின்றன. இடையில், பாதசாரிகள் எப்படி நடந்துபோவது? தாண்டித்தானே போக வேண்டும்? பெயர் மாற்றம் நியாயம்தானே!

ஆனாலும் மாநகராட்சிக்கு ரொம்பத்தான் நக்கல். பிளாட்பாரத்தில் ஒரு இடத்தில் 'நடைபாதை நடப்பதற்கே' என்று போர்டு எழுதி இண்டலடித்திருக்கிறார்கள்.

இந்த நடைபாதைக் கடைக்காரர்களை அப்புறப்படுத்துவது என்ற நாடகம், எஸ்.வி.சேகர், கிரேசி மோகன் நாடகம் போல, பாண்டி பஜாரில் அடிக்கடி நடக்கும். போலீஸ்காரர்கள் வருவார்கள். மிரட்டி






விட்டுப் போவார்கள், போகிற போது கையில் அகப்பட்ட ஐட்டங்களை எடுத்துக் கொண்டு போய்ச் சேகரிப்பது என்பது போலீசுக்கு விருப்பமான ஹாபி. அடுத்து மாநகராட்சிக்காரர்கள், நடைபாதை ஆக்ரமிப்புகளை அகற்று கிறோம் பேர்வழி என்று ஒரு கார்ப்பரேஷன் குப்பை லாரி சகிதம் வந்து உதார் விடுவார் கள். ஏமாந்த கடைக்காரர்களின் சரக்கு களை அள்ளிப் போட்டுக் கொண்டு போவார்கள். கவனிக்க வேண்டியவர்களை கவனித்து, சரக்குகளைத் திரும்பப் பெறுவது இந்தக் கடைக்காரர்களுக் குப் புதுசில்லை. மாமூல்தான்.

கடைக்காரர்களும் பிளாட்பாரக் கடைக்காரர்களும் நேரே பார்த்துச் சிரித்துக் கொண்டாலும், வக்கீல் வைத்து கோர்ட்டில் மோதிக் கொள்ளுவார்கள். இவர் கள் பிரச்னை, கீழ் கோர்ட், மேல் கோர்ட், சுப்ரீம் கோர்ட்வரை போகும். (நல்ல காலம் டென்னிஸ் கோர்ட்டில் வழக்குபோட சட்டமில்லை) ஒருவர் வழக்கு போட் டால், அடுத்தவர் அதற்கு 'ஸ்டே' வாங்கி வந்து விடுவார்கள்.

இதற்கிடையில், சமீபத்தில் கோர்ட் உத்தரவு ஒன்று வந்திருக்கிறது. பிளாட் பாரக் கடைக்காரர்களுக்கு, மாற்று இடம் கொடுத்துவிட்டு, இங்கிருந்து அவர்களை அப்புறப்படுத்தலாம் என்கிறது அது!

"மாற்று இடம் எங்கே கொடுப்பார் கள்?" என்று கேட்டபோது ஒரு பிளாட் பாரக் கடைக்காரர் சொன்னார், "பனகல் பார்க் ஏரியாவுல குடுத்தா நல்லா இருக்கும்"

"குடுப்பாங்களா?"

"ஊகூம். அங்கே பிளாட்பார கடைகள் போட அனுமதிக்கக் கூடாதுன்னு ஏற்





கனவே ஒருத்தர் ஸ்டே வாங்கி வெச்சிருக காராம்."

"அப்புறம்?"

"கொஞ்சநாள் கழிச்சு மறுபடி அப் புறப்படுத்த வருவாங்க! மாற்று ஏற்பாடு செய்யாம, எங்களை காலி பண்ணச் சொல்லக் கூடாதுன்னு நாங்க ஒரு ஸ்டே வாங்கிடுவோம்"

அப்படிப்போடு அரு வாளை!

— கௌதம்



## மாப்ளே!

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் 'மாமனார்' என்.டி.ஆர். இப்போது உயிருடன் இல்லை என்றாலும், இரண்டு பிரபலங்கள், நாயுடுவைத் தங்கள் "அன்புக் குரிய மாப்பிள்ளை" என்று ஹைதராபாதில் நடந்த விழா ஒன்றில் பெருமையாய்க் குறிப்பிட்டார்கள். அந்த இரு மாமனார் கள் யார் தெரியுமா? நாகேஸ்வரராவும், சிவாஜியும்தான்!

- எம்.



# ‘நிவர்த்தி’ நவரத்தின திலகம்

## டாக்டர் மஹாதன் ஷேகர்ராஜா Ph.D.,

நியூமராலஜிஸ்ட்–நேம்மாலஜிஸ்ட்–ப்ரோனாலஜிஸ்ட்–ஜெம்மாலஜிஸ்ட்

“வாழ்க்கையில் வெற்றி பெற உங்கள் வாழ்க்கை உங்கள் கையில்”

| | |
|---|---|
| • நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்றால், உங்கள் பெயர் அவசியம் நியூமராலஜிபடி இருக்க வேண்டும். | • உங்களிடம் திறமை இருந்தும் உங்களது திறமை, உங்களால் வெளி கொணர முடியாமல் இருப்பதற்கு, உங்களது பெயர் நியூமராலஜிபடி இல்லை என்றுதான் நீங்கள் உணர வேண்டும். |
| • ஒவ்வொரு வீட்டிலும் கணவன் பெயர் மட்டும் நியூமராலஜிபடி இருத்தல் கூடாது. மனைவியின் பெயரும் நியூமராலஜிபடி இருந்தால்தான், வீட்டில் கணவர் மனைவி இருவரும் ஒற்றுமை உணர்வுடன் குடும்பம் அமையும். | • தொழிலில் இருப்பவர்கள் அவர்களின் பெயரை மட்டும் நியூமராலஜிபடி அமைத்துக் கொண்டால் போதுமானதல்ல, அவர்கள் செய்யும் தொழிலின் பெயரையும் அவர்களின் D.O.B.க்கு ஏற்றவாறு நியூமராலஜிபடி அமைத்துக் கொண்டால்தான் இலாபகரமான தொழிலாக இருக்கும் இல்லையேல் தொழிலில் No Loss No gain என்ற ரீதியில்தான் இருக்கும். |
| • உலகில் 15% மக்கள் தான் தன்னிறைவு பெற்று சுகமான வாழ்க்கை வாழ்கிறார்கள். மீதம் உள்ள மக்கள் போராட்ட வாழ்க்கைதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் தங்களின் பெயரை NUMEROLOGY, NAMEMOLOGY, PRONOLOGY இம்மூன்று ASPECTS ல் அமைத்துக் கொண்டால் நீங்களும் 15% மக்களுடன் இணைய வாய்ப்புண்டு. | |

*ஒருவருடைய பெயரை நியூமராலஜி ப்ரோனாலஜி - நேம்மாலஜி இம்மூன்று* **Aspects**-*ல் அமைக்கக் கட்டணம் ரூ.* **500/-**. *ஆனால் நியூமராலஜி - ப்ரோனாலஜி - நேம்மாலஜி இம்மூன்று* **Aspects**-*ல் பெயரையே மாற்ற வேண்டும் என்றால் கட்டணம் ரூ.2,500/- விருப்பம் உள்ளவர்கள்* **Dr. MAHHADAN SHEKER RAAJHA** *என்கிற பெயரில்* **"Demand Draft" (or) M.O.** *அனுப்பி வைத்தால் உங்களது வாழ்க்கையை வெற்றி வாழ்க்கையாக மாற்றி அமைத்து கொடுக்கப்படும்.*

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

## Dr. MAHHADAN SHEKER RAAJHA Ph.D.

**NUMEROLOGIST - NAMEMOLOGIST - GEMMOLOGIST - PRONOLOGIST**


(H.O.) 57/1, Hunters Road, Vepery, (Near Doveton), Chennai - 112.
Tamilnadu, India. ✆ 6400260, 6415235, Telefax : 044-091-6425967
B.O. Plot No. 612, D.No.10, 51st Street, 9th Sector, K.K. Nagar, Chennai - 78.
Tamilnadu. India. ✆ 4804988, 4812397.

**Consulting Time : 10.00 a.m. to 9.30 p.m.**

- இன்றே வாங்கி படியுங்கள் விநோதமான நியூமராலஜி - புத்தகம்
- ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய டிக்ஷரி "விநோதமான நியூமராலஜி" புத்தகம்
- கணவன் மனைவி இணக்கத்திற்கு நியூமராலஜி-யை எப்படி பயன்படுத்தவேண்டும் என்கிற விளக்கங்கள்.
- தங்கள் பிள்ளைகள் காதல் வலையில் சிக்காமல் இருக்க பெற்றோர்கள் நியூமராஜியை எப்படி பயன்படுத்த வேண்டும் என்கிற வித்தைகள்.
- எந்த மாதத்தில் குழந்தை பிறந்தால் குடும்பத்திற்கு நல்லது
- பிரிந்த கணவன் மனைவி இணைவதற்கு நியூமராலஜி-யினை எப்படி பயன்படுத்த வேண்டும் என்கிற வழிமுறைகள்
- திருமணம் செய்து கொள்ள வேண்டிய தேதிகள்
- திருமணம் செய்ய தவிக்க வேண்டிய தேதிகள்
- எந்த மாதத்தில் குழந்தை பிறப்பை தவிக்க வேண்டும் என்றும்

விநோதமான நியூமராஜி புத்தகத்தில் 57 தலைப்புகளில் 190 பக்கங்களுடன் உள்ளது இப்புத்தகத்தில் உலகிலேயே முதன் முறையாக கடந்த பல வருடங்கள் ஆராய்ச்சிக்குப்பின் பிறப்பு எண் - வளர்ப்பு எண் - பொறுப்பு எண் - விதி எண் என்கிற நான்கு நிலைகளிலும் மனிதனின் அங்கம் உள்ளன என்பதை கண்டுபிடித்து விநோதமான Concept சொல்லப்பட்டுள்ளன. விநோதமான நியூமராலஜி புத்தகம் விலை ரூ.250 - வெளிநாடு விலை ரூ.500 - தபால் செலவு இலவசம் புத்தகம் தேவைப்படுபவர்கள் ரூ.250 - எனது பெயரில் D.D./M.O. எனது விலாசத்திற்கு அனுப்பி வைத்தால் புத்தகம் தங்களது வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.

"உங்களது வெற்றி எனது வெற்றி போன்றது"



▲ டிட்டிஸை ஏரி



# இங்கும் ஜெர்மனி! அங்கும் ஸ்விட்சர்லாந்து!

## 4

ஆடியில காத்தடிச்சா ஐப்பசியில் மழை பெய்யும். டுசல்டார்ஃப் நகரத்தில் த்ருபாவா... ஹைடல்பர்க் நகரிலுள்ள அச்சு இயந்திரத் தொழிற் சாலையில் விருந்தினர் கூட்டம் பெருகும்!

மிக ஏற்பாடாக 'த்ருபா விசிடர்ஸ் ரூட்' என ஒன்றை வகுத்து அங்கங்கே பாயின்ட் ஒன், டூ என்று அறிவிப்புப் பலகை பொருத்தி, ஒவ்வொரு குழுவையும் சுற்றிக் காட்ட ஓரிரு பி.ஆர்.ஓக்களை அமர்த்தி விடுகிறார்கள். வரவேற்கக் காத்திருக்கும் இக்குழுவைப் பின்தொடர்ந்து அவர்கள் வேகத்துக்கு ஈடுகொடுத்து ஓட வேண்டியதுதான் நம் வேலை. சிமெண்டு – ஜல்லி கலவையைக் கைக்கு கை மாற்றி கட்டடத்துக்கு கான்க்ரீட் போடும் வேலையாட்கள் அதை இறுதியாக தளத்தில் கொட்டி நிரவுவார்களே... அதுபோல ஒவ்வொரு பாயின்டிலும் விளக்கம் அளித்துவிட்டு நம்மை அடுத்த பாயின்டுக்குத் திசை திருப்பி விடுகிறார்கள்.

தொழில்நுட்பம், வேகம், கச்சிதம், தரக்கட்டுப்பாடு, தானியங்கி அற்புதங்கள் என்று இரண்டு மணி நேரத்தில் பல விஷயங்களைக் காதுக்குள்ளும் கண்ணுக்குள்ளும் திணித்துக் கொண்டு பிரமித்து, களைத்து, பசித்துப் போயிருக்க, உணவகத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறார்கள்.

அங்கே, வழக்கமான ஹைடல்பர்க் உணவு தவிர அயல்நாட்டவர் வருகை கருதி தனியே தயாரித்த சைவ உணவு – பக்குவமாய் வேகவைத்த காய்கறிகள்; புதிதாய் நறுக்கிய பழங்கள் – பர்ண சாலையா, ப்ரிண்டிங் ப்ரெஸ் ஃபாக்டரியா என்று சந்தேகம் வரும் அளவுக்குச் சுவையில் மூழ்கடிக்கிறார்கள்.

வாசல் வரை வந்து வழியனுப்புவோருக்கு நன்றி சொல்லிவிட்டு பஸ்ஸில் ஏறுகிற கணத்தில், காலடியில் ஒரு சின்னஞ்சிறு வெள்ளைப் பூ. புல் பூண்டுகளுக்கிடையே புன்னகை செய்கிறது. சுண்டு விரல் அளவுதான் – வட்ட வடிவ மலர் – அச்சு இயந்திரங்களின் அதி முக்கியமான பாகமான கியர் பற்களைப் போல்தான் அதன்

இதழ்களும் சமச்சீரான இடைவெளியில் எடுக்கப்பட்டுள்ளன. நூலிழை கனமேயான ஒவ்வொரு இதழும் மையத்தில் உள்ள மெத்தென்ற மஞ்சள் மகரந்தப் பெட்டியில் பொருந்தியிருக்கிறது. மத்தியான வெயிலிலும் வாட்டமுறாமல் தலைநிமிர்ந்திருக்கிறது – 'எத்தனை கியர்களை வேண்டுமானாலும் உற்பத்தி செய்யுங்கள்... ஆனால் என்னைப் போல் ஒரு மலரை உங்களால் சமைக்க முடியுமா...?' என்ற தோரணையில்!

**ஹை**டல்பர்கிலிருந்து ஜெர்மனியின் கருங்காடு (பிளாக் ஃபாரஸ்ட்) பகுதிக்குச் செல்லும் வழிநெடுக இந்த வெள்ளை மலர்கள் வெகுளிப் புன்னகை செய்தன; மஞ்சள் பூக்கள் கலகலப்பாய்ச் சிரித்தன, பகட்டான பிங்க் நிறத்துப் பூக்கள் ஆரவாரமாக எக்காளமிட்டன!

சாலையில் இருபுறமும் நீலத் தொடுவானம் வரை விரிந்த பச்சை புல்தரை. தரை மட்டத்தில் நின்று விடாமல் நெடுநெடுவென்று கன்னிப் பெண் போல் உயர்ந்து நிற்கும் புல்லின் நுனி மட்டும் நாணச் சிவப்பில் அலைபாய்கிறது.



▶ மேரி அன்டோய்னட் இங்கு வந்தார்



▲ டான்ஸ்! டான்ஸ்

எந்த அறிவிப்புமின்றி வனப்பகுதி ஆரம்பமாகிறது. இருபுறமும் அடர்ந்த பைன் மரங்கள். சாலையும் பேருந்தும் ஒன்றுக்கொன்று சளைத்தவையல்ல என்பதால் மலைச் சரிவில் ஏறும் சிரமம் தெரியவில்லை. சிள் வண்டுகளின் ரீங்காரமோ காட்டுப் பகுதியின் மணமோ அனுபவிக்க அனுமதியாத ஏ.ஸி. பஸ்!

'கொஞ்சம் நிறுத்தச் செய்து, இறங்கி காலாற நடந்தால் என்ன...?' யோசிப்பதற்குள் ஹஃப்கார்ட் ஸ்டெர்னன் வந்து விட்டது! புராதன வனப்பகுதி வீடு ஹஃகார்ட் ஸ்டெர்னன். இப்படிப்பட்ட பல பிரும்மாண்டமான பண்ணை வீடுகளை அதிநவீன வசதிகளடங்கிய தங்கும் விடுதிகளாக மாற்றி அமைத்துள்ளார்கள்.

**சீதா ரவி**



◀ கிராமிய நடனம்

மனம் போன போக்கில் முளைத்திருக்கும் மலர்த் திட்டுக்களும் சலசலவென்று சிற்றோடையும் மோனத்தில் மேய்கிற மாடுகளும் அன்பைத் தேக்கிய அவற்றின் கருவிழிகளும் காட்டு மரங்களிடையே 'வா வா' என்று வசியம் செய்யும் ஒற்றையடிப் பாதையுமாக ஒரு ஸ்வப்பன லோகம் ஹஸ்ப்கார்ட் ஸ்டெர்னென்.

"அதனால்தான் தமது பர்ணசாலையாக இவ்விடத்தைக் கொண்டு தங்கினார் கெதே."

– இந்தப் பெருமையைப் பறைசாற்றும் ஒரு நினைவுக்கல் பதிக்கப்பெற்ற கட்டடத்தில் எங்களுக்குத் தங்குவதற்கு அறை ஒதுக்கித் தந்த போது உச்சி குளிர்ந்து போய் விட்டது.

"அதோ பாருங்கள் எதிர்ப்பக்க கட்டடத்தில் சுவர் ஓவியம் தெரிகிறதா...?"

தெரிந்தது – இளவரசி ஒருத்தி பரிவாரங்கள் சூழ குதிரை மீது வந்திறங்கும் காட்சி.

"மேரி அன்டாய்னட் தெரியுமா...? பிரெஞ்சு மன்னன் பதினாறாம் லூயியின் பட்டத்தரசி..."

"ஆமாம் – 'பிரெட் கிடைக்காவிட்டால் மக்கள் கேக் சாப்பிடட்டும்' என்று அமர வசனம் பேசி பிரெஞ்சு புரட்சியின் போது மக்களால் குறுக்கு வழியில் அமர உலகம் அனுப்பப்பட்டவர்தானே?"

"ஆம்! அவளேதான். அந்த பயங்கரமெல்லாம் நடக்கப் போகிறது என்று கிஞ்சித்தும் தெரியாமல் கல்யாணக் கனவுகளோடு அவள் ஆஸ்த்திரியாவிலிருந்து பிரான்ஸ் நோக்கிப் போன போது இங்குதான் பரிவாரங்களுடன் தங்கினாள். அதன் அடையாளமாகத்தான் இந்த ஓவியம்..."

ஐரோப்பிய வரலாறின் இரு முக்கியமான நிகழ்வுகளுக்குக் காரணமானவர்கள், அவற்றில் நேரடியாகப் பங்கேற்றவர்கள் (கலை மறுமலர்ச்சி காலத்துச் சிந்தனையாளர் கெதே – ஃப்ரெஞ்சு புரட்சியின் 'கிரியா ஊக்கி' மாரி அன்டாய்னட்) தங்கிச் சென்ற இடம். இன்னும் கொஞ்சம் ஆராயப் புகுந்தால் மேலும் பல வரலாற்றுப் பதிவுகள் கிடைக்கக்கூடும்...

கடல் மல்லையில் 'கல்கி'க்கு உளிச் சத்தம் மனச் செவியில் ஒலித்தது போல்... ஹா! இதோ குதிரைக் குளம்படி கேட்கிறது...

**"ரெ**ஸ்டாரன்டுக்கு வாங்க...?"

"குதிரை அங்கே இருக்கிறதா...?"

"ம்ம்ஹூம்... இந்தப் பகுதியின் கிராமிய நடன நிகழ்ச்சி நடக்கிறது..."

கனமான ஷூக்களுடன் ஆடிக் கொண்டிருப்பவர்கள் அனைவருமே யௌவன பருவத்தினர் அல்லர். இருபது முதல் அறுபது வயது வரையிலான பெண்களும் ஆண்களுமாக நான்கு ஜோடிகள் – ஒரு சிறு அரங்கில் இடுக்கிக் கொண்டு ஆடிப் பாடி சுழன்று வந்தார்கள்.

கும்மி கோலாட்டத்தின் மேற்கத்திய வடிவம். தாள வாத்தியம் எதுவும் கிடையாது. ஒரே ஒரு ஆர்கன் (கழுத்தில் தொங்க விட்டுக் கொள்ளும் ஹார்மோனியம்) மட்டும்தான். அதன் இசைக்குள் லயத்தைப் பின்னுவது நடன மாடுவோரின் பாதங்கள்தான்.




▶ 17ம் நூற்றாண்டு கடிகாரங்கள்

பிரமாதமான பாத வேலைகள் எதுவுமின்றி சீரான 'ஒன் டூ த்ரீ ஃபோர்' – 'அப் டூ த்ரீ ஃபோர்' கணக்குகள் பல்வேறு அமைப்புகளாக மாறி மாறி குதிபோட, இடையிடையே கைதட்டுவதும் கை கோத்துக் கொள்வதும் திடீரென்று நான்கு ஆண்களும் நான்கு பெண்களை இடுப்புயரத்துக்குத் தூக்கி ஒரு சுழற்று சுழற்றி இறக்க... அவர்கள் குதூகலத்தில் முகம் சிவந்து சிரிப்பதும்....

அந்த எளிய உல்லாசத்தில் நம்மை வெகு சுலபமாகப் பிணைத்து, நின்ற இடத்திலேயே நம்மையும் ஆட வைக்கிறார்கள்.

"இப்போது பாரம்பர்ய உணவை ருசியுங்கள்" – பிரியமான அறிவிப்புடன் விநியோக

மானது பிளாக் ஃபாரஸ்ட் கேக்.

சென்னை பேக்கரியைக் கூட எட்டி விட்ட 'பிளாக் ஃபாரஸ்ட்'டின் பெயர்க் காரணம் என்ன...? என்று கேட்டால் பதில் பின்வருமாறு :

ஜெர்மனியின் பிளாக் ஃபாரஸ்ட் வனப்பகுதியானது சூரிய ஒளி புகாத மரமடர்ந்த பகுதியாகும். பிளாக் ஃபாரஸ்ட் என்ற பெயரே இதனால் ஏற்பட்டதுதான். கடுங்குளிர் காலத்தில் இந்தக் கருங்காடுகளின் பைன் மரங்கள் மீது வெண்பனி மூடிக் கொள்ளும்.

அடர்ந்த சாக்லேட் அடங்கிய பிளாக் ஃபாரஸ்ட் கேக்கின் அடிப்பகுதி கருநிறத்தில் இருக்கிறது. அதன் மேல் வஞ்சனையின்றிப் பொழியப்படும் புத்தம் புது வெண்ணெய் - க்ரீம் கலவை, கருங்காட்டின் மீது பொழியும் வெண்பனியையொத்திருக்கிறது. எனவேதான் அதற்கு பிளாக் ஃபாரஸ்ட் என்று பெயர்.

பொழிப்புரை : அளவான இனிப்பும் அளக்காமல் கொழுப்பும் பொழியப்படும் இந்தப் பலகாரத்தை, உடல் எடை பற்றிய விசாரமின்றிச் சாப்பிடுவோர் சொர்க்கத்தின் பாதி வழி வரை போய்வரலாம்.



▲ கடிகார பாக்டரி

சொர்க்கத்தோடு போட்டி போடுவதாக ஐரோப்பியர்கள் பெருமையடித்துக் கொள்கிறார்களே.... அந்த ஸ்விட்சர்லாந்த் நாட்டுக்குப் புறப்படுகிறோம்.

ஜெர்மனி - ஸ்விட்ஸர்லாந்த் எல்லைப் பகுதியில் மலைகளின் மடியில் சொகுசாகப் படுத்துக் கிடக்கும் டிட்டீஸி ஏரி... படகு பயணத்தினிடையே மிக தூரத்து மலைச் சிகரத்தில் ஒட்டிக் கொண்டு அரை ஸ்பூன் வெண்பனி தெரிகிறது....

"இஸ் தட் ஸ்நோ...?"

ஆமாம் என்கிறார் படகோட்டி. "குளிர் காலத்தில் இங்கேயுள்ள அத்தனை சிகரங்களும் பனி மூடியிருக்கும். அதோ ஹோட்டல் தெரிகிறதா...? அதில் அறை வேண்டுமானால் இரண்டு வருஷம் முன்னதாகவே 'புக்' பண்ண வேண்டும்..."

"திடீரென்று கல்யாணம் பண்ணிக் கொண்டு ஹனிமூனுக்கெல்லாம் வரமுடியாது..."

"மெள்ள குழந்தை குட்டியோடு வந்தா போச்சு...!"

குக்கூ கிளாக் தொழிற்சாலை நோக்கி நடக்கையில் அர்த்தமற்ற உரையாடல் கிளைத்துக் கொண்டே போகிறது.

"இங்கே ஏது குக்கூ கிளாக்? அது ஸ்விட்சர்லாந்தில் அல்லவா...?"

"இல்லே... இங்கேயிருந்துதான் அங்கே போகுது..."

"உலகின் முதல் சுவர்க் கடிகாரமே இங்குதான் செய்தார்களய்யா!..." - பாக்டரிக்குள் நமக்கு விளக்குகிறார்கள். பெண்டுலம் எல்லாம் அப்போது கிடையாது. அதற்குப் பதிலாக கயிற்று முனையில் ஒரு கல். தினமும் பலமுறை சாவி கொடுக்கணும்... இப்போதைய கடிகாரங்கள் அப்படியில்லை. வாரத்துக்கொரு முறை சாவி கொடுக்கும் மாடல் கூட வந்து விட்டது... சுற்று வட்டாரக் காடுகளில் வசிப்போர் பனிக்காலத்தில் வீட்டுக்குள் இருந்தபடி மரச் சட்டங்களும் வேலைப்பாடுகளும் செய்கிறார்கள். இதர பாகங்கள் இங்கே..."

இப்படிக் கதை பேசி இங்கே குக்கூ கிளாக் வாங்காமல் ஊர் திரும்புபவன் மனிதனே இல்லை என்ற தொனியில் முடிக்கிறபோது கூட்டம் பயங்கர கிரக்கத்தில் இருக்கிறது.

விலை கட்டுப்படியாவதாக நினைத்துக் கொண்டிருப்பவர்கள் நிஜ கடிகாரமும், பிறர் கடிகார பொம்மைகளும் வாங்கிக் கொண்டார்கள்!

(தொடரும்)

சிறுகதை எழுத்தாளர் பொன்னாயிரம் கதை எழுத உட்கார்ந்தார்.

கையில் காப்பி தம்ளருடன் வந்த அவர் மனைவி, "என்னங்க எழுதப்போறீங்க?" என்று கேட்டாள்.

"சிறுகதைதான்."

"பின்னே சலவைக் கணக்கா எழுதப் போறீங்க? என்ன கதைன்னா?"

"உடனே லவ்வுக்கு வந்திடுவீங்களே?"

"ஒரு ஹீரோ... ஹீரோயின்னா கிளுகிளுப்பு இருக்கும்.. அதான் காலேஜ் பையன்... எப்படி?"

"சரி.. க்யூவிலேதானே நிக்கறான்... நின்னுட்டுப்போகட்டும்."

"அன்னைக்குச் சர்க்கரையும் போடறாங் கன்னு தெரியுது. இவ கிட்டே பணம் பத்தலே."

# ரேஷனில் போட்ட லவ்வு



"அதான் யோசிக்கிறேன். எதாவது கனமான சப்ஜெக்ட்-பெண்களோட பிரச்னை, வரதட்சணை, பெண் பார்க்கிறது இப்படி..."

"அதான் நிறைய எழுதிட்டாங்களே.. நீங்க ஒரு புதுக் கோணத்திலே எழுதுங்க."

"ஆங்.. புதுசாங்கறே பார். அங்கதான் உதைக்குது. என்ன புதுசா எழுதறது. திரும்பத் திரும்ப அதேதான்."

"தீர்வு ஏற்படறவரை பிரச்னைங்கறது புதுசுதானேங்க?"

"அப்படிங்கறே.. சபாஷ்.. அப்ப நீயே ஒரு பிரச்னையைச் சொல்லேன்."

"ரேஷன்ல ஒழுங்கா பாமாயில் போடறாங்களா? சர்க்கரை தர்றாங்களா? கெரசின் கிடைக்குதா? எத்தனை மணிநேரம் கால் கடுக்க நிக்கவேண்டியிருக்கு?"

"நீ சொல்றது பிரச்னைதான். இருந்தாலும் கதைக்கு ஒரு இது இருக்க வேணாமா?"

"எது?"

"ஒரு கிளுகிளுப்பு, ஒரு நாட்... ஒரு கிளைமாக்ஸ்."

"இதிலேயே எல்லாத்தையும் கொண்டு வாங்க."

"ஒரு பொண்ணு ரேஷனுக்குப் போறா..."

"பாமாயிலுக்கா?"

"அட... எதுக்கோ போய் க்யூவிலே நிக்கறா."

"இரு...இரு... கல்யாணம் ஆனவளா?... கன்னிப்பொண்ணா?... கன்னியா இருந்தா கொஞ்சம் நல்லாயிருக்கும்."

"சரி... வச்சுக்கிடுங்க."

"ம்... பக்கத்திலே ஆம்பிளை வரிசையிலே ஒரு காலேஜ் பையன் நிக்கறான். சரியா?"

"கொஞ்சம் இரு.. கதை வந்திட்டுது.. இந்தப் பையன்.. அதான் ஹீரோ.. அவன் வாங்க வந்த பொருளை வாங்காம தியாகம் பண்ணறான். அவளுக்குப் பணம் கொடுத்து ஹெல்ப் பண்ணறான். அவ மனசில இடம் பிடிக்கறான்."

"நாசமாப்போச்சு.. நான் சொல்ல வந்ததைச்

**புதுவை சந்திரஹரி**

சொல்ல விடமாட்டேங்கனே!"

"என்ன நீ பெரிசா சொல்லிடப்போறே. நான் சொல்லறேன். அப்புறம் அவங்க அடிக்கடி ரேஷன் க்யூவிலே சந்திக்கறாங்க. ஒரு நாள் அந்தப் பொண்ணு ஒன்னு அழுறா. இவன் துடிச்சுப்போய் என்னன்னு விசாரிக்கிறான். இந்த ரேஷன் கடை நடத்தறவன் நேத்து என்னைப் பொண்ணு பார்க்க வந்தான்... நல்ல இடம்... நமக்கு வசதியாப் போச்சு... கட்டிக் கோன்னு அப்பா வற்புறுத்தறார்... எனக்குப் பிடிக்கலேங்கறா."

"ம்..' உடனே அவ கண்ணைத் துடைக்க விட்டு அவன் டூயட் பாடறானா?"

"இல்லே... ரேஷன் கடையிலே உண்டான காதலுக்கு ரேஷன் கடையே வில்லனா போயிடுச்சேன்னு துடிக்கறான். எங்க அப்பா சிவில் சப்ளைஸ்லே இன்ஸ்பெக்டர். அவரை வச்சு இந்த ரேஷன் கடை பயல ஃபால்ஸ் வெயிட்ஸ் யூஸ் பண்ணறான்னுட்டு சஸ்பெண்ட் பண்ணிடச் செய்யறேன். உன்னை நானே கட்டிக்கறேங்கறான்.

"அவ அடி செருப்பாலேங்கறாளா?"

"இல்லே... வெட்கத்தோட உங்க மாமனாரை... ஸாரி... அப்பாவை வந்து பாருங்கன்னு சொல்றா. போய்ப் பாக்கறான். அவ அப்பாவும் ரேஷன் கடையைவிட சிவில் சப்ளைஸ் மேலுன்னுட்டு ஓ.கே. சொல்றார். சுபம்... எப்படி?"

"நாசமாப் போச்சு... இதிலே பிரச்னை எங்கங்க இருக்கு?"

"என்ன இப்படிச் சொல்லிட்டே? நீ சொன்ன பாமாயில், சர்க்கரை, கெரசின் எல்லா பிரச்னையும் இருக்கு. லவ் இருக்கு. நாட் இருக்கு. பிராப்ளம் சால்வ் ஆகுது. தலைப்பு என்ன தெரியுமா? ரேஷன்ல போட்ட லவ்வு. எப்படி?"

"சத்தியமா வராது."

"ஆமாம்... திரும்பி வராது. பிரசுரமாயிடும்."

"பிரசுரமாகலே... ரேஷனுக்கு இனிமே நீங்க தான் போகணும். இல்லேன்னா தினமும் சர்க்கரையில்லா காப்பிதான். கண்டிப்பா சொல்லிட்டேன்."

அடுத்த மாதம்,

"எவன்டா அது... க்யூலே குறுக்காலே மாடாட்டம் பூர்றது. வெயில்ல நிக்கறவனெல்லாம் பார்த்தா மனுஷனா தெரியலையா?"

- ரேஷன் வரிசையில் நின்றபடி இரைந்து கொண்டிருந்தார் எழுத்தாளர் பொன்னாயிரம்.

"பொன்னாயிரம்னு ஒருத்தர் வாரத்துக்கு மூணு கதை அனுப்பி கழுத்தறுப்பாரே... கொஞ்சம் நாளா காணும் பார்த்தியா...?"

-விவரமறியாமல் பேசிக் கொண்டார்கள் பத்திரிகை ஆபீஸ் சப் எடிட்டர்கள்.


# PAY NO INCOME TAX UPTO Rs.1,82,000/-

## NSC, NSS, PPF, LIC, ULIP, JEEVAN SURAKSHA, UTI & OTHER MUTUAL FUND SCHEMES, 11%P.O. MIS, COMPANY DEPOSITS, MEDICLAIM & HOUSING LOANS

1) To get max. return under Sec. 88 investments with 20% I.T. rebate but without blocking your money for more than 2 years.
2) To work-out your Capital gains and get maximum return without payment of Income-Tax and Capital gains tax.
3) To get 100% tax exemption with more than 24% return.
4) To get better return through mutual funds & shares


## US-64
## JULY SPECIAL OFFER

Please fix appointment over phone (4850078 / 4850539) and meet us either at your place or at our offices.

**COLLECT FREE PAMPHLET**



SPN ENTERPRISES



**Investment consultants**

**West Mambalam Office:**
32, Govindan Road, West Mambalam, Chennai - 33.(Near Srinivasa Theatre)
Phone: 4850078, 4850539

**T. Nagar Office:**
23, Rameswaram Road, T. Nagar, Chennai - 17. (Near Ranganathan Street), Phone:4345101 & 4345263



# தேன் சிந்துதே வானம்!

மும்பைக்கு 'கமர்ஷியல் காபிடல்' என்று சும்மாவா பெயர் வைத்தார்கள்? எதை வைத்துக் கொண்டு பணம் பண்ணலாம் என்று மூளையைக் கசக்கிக் கொள்வதில் அவர்களுக்கு நிகர் அவர்களேதான்! பாருங்களேன்... இப்படி ஜூன் தொடங்கி செப்டெம்பர் வரையிலும் மழை கொட்டு கொட்டென்று கொட்டுகிறதே.. அதை வீணடிக்கலாமா என்று ஏகமாக விசனப்பட்டார்களா? பிறந்துவிட்டது அதற்கொரு வழி. ரெயின் டான்ஸ்!

கீழ்த்தட்டு மக்கள் எப்படியும் இந்தப் பருவத்தில் கட்டாய ரெயின் டான்ஸ் ஆடியே தீருவார்கள்– ஒழுகுகின்ற குடிசைக்குள் வேறு என்னதான் செய்வதாம்?– மேல் தட்டு மக்களுக்கு இது ஒரு வீக்-எண்ட் மேனியா; ஆனால் இந்த நடுத்தர வர்க்கத்தினரும் இப்போது மழை நடனப் பிரியர்களாக மாறி விட்டமைதான் இன்று, மூலைக்கு மூலை 'ரெயின் டான்ஸ்' பிரபலமாகி வருவதற்குக் காரணம்.

காட்கோபரிலுள்ள ஒரு பள்ளியில், நோட்டீஸ் போர்டிலேயே, 'இன்ன தேதிக்கு ரெயின் டான்ஸ்... இன்ன மியூசிக் பாண்ட் இசைக்கிறது.. தவறாமல் கலந்து கொள்ளத் திரளாக வாரீர்'' என்ற அறிவிப்பைப் பார்த்ததும்தான், இதன் வீச்சு எந்த அளவுக்குப் பரவியிருக்கிறது என்பது புரிந்தது. தினசரிகளைத் திறந்தால் ஒரே 'மன்சூன் மஸ்தி' (மழைக்கால விஷமங்கள்...?) 'மன்சூன் மாஜிக்' விளம்பரங்கள் தான். அதுவும் 'ஹாலிடே ரிஸார்ட்ஸ்' நடத்துபவர்களைக் கேட்கவே வேண்டாம். ''இலவச ரெயின்' டான்ஸ்'' என்ற கவர்ச்சி இருந்தால் போதும், கூட்டம் அலைமோதும்'' என்கிறார்கள். எல்லாம் ''ஃபாமிலி டான்ஸ்''தான். குடும்பத்துடன் வீக்-எண்டுக்கு பக்கத்திலிருக்கும் ரிஸார்ட்டுக்குச் செல்பவர்கள் கும்மாளமடிக்கப் புது யுக்திகள்!

அந்தக் காலத்து கதாநாயக, நாயகிகள் கூட மழையில் நனைந்து டூயட் பாடுவதற்குக் காசு வாங்கிக் கொண்டார்கள்; ஆனால் இன்றைய ஹீரோ ஹீரோயின்கள் காசு கொடுத்து, தங்களை ஈரப்படுத்திக் கொண்டு ஆடிப்பாடுகிறார்கள்!

அது சரி... ரெயின் டான்ஸ் என்று ஓஹோ என விளம்பரப் படுத்திவிட்டு மழையே வராமல் காலை வாரிவிட்டால்? அதெல்லாம் 'ரிஸ்க்' எடுக்க முடியுமா என்ன? அதனால் முன்னேற்பாடாக மழை பொழிய எல்லா சாதனங்களையும் தயாராக வைத்திருப்பார்கள். சினிமாவில் எப்படி செயற்கை இடி மின்னல் மழை ஏற்படுத்துகிறார்கள்? அதேபோலத்தான், வாட்டர் பம்ப் சொந்தக்காரர்கள், கட்டுமானத் தொழிலில் ஈடுபடுபவர்கள், இவர்களைக் கொண்டு சிரபுஞ்சி ஸ்டைலில் மழையை வரவழைக்கிறார்கள்.

ஒரு காலத்தில் மழைக்காலம் என்பது, மலை வாசஸ்தலங்களுக்கெல்லாம் ''லோ-ஸீஸன்'' அல்லது ''ஆஃப் ஸீஸன்!'' ஈ, காக்கை காண்பதரிதாக இருக்கும். இப்போது என்னவென்றால், மாதேரான், லோனாவாலா, கண்டிலா, மஹாபலேஷ்வரெல்லாம் தூறல் போட ஆரம்பித்த உடனேயே நிரம்பி வழிகின்றன! எல்லாம் ''மன்சூன் ஹங்காமா'' மகாத்மியம்தான்!

இப்படி மும்பையிலிருப்பவர்களை எல்லாம் மும்பைக்கு வெளியில் ஈர்த்தால் இங்கிருக்கும் டிஸ்கோக்கள், நைட் கிளப்புகளின் நிலைமை என்னாவது? அதனால் அவர்களும் போட்டி போட்டுக் கொண்டு ''ஸ்ப்ரின்க்ளர்''களின் உதவியுடன் மழை வரவழைக்கிறார்கள்.

எல்லாவற்றிலும் கூட்டம்! மும்பையிலேயே இருக்கும் ஜிம்கானா ஒன்று இந்த 'ரெயின் டான்சை' அறிவித்திருக்கிறது. 'சென்ற வருடம் ஆயிரம் ஜோடிகள் வந்தனர். இந்த வருடம் இரண்டு மடங்காக எதிர்பார்க்கிறோம்' என்கின்றனர் அமைப்பாளர்கள்.

ஆக... இந்த மழை பிஸினெஸ் பல ஆயிரம் கோடிகளைப் பார்க்கக் கூடிய பிஸினஸாக மாறிக் கொண்டு வருகிறது. ''ரொம்ப ஜாலியான பொழுது போக்கு இது; ஸ்பெஷலான ட்ரெஸ் வேண்டாம்! மேக்கப் வேண்டாம்! காஸ்ட்யூம், ஜுவல்லரி வேண்டாம்!'' என்கிறார்கள் மழை நடன ரசிகர்கள்.

ஹூம்... எதுவுமே வேண்டாம் என்று ஆகிவிட்டபின், 'ரெயின் டான்ஸ்' வேண்டும் என்று ஆகிவிட்டதில் அதிசயமென்ன இருக்கிறது?

— ஜெ.ஆர்.

மதிப்பு மிக்க வீட்டுமனை
சென்னைக்கு அருகில்
உங்கள் பட்ஜெட்டுக்கு மிக அருகில்

# ஸ்ரீ ரங்கா நகர்

DTCP அப்ரூவ்டு மனைகள் (904/90)

## திருவள்ளூர்

(ஹிந்துஸ்தான் மோட்டார் பேக்டரி அருகில்)

**சிறப்பு அம்சங்கள்**

• சென்னை சென்ட்ரலில் இருந்து 60 நிமிடம் • மாவட்ட தலைநகர் • தாராளமான பஸ் மற்றும் ரயில் வசதிகள் • நேர்த்தியான தார் ரோடு • உடனடியாக வீடு கட்டலாம், அருகிலேயே வீடுகள் • சுவையான மிருதியான நிலத்தடிநீர் • வேகமாக வளர்ச்சியடையும் இடம் • புகழ்பெற்ற வைணவத் திருத்தலம் • சுத்தமான பத்திரம் • நம்பகமான நிறுவனம் • 5 வருட மனை பாதுகாப்பு சேவை.

தவணை முறை உண்டு

சிறந்த வீட்டு ...
சென்...
MMDA அப்ரூ...

# சிந்து

சென்னை-ர்ம.

(மதுரவாயில் அடுத்து, சவீதா டெண்டல் காலேஜ் அருகில்)

**சிறப்பு அம்சங்கள்**

• உடனே வீடு கட்டலாம் / அருகில் வீடுகள் • கோயம்பேட்டிலிருந்து 10 நிமிட பயணம் • சுலபமான மூன்று வழிப் பாதைகள், கிண்டி செயிண்ட்தாமஸ் மவுண்ட் போரூர் 100 அடி சாலை, அரும்பாக்கம் கோயம்பேடு மதுரவாயில் 100 அடி சாலை / அம்பத்தூர் ஆவடி 60 அடி சாலை • சென்னை பெங்களூர் [NH4] தேசிய நெடுஞ்சாலை • கோயம்பேட்டில் அமைந்துவரும் பிரம்மாண்ட பஸ் நிலையம் • தாம்பரம்-வானகரம் புறவழிச் சாலை • மாநகரின் அனைத்து பகுதிகளுக்கும் தாராளமான பஸ் வசதி • மெடிக்கல், டெண்டல், இஞ்சினியரிங், கேட்டரிங், ஆர்ட்ஸ் கல்லூரிகள் மிக அருகில் • சுவையான / மிருதியான நிலத்தடிநீர் • சுத்தமான பத்திரம் / நம்பகமான நிறுவனம் • 5 வருடங்களுக்கு மனை பாதுகாப்பு சேவை.

தவணை மு...

இலவச வாகன வசதி : மனையை பார்வையிட தினமும் காலை 7.00 மணி, 11.00 மணி மற்றும் மாலை 3.00 மணி
போன் : 435 7721 / 31 / 61 / 81. ஃபேக்ஸ் : 4353183 செல்போன் : 98400 44018

# BLB Estates (P) Ltd.

S-3, "RAMANA FLATS", No.27, RATHNA NAGAR, Off : ANNA SALAI, TEYNAMPET, CHENNAI - 600 018.

வர்த்தகத்தில் நேர்மை; பணியில ...



ஸ்ரீ ராமஜெயம்

# SRI MEENAKSHI TRAVELS DELHI (REGD)

**5A / 77, W.E.A., Karol Bagh, New Delhi - 110 005.Phone: 5726891. Pager:9628-049922**

1. வைஷ்ணவி தேவி–ஜம்மு–ரகுநாத் மந்திர், அமிர்தசரஸ்–பொற்கோவில்–வாஹாபார்டர். 4 நாட்கள்–ரூ.1400/- புறப்படும் தேதி 14.8.2000.
2. சென்னை–டில்லி–பத்ரிநாத்–கேதார்நாத்–ஹரித்வார்–ரிஷிகேஷ்–டில்லி–சென்னை. 12நாட்கள்–ரூ.4,500/-
3. சென்னை–டில்லி–பத்ரிநாத்–ஹரித்வார்–ரிஷிகேஷ்–டில்லி–சென்னை–10நாட்கள்–ரூ.3,800/-
(டூர் எண் 2 & 3: புறப்படும் நாள்–செப்டெம்பர் 3, 24 மற்றும் அக்டோபர் 4.)
4. சென்னை–டில்லி–குருக்ஷேத்தரா–சிம்லா–குலு–மணாலி–ரோத்தங்பாஸ்–சண்டிகர்–அமிர்தசரஸ்–வாஹாபார்டர்–டில்லி–சென்னை. 10 நாட்கள் – ரூ.5,500/-புறப்படும் நாள்–20.9.2000.
5. சென்னை–டில்லி–ஜெய்ப்பூர்–புஷ்கர்–அஜ்மீர்–பதேபூர்சிகரி–ஆக்ரா–மதுரா–ஹரித்வார்–ரிஷிகேஷ்–குருக்ஷேத்திரம்–டில்லி–சென்னை. 9நாட்கள்–ரூ.3,750/- புறப்படும் நாள்–23.9.2000

---

**டூர் எண். 1 மட்டும் டெல்லியிலிருந்து**

டூர் எண். 2 முதல் 5 வரை சென்னையிலிருந்து 2–ம் வகுப்பு ரயில் கட்டணம், டெல்லியில் இருந்து வசதியான டிலக்ஸ் பஸ் (2X2) தென் இந்திய பிராமணர்களால் தயாரிக்கப்படும் காலை காபி, சுவையான டிபன் மற்றும் மதிய உணவு, இரவு சாப்பாடு, தங்குமிடம் உட்பட. மற்றும் எங்களது தினசரி, வார சுற்றுலாக்களான ஜெய்ப்பூர், ஆக்ரா, மதுரா, ஹரித்வார், ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதார்நாத், சிம்லா, குலு, மணாலி ஆகிய சுற்றுலாக்களுக்கு நேரிலோ தொலைபேசியிலோ தொடர்பு கொள்ளவும். குரூப்பாக வருபவர்களுக்கு அவர்களின் தேவைகளுக்கேற்ப தனியாக வசதி செய்து தரப்படும். மற்றும் கார், வேன், டாடா சுமோ, டிலக்ஸ் பஸ் ஆகியவற்றுக்கும் எங்களை அணுகவும். L.T.C. வசதி உண்டு.

---

FOR FURTHER DETAILS & ENQUIRIES PLEASE CONTACT THE ABOVE OR BELOW ADDRESS:

1. Vedavalli Srinivasan, Mylapore, Chennai - 4. Phone No. 4950530.
2. K. Govindan, Ullagaram, Chennai - 91. Phone No. 2421840.
3. Ravichandran, W.Mambalam, Chennai-33. Phone No. 4746481.
4. Kesavan, Thanjavur. Phone No. 04362-51306



கேட்டனர்.

அவனோ, 'இதை அணிந்து கொள்ளத்தான் மறைவான ஒரு இடத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன்' என்றான்.

ஜனகராஜ்

ஒரு துறவி இருந்தார்.

**ரெகுலர் ஜோக் எழுத்தாளர்களின் இடத்தை இவ்வாரம் சில நகைச்சுவை நடிகர்கள் பிடித்துக் கொண்டார்கள்!**



வெண்ணிற ஆடை மூர்த்தி

ஒரு சோகமான ஜோக் சொல்கிறேன். ரயில்வே டிராக் ஓரமிருந்த நெருக்கமான குடிசைப் பகுதியில் ஓர் இளைஞன் இருந்தான். விடா முயற்சியாலும், கடின உழைப்பாலும் பெரிய தொழில் அதிபராக உயர்ந்தான். பணம் வந்த பிறகு மகாபலிபுரம் கடற்கரைச் சாலையில் ஒரு பண்ணை வீடு வாங்கிக் கொண்டு அங்கே வசித்து வந்தான். ஆனால் அவன் பழசை மறக்காதவன். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தனது வெளிநாட்டுக் காரில் பழைய குடிசைக்குப் போவான் - தனது அப்பா அம்மாவைப் பார்ப்பதற்கு!


பாண்டு

ஒருவன்

வழிபாடுகள் முடிந்ததும், நேரே ஒரு மருத்துவமனைக்குச் செல்வார். அங்கு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும்

# ‘மங் கா...சி’ என்றால் என்ன அர்த்தம்?

கையில் தனது உடையை வைத்துக் கொண்டு அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தான். இதைப் பார்த்த சிலர், உடையை அணிந்து கொள்ளாமல் ஏன் மற்றவர்களுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்துகிறாய் எனக் கோபமாகக்



நோயாளிக்கு அவர் நலம் பெற வேண்டி மனமுருகப் பிரார்த்தனை செய்வார். இதைத் தனது வாழ் நாள் கடமையாகவே கொண்டிருந்தார். ஒருநாள் நேரே அரசு மருத்துவமனைக்குச் சென்றார். அங்கே விபத்தில் சிக்கிய ஒரு ஜப்பானியருக்கு உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்பட்டு மூக்கில் ஆக்ஸிஜன் குழாய் சொருகப்பட்டிருந்தது. அவர் முன் அமர்ந்து பிரார்த்தனை செய்தார்.

கண் மூடியிருந்த ஜப்பானியர் திடீரென விழித்து மங் தூ சி. மங் தூ சி. மங் தூ- சி. என மூன்று முறை கத்திவிட்டு இறந்து போனார்.

தனது பிரார்த்தனையின்போதே ஒருவர் இறந்துவிட்டதை எண்ணி வருந்தினார் அவர்.

ஆனால் ஜப்பானியர் இறக்கும் முன் மூன்று முறை கூறிய வாக்கியத்திற்கு அர்த்தம் என்ன என்று தெரிந்து கொள்ள ஜப்பானியத் தூதரகத்திற்கு சென்றார். அங்கிருந்த அதிகாரியிடம் 'மங் தூ- சி.' என்றால் என்ன என்று கேட்டார்.

"ஆக்ஸிஜன் டியூபை மிதிக்காதே" என்பது தான் அதற்குப் பொருள் என்று அதிகாரி சொன்னார்.

தாமு

ஒரு பெண் கோவிலுக்குப் போய்விட்டு மிகுந்த சோகத்துடன் வந்து கொண்டிருந்தாள். எதிரே வந்த அவளது தோழி "எங்கே போய்விட்டு வருகிறாய்?" என்று கேட்டாள். எனது கணவர் குடிப்பதை நிறுத்த வேண்டும் என்பதற்காக நானும் பல வழிகளில் முயற்சித்தேன். முடியவில்லை. கடைசியாகக் கடவுள்தான் ஒரே வழி என்று முருகன் ஆலயத்தில் அங்கப் பிரதட்சணம் செய்து விட்டு வருகிறேன் என்றாள்.

"அடக் கடவுளே, இப்போதுதான் உன் கணவர் முருகன் ஒயின்சில் புகுந்ததைப் பார்த்து விட்டு வருகிறேன்" என்றாள் தோழி அதிர்ச்சியுடன்.

எஸ்.வி.சேகர்

ஒரு தொண்டர் கேட்டார், 'தலைவருக்கு எந்த ஸ்டேஜில் மாலை போடக்கூடாது தெரியுமா?'

'தெரியவில்லையே?' என்றார் மற்றவர்.

'கோமா ஸ்டேஜில் போடவே கூடாது' என்றார் முதலாமவர்.

விவேக்

நிருபர் ஒன் நடிகையைப் பார்த்து நிருபர் கேட்டார்: "ஐந்து வருடத்திற்கு முன்பு நீங்க சினிமாவுக்கு அறிமுகமானபோது உங்க வயசு பதினெட்டுன்னு சொன்னீங்க. இப்போ எத்தனை வயசுன்னு சொல்ல முடியுமா?"

"நான் எப்போதும் வார்த்தை தவறியது கிடையாது. இன்னும் ஐந்து வருடம் கழித்துக் கேட்டாலும் ஒரே வார்த்தை, ஒரே சொல் தான்!"


தொகுப்பு: **ஜெயன்**

# நடக்குமென்பார் நடக்கும்!



**மேஷம் :** *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

உங்க திறமை பளிச்சிடும். எவ்வளவுதான் எதிர்ப்புகள் வந்தாலும் அதையெல்லாம் தாண்டி வெற்றி காண்பீங்க. பொருளாதாரம் திருப்தியா இருக்கும். பணம் பல வழியிலிருந்து வர வாய்ப்பிருக்கு. வீட்ல சுப காரியங்கள் நடக்க சந்தர்ப்பம் வரும். சில சாதனைகளையும் நீங்கள் புரிய வாய்ப்பிருக்கு. கணவன் மனைவி உறவு சீராக இருக்கும். வழக்கு விவகாரங்கள்ல நல்ல திருப்பம் ஏற்படும். கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு.




**ரிஷபம் :** *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

உங்க அழகு திடீர்னு கூடும். அடிக்கடி கண்ணாடி பார்ப்பீங்க. வீட்ல விசேஷம் நடக்கலாம். பொருளாதாரம் பிரச்னை இருக்காது. வருமானம் அதிகரிக்கும். புதிய ட்ரெஸ், பொருள்கள் வாங்க வாய்ப்பிருக்கு. நல்ல செய்தி ஒண்ணு வந்து சேரும். பயணத்துல பாதுகாப்பு அவசியம். பெண்கள் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவாங்க. கலைத்துறையினருக்கு வரவேற்பு கூடும். வீண்செலவைக் குறைங்க. ரியல் எஸ்டேட் பிசினஸ்ல எச்சரிக்கை அவசியம். எதிலேயும் நிதானமா செயல்படுங்க.



**மிதுனம் :** *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

இந்த வாரம் நீங்க ரொம்ப கவனமா இருக்கணும். சங்கடங்கள், குறுக்கீடுகள் வரலாம். நிதானம் ரொம்ப ரொம்ப அவசியம். உடல்நலத்துல கொஞ்சம் கண் வையுங்க. எந்தக் காரியத்துல ஈடுபட்டாலும் ஒருமுறைக்குப் பலமுறை திங்க் பண்ணி முடிவெடுங்க. வெளியில அலையாதீங்க. உஷ்ண சம்பந்தமான நோய்கள் வரலாம். புதியவங்ககிட்ட பேசும்போது எச்சரிக்கை அவசியம். வெளியூர் பயணத்தைத் தவிர்த்துடுங்க. கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கை அவசியம். கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் இருக்கு.



**கடகம் :** *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

உங்கள் திறமை, புத்திசாலித்தனம் வெளிப்படும். முக வசீகரம் கூடும். உழைப்பும் திறமையும் வீண் போகாது. பொருளாதார நிலையில பிரச்னை இல்லை. பெண்களுக்கு நல்ல சூழ்நிலை உருவாகும். கலைத்துறையைச் சேர்ந்தவங்க வளர்ச்சி காண்பாங்க. புதுசா ட்ரெஸ், நகைகள் வாங்க சான்ஸ் இருக்கு. வீண் அலைச்சல், செலவு ஏற்படும். கவனமா இருங்க. வீடு, மனை இந்த வகையில் எச்சரிக்கை அவசியம்.




**சிம்மம் :** *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

இதுவரை மனத்துக்குள்ளேயே இருந்த எண்ணங்கள் இப்ப நிறைவேறலாம். புதிய பதவி, பட்டம் தேடி வரும். புகழ், பாராட்டு, பஞ்சம் இருக்காது. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். மனசுல துணிவும் தன்னம்பிக்கையும் உண்டாகும். கோர்ட், வழக்குகள்ல நல்ல திருப்பம் ஏற்படலாம். கலைத் துறையில் உள்ளவங்க வரவேற்பைப் பெறுவாங்க. பண நடமாட்டத்துக்குப் பிரச்னை இல்லை. சின்னச் சின்ன பிரச்னைகள் ஏற்பட்டு விலகும். பயப்படாதீங்க.



**கன்னி :** *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

உங்க அறிவாற்றல், பேச்சாற்றல வெளிப்படும். புதிய பதவி பட்டம் தேடி வரும். பொருளாதார நிலையில பிரச்னை இல்லை. சிலருக்கு பிரமோஷன், ஊதிய உயர்வு கிடைக்க வாய்ப்பிருக்கு. சிலருக்குத் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்கும் சான்ஸ் இருக்கு. கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான சந்தர்ப்பம் வர இருக்கு. எதிரிங்க ஓடிப் போய்டுவாங்க. கொடுக்கல், வாங்கல்ல ஆதாயம் இருக்கு. வெளிநாட்ல இருந்து நல்ல செய்தி ஒண்ணு வரலாம்.



**துலாம் :** *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

சின்னச் சின்ன பிரச்னைகள் ஏற்படும். எதிலயும் எச்சரிக்கை அவசியம். எந்தக் காரியத்தை எடுத்தாலும் பலமுறை யோசிச்சு செயல்படுங்க. அலைச்சலைத் தவிர்த்துடுங்க. உடல் ஆரோக்கியத்துல கவனம் அவசியம். பண நடமாட்டத்துக்குப் பிரச்னை இல்லை. கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கை அவசியம். எதிலயும் அவசரம், பதற்றம் வேண்டாம். நிர்வாகத் துறையில உள்ளவங்க பொறுப்போடு செயல்படணும். சிலருக்கு வேண்டாத இடத்துக்கு டிரான்ஸ்பர் வரலாம்.



**விருச்சிகம் :** *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

வீட்ல மகிழ்ச்சி நிலவும். கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதற்கான சந்தர்ப்பம் வரும். பண நடமாட்டத்துக்குப் பிரச்னை இல்லை. திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்கு சான்ஸ் இருக்கு. சிலர் பதவி உயர்வு, ஊதிய உயர்வு, டிரான்ஸ்பர் பெறுவதற்கான சந்தர்ப்பம் வரும். வெளிநாட்டுத் தொடர்பால ஆதாயம் இருக்கு. சிலர் வெளிநாட்டுக்குப் போகிற வாய்ப்பைப் பெறலாம். எல்லார்ட்டயும் சந்தோஷமா பழகினா நிறைய நன்மை இருக்கு.




**மிதுன ராசிக்காரரான நடிகர் செந்திலுக்கு தொழில்ரீதில நல்ல அபிவிருத்தி இருக்காம்!**



**தனுசு :** *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

உங்க உழைப்புக்கும் திறமைக்குமான பலன் நிச்சயம் உண்டு. சோர்வுக்கு இடம் தராம உழையுங்க. கொடுக்கல், வாங்கல் வகையில் எச்சரிக்கை அவசியம். வீட்ல சின்னச் சின்னப் பிரச்னைகள் வரலாம். கவனமா பேசுங்க. தொழிலாளர்கள், விவசாயிங்க நிலை உயரும். உடல் நலத்துல கவனம் தேவை. ஹார்ட்பேஷன்டுகள் ஜாக்கிரதையா இருக்கணும். வீண் விவகாரங்கள்ல தலையிட வேண்டாம். பக்கத்து வீட்ல சண்டை போட்டா கண்டுக்காம போயிடுங்க. புதியவங்ககிட்ட பழகும்போது எச்சரிக்கை அவசியம்.



**மகரம் :** *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

எந்தக் காரியத்தை எடுத்தாலும் வெற்றி பெற்றிடுவீங்க. எதிர்ப்புகள் ஓடிப் போகும்... கோர்ட் வழக்கு விவகாரங்கள்ல நல்ல திருப்பம் வரும். அரசியல்வாதிகளுக்கு வரவேற்புக் கூடும். வியாபாரிகள் வளர்ச்சி காண்பாங்க. பணநடமாட்டம் 'ஓகோ'ன்னு இல்லாட்டாலும் சுமாரா இருக்கும். திடீர் அதிர்ஷ்டத்துக்கும் வாய்ப்பிருக்கு. எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களுக்கு வரவேற்புக் கூடும். வீட்ல சுப காரியம் நடக்கும். நல்ல செய்தி ஒண்ணு வந்து சேர வாய்ப்பிருக்கு. கணவன் மனைவி உறவில் சிறு சிறு பிரச்னை ஏற்படலாம். விட்டுக் கொடுத்துப் போறது நல்லது.



**கும்பம் :** *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

உங்க அழகு கூடும். மனசுல உற்சாகம் பீறிடும். திடீர் பார்ட்டி, டூர்னு சுத்தறதுக்கு சான்ஸ் இருக்கு. கலைத்துறையை சேர்ந்தவங்களுக்கு நல்ல முன்னேற்றம் இருக்கு. புதிய ட்ரெஸ், நகைகள், அலங்காரப் பொருள்கள் வாங்குவீங்க. பிற மொழிக்காரங்க உங்களுக்கு உதவ முன்வருவாங்க. பயணத்தால நல்ல பலன் உண்டு. ஏற்றுமதி இறக்குமதி பிசினஸ் பண்றவங்களுக்கு நல்ல லாபம் இருக்கு. வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. உஷ்ண சம்பந்தமான நோய்கள் வரலாம்.



**மீனம் :** *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

உங்க அறிவாற்றல் வெளிப்படும். வீட்ல சந்தோஷம் நிலவும். எதிர்ப்புகள் குறையும். கலைத்துறையைச் சேர்ந்தவங்க வெற்றி நடை போடுவாங்க. பெண்கள் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவாங்க. ஜாலியா டூர் போக சான்ஸ் இருக்கு. வெளிநாட்டலயிருந்து நல்ல செய்தி ஒண்ணு வரலாம். எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் துறைகளைச் சேர்ந்தவங்க நிலை உயரப் பெறுவாங்க. பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விஷயத்துல கொஞ்சம் எச்சரிக்கையா இருங்க.

## அக்னிசர்மா பக்கம்



# பேட்டி? ஊஹூம்!

அழகு நிலையம் ஒன்றைத் துவக்கி வைக்க சென்னை வந்திருந்தார் ஷில்பா ஷெட்டி. குஷி படத்தில் ஒரே ஒரு பாட்டுக்கு ஆட்டம் ஆடிக் கலக்கினாரே, சாட்சாத் அவரேதான்! உதடுகள் சுமார் ஒரு கிலோ மீட்டர் விரியச் சிரித்தாலும் உதிரும் சொற்களுக்கு செமை ரேஷன் போட்டு விடுகிறார். அன்று அவர் மொத்தம் பேசியதே இரண்டு திருக்குறள் சைஸுக்குத்தான்! பேட்டி என்று கேட்ட பத்திரிகையாளர்களுக்கு, "மும்பைக்கு வாருங்கள்" என்று பதில் சொன்னார். இந்த மாநகரப் பேருந்துகள் எங்கே மும்பை போகின்றன?

சென்னை நிகழ்ச்சிக்கென்று ஒன்னரை லகரம் சன்மானம் பேசி அழைத்து வந்தார்களாம். 'நோ பத்திரிகை பேட்டி' என்பதுதான் அவர் போட்ட ஒரே கண்டிஷனாம்!

ஆங்கில தினசரி முதல் தமிழ் வார இதழ்கள் வரை, பலரும் பேட்டிக்கு முயற்சி செய்தார்கள். பலன் பூஜ்ஜியம்தான். 'ஏன் இத்தனை முரண்டு பிடிக்கிறீர்கள்?' என்ற கேள்வியைக் கூட பேட்டியின் ஒரு அங்கம் என்று கருதினாரோ என்னவோ தெரியவில்லை. கடைசி வரை புத்தர் மாதிரியே இருந்து விட்டார்.

'பத்திரிகையாளர்' என்ற நெற்றிப் பட்டம் பயனளிக்காது என்று புரிந்ததும், நாம் ஒரு டிரிக் செய்தோம். படியிறங்கி வரும் போது எதிர் திசையிலிருந்து வந்து அப்போதுதான் முதல் தடவையாகப் பார்ப்பது போல, முகத்தில் பரவசம் காட்டி, (அதெல்லாம் கரெக்டா பண்ணிறலாம்!) கவனம் கவர்ந்து, அடுத்தக் கட்டத்துக்குப் போனோம்.

"குஷி படம் பார்த்தேன். உங்கள் டான்ஸ் சூப்பர்."

அழகான புன்னகைதான் பதில்.

"நீங்கள்தான் பிரமாதமான டான்ஸர் ஆயிற்றே? குஷி அனுபவம் எப்படியிருந்தது?"

"வெரி நைஸ். ஏற்கெனவே எனக்குத் தயாரிப்பாளர் ரத்னம் சாரை நன்றாகத் தெரியும். அவர் கேட்டார்.மறு பேச்சில்லாமல் ஒப்புக் கொண்டேன். கல்கத்தாவில் ஷூட்டிங். கடைசி நாள், ஊர் திரும்ப எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டோம். ஷூட்டிங்கையும் இன்னும் ஒரு நாள் நீட்டிக்க முடியாது. தவிர, இன்னும் மூனு மணி நேரத்தில் சூரிய வெளிச்சம் போய் விடும் என்கிற சூழ்நிலை.

டைரக்டர் சூர்யா, டான்ஸ் டைரக்டரைக் கூப்பிட்டு, என்னைத் தனியே ஆடவைத்து, எடுத்து, இணைக்க வேண்டும் என்று சொன்னார். ஒரு நிமிடம் படத்தில் இடம் பெறும் அளவுக்கு, டான்ஸ் அமைக்கச் சொன்னார். ஒரே ஷாட். பக்காவாக ரிகர்சல் பண்ணிப் பார்த்துவிட்டு, படம் பிடித்து முடித்தார்கள். ஒன்னரை மணி நேரத்தில் எல்லாம் ஓவர்! டைரக்டர் சூர்யாவின் புத்திசாலித் தனத்தையும், சுறுசுறுப்பையும் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனேன்."

"எப்போது உங்களைத் தமிழில் ஹீரோயினாகப் பார்க்கப் போகிறோம்?"

"நிறையப் பேர் கேட்கிறார்கள். (அதானே பார்த்தேன்!) கேரக்டர் பளிச்சென்று இருக்க வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறேன்."

"தமிழில் குறிப்பாக யார் டைரக்ஷனிலாவது நடிக்க விருப்பமா?"


"ஒரே ஒரு பாட்டுக்கு டான்ஸ் பண்ணின, டைரக்டர் சூர்யாவின் படத்தில் ஹீரோயினாக நடிக்க விரும்புகிறேன்."

உன்னதமான, உயர்ந்த விருப்பம். ததாஸ்து.

— **மௌலி**

படம் : **வெங்கடேஷ்**

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)




## "உஜாலாவின் உன்னத வெண்மை விஞ்ஞான ரீதியிலான சாதனை."

INSTA-WHITENING SYSTEM

**ஜோ**தி லேபின் ஆய்வுக் கூடத்தில் தொடர்ந்து நன்கு சோதிக்கப்பட்டு வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்ட உஜாலாவின் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டம் (I.W.S.)™ இது தண்ணீரில் உடனடியாகக் கரைவதோடு, துணிகளின் நுட்பமான நூலிழைகளிலும் ஆழ்ந்து ஊடுருவிவெண்மையின் வெளிச்சத்தை துணிகளில் உடனடியாய் வெளிக்கொணர்கிறது. துணிகள் மீண்டும் துவைக்கும்போது, அழுக்குடன் முழுவதும் வெளியே தள்ளப்பட்டு விடுகிறது. நாட்கள் பல ஆனாலும் துணிகளின் இயல்பான வண்ணம் மாறாமல் புதிது போலவே பாதுகாக்கிறது. ஸ்கின் இரிட்டேஷன்-ஓரல் டாக்சிசிட்டி சோதனைகளில் பாதுகாப்பானது என ஆதாரபூர்வமாக கண்டறியப்பட்ட தயாரிப்பு உஜாலா ஒன்றே.

**1983** முதல் அனேக கோடி உள்நாட்டு-வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு முழுதிருப்தியை உஜாலா வழங்கிக் கொண்டிருக்கிறது. பாரத நாடெங்கும் பல மாநிலங்களில் உள்ள ஜோதி லேபின் விஞ்ஞான தொழில் நுட்ப மேன்மை மூலம் கடும் தரக்கட்டுப்பாடு முறைகளால் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு உஜாலாவும் உங்களை அடைகிறது.

**வி**ஞ்ஞான ஆதாரமற்ற முறையில், இரசாயன நிறுவனங்கள் தயாரிக்கும், நூலிழைகளை பலவீனப்படுத்தும், வண்ணம் குறைக்கும் மூலப்பொருட்கள் ஏதும் இதில் இல்லை. தரங்குறைந்த, கலப்பட இரசாயனக் கலவைகள் உங்களின் துணிகளுக்கு சேதம் ஏற்படுத்த இடம் அளிக்காதீர்கள்.

உஜாலா என கேட்டு வாங்கும் போது விஞ்ஞானபூர்வமற்ற ஏதேனும் ஒரு போலி தயாரிப்பை நீங்கள் பெறவில்லை என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.




வெண்மையின் புதிய நிறம்

A product of Jyothy Laboratories Ltd.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka


# பாலின் நற்பண்புகள்.
# அத்துடன் பல அதிகம்.

தளிர்நடை பயிலும் உங்கள் செல்வமகன், இப்போது, வேகமாக வளர்ச்சி பெறும் மிக முக்கிய காலகட்டத்தில் அடியெடுத்து வைத்துள்ளான். ஆகவேதான் அவனுக்கு இப்போது தேவை ஸ்பெஷல் போஷாக்கு. பால் முக்கிய போஷாக்கை தந்தபோதிலும், வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் அத்தியாவசியமான **அயர்ன் மற்றும் குறிப்பிட்ட விட்டமின்களின் குறைபாடு அதிலுள்ளது**. அதோடு, பாலை கொதிக்க வைக்கும் பொழுது, அதிலுள்ள சத்துள்ள போஷாக்குகளை அது இழந்து விடுகிறது.

ஆகவேதான் நெஸ்லே இப்போது வழங்குகிறது, **க்ரோயிங் அப் மில்க்.** **இது 1 முதல் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்காகவே விசேஷவிதமாக தயாரிக்கப்பட்டுள்ளது.** இது பாலின் நற்பண்புகளோடு 13 அத்தியாவசிய விட்டமின்களின் சக்தியையும், கூடவே வலிமையூட்டுவதற்கு அயர்ன் மற்றும் ஜிங்க் சக்தியையும் கொண்டுள்ளது. அதோடு ஆரோக்கியமான பற்கள் மற்றும் வலுவான எலும்புகளுக்கும் தேவைப்படும் போதுமான கால்ஷியச் சத்தையும் இது அளிக்கிறது. இதிலுள்ள இயற்கை நற்குணங்கள் மற்றும் தேனின் அருமையான ருசியை உங்கள் குழந்தை வெகுவாய் விரும்புவான்.

ஆகவே உங்கள் குழந்தைக்கு நெஸ்லே க்ரோயிங் அப் மில்க் வழங்கும் நற்பண்புகளை அளித்து, அவன் ஆரோக்கியமாகவும் வலிமையாகவும் வளர்வதைப்பாருங்கள்.

